
கல்கி

KALKI 28.5.89 ரூ. 2.





NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
Rexona
தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா: உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு, மோகனப் புதுமணம்,
புது வடிவம், உடிமதாசை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னுன மென் பட்டு மேனி மெருகுக்கே.
தூய தேங்காயெண்ணெய் செறிந்த


நம்ப கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் மூட்டை முடிச்சோடு எங்க கிளம்பறாரு?
டில்லிக்குத்தான். வாய்க்காலை ஆழப்படுத்தறது பற்றிப் பிரதமரைக் கலந்தாலோசிக்கப் போறாராம்.
பாரத பிரதமரே
குப்பம்பட்டு
உங்க ஊர்ல என்னாங்க விசேஷம்...? ஒரே தடபுடலா இருக்கு....?
அதுவா.... பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்துல இந்த வருஷம் ஆறாவது வகுப்பு தொடங்கறாங்க. வகுப்பறைத் திறப்பு விழாவுக்குப் பிரதமர் வந்துக்கிட்டிருக்கார்...

கருத்து: என்.வி.ரமணி

அத்வானி சொன்ன திருடன் கதை!


• அத்வானி: கதை சொன்னார்....

நூறு வெங்காயம், நூறு செருப்படிகள்!

ஒரு திருடன் பிடிபட்டான். அரசன் அவனுக்கு தண்டனை கொடுத்தார். நூறு வெங்காயம் சாப்பிடு அல்லது நூறு செருப்படிகள் வாங்கிக் கொள் என்றார்.

திருடன் செருப்படிகளை விட வெங்காயம் சாப்பிடுவதே மேல் என்று தீர்மானித்தான். பத்து வெங்காயம் சாப்பிட்டிருப்பான். மேலும் சாப்பிட முடியவில்லை.

அரசனிடம் திருடன், தனக்குச் செருப்படிகளே தருமாறு வேண்டினான். இருபத்தைந்து செருப்படிகள் வாங்கியிருப்பான். அதற்கு மேல் தாங்க உடம்பில் வலு இல்லை. "அரசே! வெங்காயம் கொடுங்கள். சாப்பிடுகிறேன்" என்று கெஞ்சினான்.


இப்படியே, செருப்படி, வெங்காயம் என்று மாறி மாறி அவன் கேட்க, இறுதியில் நூறு வெங்காயமும் சாப்பிட்டான். நூறு செருப்படிகளும் வாங்கினான்!

மாநிலங்கள் அவையில் கதை சொன்னவர் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அத்வானி. இதில் வரும் மன்னர், இன்றைய மக்கள்தான். திருடன் யார், அத்வானி நோக்கில்? அதைக் கூறவும் வேண்டுமோ?

— பால்கி.

ஹாக்கியில் வீரர்; கிரிக்கெட்டில் மன்னர்!

செங்கல்பட்டு அருகே உள்ள ஒரு கிராமத்திலிருந்து குடுமி, நெற்றியில் பட்டை நாமம் சகிதமாகப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் பிழைப்பு தேடி சென்னைக்கு நடந்தே வந்து சேர்ந்தான். திருவல்லிக்கேணி


• எம். ஜே. கோபாலன்: எண்பது கண்டார்....

தங்கச் சாவி பெற்ற வாழப்பாடி!



பல வெளிநாடுகளுக்கு வாழப்பாடி ராமமூர்த்தி சென்றிருந்தாலும் ஜப்பான் அவருக்கு இன்னொரு தாய் நாடு போன்றது! அதற்குக் காரணமும் உண்டு. 1979 ல் இவர் அங்கு சென்றிருந்த போது கிராமத் தொழிலாளர்களுக்கு இவர் செய்துள்ள சேவையைப் பாராட்டி ஒசாகா நகர மேயர் ராமமூர்த்தியை அந்நகரின் சிறப்புக் குடிமகனாக ஏற்று அறிவித்தார். ஒசாகாவுக்கு அவர் 'விசா' இல்லாமல் வந்து போகலாம் என்று கூறித் "தங்கச் சாவி" பரிசளித்தார்!

கிராமப்புற மக்களுக்குப் பணியாற்றுவது என்பது, வாழப்பாடியின் மாணவப் பருவத்திலேயே தொடங்கி விட்டது. கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தல்களில் 1967ல் காங்கிரஸைச் சேர்ந்த மாணவர்கள் கணிசமாக வெற்றி பெற்றனர். அவர்களுள் ஒருவரான ராமமூர்த்தி, காங்கிரஸின் பத்து அம்சத் திட்டத்தைப் பட்டி தொட்டிகளில்

வட்டாரத்தில் தஞ்சமடைந்த அவன் தன் விடாமுயற்சியால் கிரிக்கெட், ஹாக்கி ஆகிய இரு ஆட்டங்களிலும் சிறந்து தேசிய அணிகளில் பங்கேற்கும் அளவுக்கு உயர்ந்தான். அவன் ஆட்டத் திறமையே அவனுக்கு பர்மாஷெல் கம்பெனியில் வேலை வாங்கித் தந்தது. அங்கும் ஆற்றலை உணர்த்திப் பதவியில் உயர்ந்து அதிகாரியானான். நாளடைவில் பத்மஸ்ரீ விருது கூடப் பெற்று விட்ட அந்த நபர் யார்? இப்போது எண்பது வயது பூர்த்தி ஆகியுள்ள எம்.ஜே. கோபாலன்.

அக்டோபரில் ஷார்ஜாவில் நடக்கவிருக்கும் கிரிக்கெட் ஆட்டங்களின் போது வசூல் தொகையில் கோபாலனுக்கு 35,000 டாலர் பரிசளித்துக் கௌரவிக்கத் தீர்மானமாகியிருக்கிறது. திறமை ஒரு புறம் இருக்க கோபாலனுக்கு ஹாக்கி, கிரிக்கெட் எதில் அதிக ஈடுபாடு? 1936 ல் பெர்லின் ஒலிம்பிக்ஸில் பங்கேற்க, ஹாக்கி, அணியில் சேர்ந்து சென்றிருந்தால் கோபாலனுக்குத் தங்க மெடல் கிடைத்திருக்கும். ஆனால் அதே காலகட்டத்தில் இங்கிலாந்தில் நடந்த கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவும் அழைப்பு வந்தது. கோபாலன், தயக்கமோ, யோசனையோ இன்றி இங்கிலாந்துபோகவே தீர்மானித்தார்!

— பி.என்.எஸ்.

தொப்பிக்குள் என்ன இருக்கிறது?

அராஃபத் முன்பு மாதிரி இல்லை. மாறி விட்டார். இஸ்ரேல் என்ற நாடே இருக்கலாகாது என்று ஒரு காலத்தில் சொல்லி வந்தவர், இப்போது இஸ்ரேலும் இருக்கட்டும். கூடவே எங்கள் பாலஸ்தீனமும் இருக்கட்டுமே என்று சொல்லுமளவுக்கு இறங்கி வந்திருக்கிறார்.



அராஃபத்: இதுவே வித்தை...

"தனிமனித பயங்கரவாதமானாலும் சரி; ஒரு கூட்டத்தின் பயங்கரவாதமானாலும் சரி; ஏன், ஒரு நாட்டின் பயங்கரவாதமானாலும் சரி; எதையும் நாங்கள் ஏற்கவில்லை!" என்று வெகு தெளிவாகச் சொல்லி விட்டார் அராஃபத்.

சில காலம் முன்பு, இவர் பெயர் தினசரிகளில் தினம் தினம் அடிபட்டது. காரணம்: நியூயார்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் பேச அமெரிக்கா இவருக்கு விசா மறுத்த சிறுமைத்தனமான காரியம்தான். அதற்காக ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபை கூடி இவரைப் பேச அழைத்தது. அவர் அங்கு பேசிய பின்பு அமெரிக்கா ஒரேயடியாகத் தழைந்து போய், 'சரி நாங்கள் பாலஸ்தீன விடுதலைப் போராட்டக் குழுவுடன் நேரடியாகப் பேசத் தயார்' என்று அறிவித்தது. இது அராஃபத்துக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

அராஃபத்துக்கு ஐம்பத்தொன்பது வயதாகிறது. இவருடைய அராபிய பாணி தலைப்பாகைக்குள் என்ன இருக்கிறது என்று பார்க்க ரொம்ப நாட்களாகப் பலருக்கு ஆசை. கடைசியில் ஒரு புகைப்பட நிபுணர் அதை அம்பலப்படுத்தி விட்டார் — முழு வழுக்கை!

— எஸ்.வி.என்.

பிரசாரம் செய்தார்.

மூன்று முறையாகத் தொடர்ந்து மக்களவை உறுப்பினராக இருக்கும் ராமமூர்த்தியிடம் ஒரு நல்ல குணம்: ஒரு கார்டு எழுதிப் போட்டால் உடனே இவரிடமிருந்து பதில் வரும்! டெல்லிக்கு வரும் நண்பர்கள், வாழப்பாடி வீட்டில் தங்கி விட, இவர் வேறு நண்பர்கள் இல்லத்தை நாடிச் சென்றதும் உண்டு! இவர் மனைவியோ ஒரே ஒரு முறைதான் டில்லி சென்றிருக்கிறார்! அப்போதும் கணவர் வீட்டில் தங்கமுடியாமல் உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறார்! மனைவி கலைமணி ஓர் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்.

பொன் விழா கொண்டாடும் வயதினரான ராமமூர்த்தி, விடுதலைப் போராட்டத்தின் போது சிறை புக முடியாது போனாலும், சுதந்திர பாரதத்தில் நிறையவே சிறைச்சாலையைக் கண்டிருக்கிறார்! 1954 ல் தேவிகுளம், பீர்மேடு பகுதி தமிழகத்துடன் இணைய வேண்டும் என்பதற்காக அறப் போராட்டம்; 1972 ல் திமுக அரசுக்கு எதிராக நடந்த விவசாயிகள் போராட்டம் ஆகியவற்றில் பங்கேற்றுச் சிறைவாசம் அனுபவித்தவர்.

வாழப்பாடியிடம் இல்லாத விஷயம் பந்தா. நண்பர்களிடம் இலகுவாகப் பழகுவார்.

இப்போது எம்.பி. சுப்பிரமணியம் போன்றோரைக் காங்கிரஸில் மீண்டும் சேர்க்கச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், பலத்த எதிர்ப்புக்கிடையே தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கும் வாழப்பாடி.

— ப்ரியன்

படம்: சுபா

நீங்கள் உண்பது சத்தான உணவா?

"ஏங்க! இது என்ன ஸ்வீட் கண்டு பிடிச்சீங்களா?"

"தெரியலையே அமுதா! ஆனா அற்புதமா இருக்கு. இன்னும் ஒரு ஸ்பூன் போடு!"

"உருளைக் கிழங்கு ஹல்வாங்க இது! நேத்துதான் லேடீஸ் கிளப்ல ராணி ராஜன் செய்து காண்பிச்சாங்க. ரொம்ப நல்லாருக்கே... உங்களுக்கும் ஸ்வீட் பிடிக்குமேன்னு செய்துட்டேன்....!"

— நிறுத்துங்கள் திருமதி அமுதா! நீங்கள் சர்க்கரையும் நெய்யும் சேர்த்துத் தயாரித்து, முந்திரி — திராட்சை தாளித்த அந்த உருளை ஹல்வா.... வயிற்றுக்குள் போய் என்ன பாடுபடுத்தும் என்று யோசித்தீர்களா? உருளைக் கிழங்கில் உள்ள மாவுச் சத்துடன் சர்க்கரையின் ஜவ்வும் சேரும் போது ஜீரணம் செய்வது கடினமாகி வாயுத் தொல்லை உண்டாகும். அதில் நீங்கள் ஆசையாய் ஊற்றிய கால் கிலோ நெய்யும், பொரித்துப் போட்ட முந்திரியும் சேர்ந்து, நாள் முழுக்க ஆபீஸ் இருக்கையில் உட்கார்ந்தபடியே கணக்கு எழுதும் உங்கள் கணவரின் இளந் தொந்தி மேலும் உப்ப உதவி செய்யும்...

அமுதாவைப் போல்தான் மனைவிமார்கள் பலரும் ஆசையாய், சுவையாய்க் கணவருக்காகச் சமைக்கிறார்கள். ஆனால் சமைக்கின்ற, சாப்பிடுகின்ற உணவில் உள்ள ஊட்டச் சத்து பற்றியோ அல்லது உடலின் ஜீரண சக்தி பற்றியோ யோசிப்பதில்லை. அதுவும் பண்டிகை நாட்களென்றால் பாயசம், சுவீட், அப்பளம், வடை என்று நிறைத் நிறைச் சாப்பிட்டு விட்டுக் குட்டித் தூக்கம் வேறு...!

ஏன்? உ.கி. ஹல்வாவில் சத்துக்கு என்ன குறைச்சல்...? உ. கிழங்கில் மாவுச் சத்தோடு சிறிது புரதமும் வைடமின்னும் இருப்பதாகச் சொல்கிறார்களே! நெய் உடம்புக்கு நல்லதுதானே — அதுவும் அசைவத்தின் வாடையே தெரியாத சுத்த சைவ உணவுப் பழக்கமுள்ளவர்களுக்கு அது அவசியத் தேவையாச்சே! நாம் என்ன தினமும் சர்க்கரையைக் கொட்டி ஸ்வீட் செய்து கொண்டிருக்கிறோமா என்ன? என்றைக்கோ ஒரு நாள்... என்ன ஆகி விடப் போகிறது?

எல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் இந்த உணவுப் பண்டங்களை எந்தக் கலவையில் எந்த அளவில் என்ன கால இடைவெளியில் சாப்பிடுகிறோம் என்பதைப் பொருத்துத்தான் அவற்றில் உள்ள



• தணிந்த விலையில்...

சத்துக்கள் நம் உடம்புக்குப் பயன் சேர்க்கும் என்கிறார்கள் இயற்கை வைத்திய நிபுணர்களும் சத்துணவு வல்லுனர்களும்.

உ.கி. ஹல்வா சாப்பிடுவதால் அன்று அரிசிச் சோறு உண்ணாமல் இருக்க முடியுமா? அத்துடன் நெய்யும் சாம்பாரும் சேராமல் இருக்குமா? பார்க்கப் போனால், "சாதம் சாப்பிட்டால்தான் ஹல்வா கிடைக்கும்" என்று குழந்தைகளை மிரட்டி வேறு வைக்கிறோம்! ஆக, வழக்கமான அரிசிச் சோறு, குழம்பு இத்தியாதியுடன் கூடுதலான சத்துக்களும் உடலுக்குள் சேர்கின்றன.



நாம் வழக்கமாக உண்ணும் பட்டை தீட்டிய அரிசிச் சோற்றிலேயே கொஞ்சம் நஞ்சமுள்ள வைட்டமின் பி சத்து நீக்கப்பட்டு, வெறும் மாவுச் சத்துத்தான் உள்ளது. இதை அதிகமாக உண்பதால் உடலுக்குச் சத்து சேர்வதில்லை என்பதோடு ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் உடலுக்குத் தீமையும் விளைவிக்கிறது என்று கண்டறிந்துள்ளார்கள். பட்டை தீட்டிய அரிசிக்குப் பதில் வைட்டமின் பி அடங்கிய கைக்குத்தல் அரிசியையோ சம்பா கோதுமையையோ சாதமாக வடித்துச் சாப்பிட வேண்டும். அதுவும் மொத்த உணவில், மூன்றில் ஒரு பங்கு சாதமாகவும் மீதி இரண்டு பங்கு காய்கறிகளாகவும் இருக்க வேண்டும். ஆனால் நம் உணவுப் பழக்கமோ இதற்கு நேர் மாறானது! நிறைய சாதமும் ஒரு கரண்டி காய்கறியும் சாப்பிடுகிறோம்.

காய்கறிகளிலும்கிழங்குகளைக் குறைத்து, பச்சைக் காய்களையும் கீரை வகைகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது அன்றாடம் வானொலி டீ.வி. போன்ற சாதனங்கள் மூலம் பரப்பப்படும் கருத்து என்றாலும் கீரையை ஆய்ந்து சமைப்பதற்குச் சோம்பல்பட்டுக் கொண்டு நாம் இதனைச் சேர்ப்பதில்லை. மிக அரிதாகவே கிடைக்கும் ஊட்டச் சத்துக்களான கால்ஷியம், ஐயோடின் மற்றும் தாது உப்புக்களைக் கீரைகளிலிருந்துதான் பெற முடியும்.

காய்கறிகளுடன் மிளகாய், மசாலா சேர்த்து, அரிசி மாவும் கடலை மாவும் தூவி, நிறைய எண்ணெய் ஊற்றி, சுய உருவோ, நிறமோ சுவையோ தெரியாமல் அடித்து விடுகிறோம். வாய்க்கு ருசியாகத்தான் இருக்கிறது. ஆனால் கொடுத்த காசுக்குத் துளிப் பயன் கிடையாது! இரும்புச் சட்டியில் போட்டு வதக்கினால் காய்கறிகளின் சத்து சமைக்கையிலேயே வெளியேறி விடும். பிரஷர் குக்கரில், அதிகம் தண்ணீர் ஊற்றாமல் வேக வைத்துச் (அதிகம் குழைய விடாமல் பதமாக வேக வைக்க வேண்டும்) சாப்பிடுவதே நல்லது. வெள்ளரிக்காய், காரட், கோஸ், பீட்ரூட் போன்றவற்றைப் பச்சையாகவே சாப்பிட வேண்டும்.

புரதச் சத்து உடலுக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால் வளரும் பருவத்தைத் தாண்டியவர்களுக்கும் உடல் உழைப்பில்



மத்திய அரசின் உணவு மற்றும் ஊட்டச் சத்து வாரியம் ஒன்று இருக்கிறது. குறைந்த செலவில் சத்துள்ள உணவு தயாரிக்கும் வழிகளை இவ் வாரியம் மக்களிடையே பரப்பி வருகிறது (குறிப்பாக எழுதப் படிக்கத் தெரியாத மக்களிடையே). முருங்கைக் கீரைக் காப்பியை இவ் வாரியம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. காப்பி டிகாஷனுக்குப் பதில் முருங்கைக் கீரையைக் கொதிக்க வைத்துப் பால் சேர்த்துக் குடிக்கலாம் என்கிறார்கள். உடல் ஆரோக்கியம் பேணுமாம். வீட்டிற்கு ஒரு முருங்கை மரமும் பப்பாளி மரமும் இருந்தால் அவற்றிலிருந்து நல்ல சத்துணவு பெறலாம் என்று சிபாரிசு செய்துள்ளது இவ் வாரியம். இதன் நடமாடும் அலுவலகங்கள் சிற்றூர்களுக்கெல்லாம் சென்று வருகின்றன.

— கௌசல்யா.

ஈடுபடாதவர்களுக்கும் மிகக் குறைவான அளவு புரதமே போதுமானது. அசைவம் உண்பவர்களுக்கு இறைச்சி, முட்டை மூலமும் சைவ உணவுக்காரர்களுக்குப் பருப்பு வகைகள் மூலமும் பாலிலிருந்தும் கிடைக்கிறது புரதம். ஆனால் இவை யாவுமே உடலுழைப்பில் ஈடுபடாதோர் ஜீரணிப்பதற்கு மிகக் கடினமானவை என்கிறார்கள் வல்லுனர்கள். சிறிதளவே பருப்பு சாப்பிட்டாலும் ஒவ்வொரு நாளும் அதனை உட்கொள்வதால் ஜீரணம் பாதிக்கப்படுகிறது. இட்லி, தோசையில் உளுந்தும் அரிசியும் சேர்ந்திருப்பதால் அரிசி ஜீரணமான பிறகும் வயிற்றினுள் உளுந்து ஜீரணமாகிக் கொண்டு இருக்கிறது! இரண்டும் ஜீரணமாவதற்கான கால இடைவெளியில் வயிற்றினுள் வாயு பரவி அஜீரணத்தையும் வயிற்றுக் கோளாறையும் ஏற்படுத்துகிறது!

பின் புரதச் சத்தை எப்படித்தான் பெறுவது?

விதையானது, முளை கட்டும் பருவத்தில், ஒரு செடிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் அது எளிதில் உறிஞ்சிக் கொள்ளக்கூடிய வடிவத்தில் வழங்குகிறது. எனவே இந்தக் கட்டத்தில் உள்ள விதைகளைச் (முளை கட்டிய பயறு வகைகளைச்) சாப்பிட்டால் எளிதில் ஜீரணிக்கக்கூடிய வடிவில் புரதமும் மற்ற ஊட்டச் சத்துக்களும் நம் உடலுக்குச் சேர்கின்றன.

என்னதான் சத்தான உணவுகளைச் சாப்பிட்டாலும் காப்பி சாப்பிடுவதன் மூலம் அவற்றின் பயனையெல்லாம் முறித்து விட முடியும்! காப்பியுடன் சர்க்கரையும் சேரும் போது உடலில் உள்ள கால்ஷியம் சத்தை முறித்து போகச் செய்கிறது. மீண்டும் கால்ஷியத்தை உடலுக்குள் கொண்டு வருவது மிகவும் கடினம்.

காப்பிக்குப் பதில், முளை கட்டிய கேழ்வரகை மாவாக அரைத்து, கஞ்சியாகக் காய்ச்சி, துளி தேனோ, பாலோ விட்டுச் சாப்பிடலாம். சர்க்கரைச் சத்து உடலில் சேர, பழ வகைகளைச் சாப்பிடலாம்.

காயும் பழமும் தேனும் வாங்கிச் சாப்பிடக் கட்டுப்படியாகுமா? காப்பி, அரிசி, எண்ணெய், நெய், சர்க்கரை — இந்தச் செலவுகளைக் குறைத்து உண்மையிலேயே சத்தான உணவுகளுக்குச் செலவழித்தால் நிச்சயமாகச் சமாளிக்கலாம். மேலும் டாக்டர் பில்லும் மருந்து பில்லும் டானிக் செலவும் குறைவதால் கணிசமாக மிச்சம் பிடிக்கக் கூட முடியும்!

எல்லாம் சரி, கேழ்வரகுக் கஞ்சியும் 1/3 பங்கு சோறும் 2/3 பங்கு காய்கறியும் சாப்பிட்டால் வயிறு நிறையுமா? என்பவர்களுக்கு இயற்கை மருத்துவம் மற்றும் சத்துணவு வல்லுனர்களின் பதில் இதுதான்:

நம் வயிறு எலாஸ்டிக் தன்மை உடைய ஒரு பை. திணிக்கத் திணிக்க அது விரிந்து கொடுக்கும். விரிய விரிய அதிகம் கேட்கும்! ஆனால் இரண்டு வேளை ஆரோக்கியமான திட உணவும் இடையே இரண்டு அல்லது மூன்று முறை நீர் ஆகாரமும் உடலுக்குப் போதுமானவையே. அதுவும் பசி எடுக்க ஆரம்பித்து, அரை மணி நேரம் கழித்து உண்பதே மிகவும் சிறந்தது. அந்தச் சமயத்தில்தான் உடலின் ஜீரண சக்தி உச்ச கட்டத்தில் இருக்கும்.

சுவைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வரும் நாம், சத்துக்கு முதலிடம் அளித்தால் உடல், ஊட்டச் சத்துக்களைச் சிரமமின்றிப் பெறும். சத்துக்கள் கிடைப்பதால் பெறும் ஆரோக்கியம் ஒருபுறமிருக்கக் கடினமான பொருள்களை ஜீரணிப்பதில் வீண் விரயமாகும் சக்தி சேமிக்கப்படும்; அதனால் உடல் உறுப்புக்களுக்கு ஏற்படும் தேய்மானமும் குறையும். உடல், நச்சுப் பொருள்களின் உறைவிடமாக இல்லாமல், ஆரோக்கியத்தின் உறைவிடமாக மாறும்.

— எஸ். ஆர்.

நோயாளி: என்னைச் சோதித்துப் பார்த்த டாக்டர் ஏன் கண்ணீர் விடறார்?

நர்ஸ்: பேஷன்ட்டைப் பார்த்து ரொம்ப நாளாயிட்டதால வந்த ஆனந்தக் கண்ணீர் அது...!

— சீர்காழி ஸ்ரீராம்.



மேலட்டை வண்ணப்படம், படங்கள்:

சுபா சுந்தரம்

அட்டையில் (நடிப்பு): கல்யாண ராமன், ராதா கல்யாண ராமன்.

புத்திசாலித்தனமாகச் சாப்பிடுங்கள்!

"எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால், புத்திசாலித்தனமாகச் சாப்பிடுங்கள். அதோடு தவறாமல் உடற்பயிற்சியும் செய்தால் ஆரோக்கியத்துக்குக் குறைவே இராது'' என்கிறார் சோழா ஹோட்டலில் உள்ள ஹெல்த் கிளப்பை நடத்தி வரும் உடற்பயிற்சி நிபுணர் ஜே. வி. ஜான்.

''புத்திசாலித்தனமாகச் சாப்பிடுவதென்றால்....?'' — கேட்டோம்.

''எதையும் அளவாகச் சாப்பிடுங்கள். அரை வயிறு அல்லது முக்கால் வயிறு நிரம்பியதும் நிறுத்தி விடுங்கள். உணவின் அளவோடு அதில் உள்ள சத்தின் அளவையும் மறக்காமல் இருங்கள். கொழுப்போ, சர்க்கரையோ அதிகமாக உள்ள உணவை ஒரு வேளை சாப்பிட்டால், அடுத்த வேளை அந்தச் சத்துக்கள் அடங்கிய பண்டங்களை அறவே ஒதுக்கி விடுங்கள்'' என்கிறார் ஜான்.



* ஜான்

எந்தெந்த வேளையில் என்னென்ன சாப்பிட வேண்டும், என்ன அளவு சாப்பிட வேண்டும் என்று ஓர் அட்டவணை போட்டு, அத்துடன் ஓர் உடற்பயிற்சித் திட்டத்தையும் தங்கள் உறுப்பினர்களுக்கு வகுத்துத் தருகிறார்கள் சோழா ஹெல்த் கிளப்பில்.

ஏ.சி. வசதியில் உடற்பயிற்சி செய்யப் பலவிதமான உபகரணங்கள். வீடியோ திரையில் இசைக்கு ஏற்பப் பயிற்சியாளர் உடற்பயிற்சி செய்ய, அதைப் பார்த்தபடி நாமும் குனிந்து நிமிர்ந்து, குதித்து, கவிழ்ந்து உடலை வளைக்கலாம். இப்படி பல வசதிகளைக் கொண்டிருக்கிறது ஹெல்த் கிளப்.

''உடற்பயிற்சி தவிர, மசாஜ் ஸ்டீம் பாத், சுவானா போன்ற வசதிகளும் எங்களிடம் உண்டு'' என்கிறார் ஜான். ''உடம்பை மசாஜ் செய்யும் போது ரத்த ஓட்டம் இதயத்தை நோக்கிப் பாயும் வண்ணம் மேல் நோக்கித் தேய்ப்போம். இதனால் ரத்தத்தில் உள்ள நச்சுப் பொருள்கள் விரைவில் வெளியேற்றப்படுகின்றன.

''அதே போல் ஸ்டீம் பாத் எடுத்துக் கொள்ளும் போது, வெப்பமான நீராவி உடல் முழுதும் பட்டு, வியர்வைத் துளைகளை விரிவடையச் செய்து அழுக்கையும் நச்சுப் பொருள்களையும் வியர்வை மூலம் வெளியேற்றும்.

''சுவானா பாத் என்பது ஈரப்பதம் இல்லாத காய்ந்த வெப்பத்தில் சிறிது நேரம் காய்வது. இதற்கென்று தனியே கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையில் ஓர் அறை உண்டு. இதில் சில நிமிடங்கள் இருந்து விட்டு வெளியே வந்தால் இரத்தக் குழாய்கள் வெப்பத்தால் விரிவடைந்திருக்கும். உடனே குளிர்ந்த நீரில் ஷவர் பாத் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது விரிவடைந்த குழாய்கள் மீண்டும் சுருங்கி இரத்தத்தை வேகமாய் உடலுக்குள் பாயச் செய்யும். இரத்த ஓட்டம் சீராகப் பரவுவதால் ஆரோக்கியம் ஏற்படும் என்பதோடு நச்சுக் கழிவுகளும் வேகமாய் வெளியேறும்.

''இயற்கை வாழ்க்கை வாழாமல் செயற்கைச் சூழலில் (ஏ.சி. அறைகள்) சதா டென்ஷனில் வாழும் பெரிய அதிகாரிகளுக்கு ஏற்றது எங்கள் கிளப்.

''ஹெல்த் கிளப் உறுப்பினராக ஏகப்பட்டது செலவாகும். செலவில்லாமல் செய்யக்கூடிய சிறப்பான உடற்பயிற்சி நடப்பது தான். முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் தினமும் வயிற்றை நான்கைந்து முறை உள்ளுக்கு இழுத்துப் பிறகு தளர்த்தி விட்டால் மிகவும் நல்லது.''



* சோழா ஹெல்த் கிளப்பில்....



இதர எல்லா ஹேர் டைகளையும
சேர்த்தாலும் அவற்றைவிட
ஏராளமானமக்கள் உபயோகிப்பது
கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர் டை
அவற்றிற்கான 3 சிறந்த காரணங்கள்
Godrej
SELF-SPREADING PERMANENT HAIR DYE
1
2
3
கோத்ரெஜ் ® வழங்கும் தானே-பரவும் பெர்மனென்ட் ஹேர் டை.
CLARION-BGS-50/173 TML

மாணவர்கள் எழுதிய பாடப் புத்தகம்!

•• மாமியாரின் கொடுமை தாங்காது அவளைக் கொன்று விடத் திட்டமிட்டாள். மருமகள் பேபி தாயி.

மாமியார் அக்கா தாயிக்கு டீயில் விஷம் கலந்து கொடுத்தாள். ஆனால் அதிர்ச்சி தான் காத்திருந்தது.

மாமியார் வாந்தி எடுத்துப் பேந்தப் பேந்த முழித்தாளே தவிர சாகவில்லை. மருமகள் பேபிதாயிக்குப் பயம் பிடித்துக் கொண்டது. ஏதேது இவர் பிழைத்துக் கொண்டால்.... நம் சதி வெளியே தெரிந்து விட்டால்...?

மாமியாருக்கு உபயோகித்தது போக மீதி யிருந்த விஷத்தைக் குடித்து விட்டாள் பேபி தாயி.

மருமகள் உடனே இறந்துவிட்டாள். மாமி யார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு உடம்பு குணமாகி வீடு திரும்பி விட்டாள்!

•• பம்பாய் நகர கட்டடங்களின் சுவர் களின் மீது நோட்டீஸ் ஒட்டக்கூடாது எழுதக் கூடாது என்பதற்காக பம்பாய் நகர ஷெரீப் நானா சூடாசம்மா ஆரம்பித்துள்ள இயக்கம் தான் 'வெள்ளையடிப்பு!'

இதன்படி நகரில் சுமார் ஐம்பது கி. மீ. தூரம் இதுவரை வெள்ளையடிக்கப்பட் டுள்ளது!

இந்தத் திட்டத்திற்கு உதவுமுகமாய் நிர்மல் நிகேதன் போன்ற சில பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களே வெள்ளையடித் துள்ளனர்.

ஷெரீப், ''நகரின் சுவர்களில் போஸ்டர் கள் ஒட்டுபவர்களுக்கு ரூ 3000/— முதல் ரூ 5000/— வரை அபராதம் விதிக்கும்படி மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

•• ஒரே நாளில் அதிக கண் அறுவை சிகிச்சை அளித்தவர் என்ற வகையில் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார் டாக்டர். எம்.ஸி. மோதி.

அவர் ஒரு நாளில் 833 கண் அறுவை-சிகிச்சைகளைச் செய்துள்ளார்.

1956 ல் பத்மஸ்ரீயும், 1968 ல் பத்ம பூஷனும் பெற்றுள்ள இவர் நடமாடும் இலவச கண் சிகிச்சை ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார். வயது 72.

சிறு வயதில் மண்ணெண்ணெய், உப்பு, நெய் முதலியவற்றை ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டு விற்றுக் காசு சம்பாதித் துப் படித்தவர் டாக்டர் மோதி.

•• பம்பாயில் சமீபத்தில் மாணவர்களுக் காக மாணவர்களே எழுதிய புத்தகம் வெளி யிடப்பட்டது.

அது கம்ப்யூட்டர் பற்றிய நூல்.

இருபது வயதான சஞ்சய் சோனி, பத் தொன்பது வயதான விநாயக் அகர்வால் ஆகிய மாணவர்கள் தான் அக்காரியத்தைச் செய்தவர்கள். ஒருவர் பி.காம் முடித்து விட்டார். ஒருவர் பி.காம். இறுதி ஆண்டில் இருக்கிறார். 318 பக்கங்களைக் கொண்ட புத்தகம்.


எங்கள் நண்பர்கள் இந்தசப்ஜக்டில்சிரமப் படுவதைக் கண்டதால் நாங்கள் சுலபமாகப் புரிகிற மாதிரி எழுத முடிவு செய்தோம்'' என்கிறார்கள் இம்மாணவர்கள்.


•• சமீபத்தில் பம்பாய் மாநகராட்சியின் அரங்கை இ.காங். ஐச் சேர்ந்த இளைஞர் அணியினர் கைப்பற்றி சற்று நேரம் ஒரு நகல் மாநகராட்சி கூட்டத்தை நடத்தினர்.


மாநகராட்சி எப்படி நடத்தப் பட வேண் டும் என்று எடுத்துக் காட்டுவது நோக்க மாம். சிவசேனை, மாநகராட்சியின் நட வடிக்கைகளைச் சிறந்த முறையில் நடத்தத் தவறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டத் தானாம். 115 ஆண்டுகளாக நடைபெற்று வரும் பம்பாய் மாநகராட்சியில் இம்மாதிரி இதுவரை நடந்ததில்லை.

கைப்பற்றியவர்கள் தாமாகவே ஒரு மேயரைத் தேர்ந்தெடுத்து, அவரை மேயர் ஆசனத்தில் அமரச் செய்து, சமீபத்தில் சிவ சேனை பெரும்பான்மை பலத்துடன் பிர கடனப்படுத்திய சில தீர்மானங்களை மாற்றி யமைத்தனர்!

— பால்கி.






கோர்பசேவ்
டெங்
சீன மாணவர் கிளர்ச்சி


பிரேமதாச
இலங்கை அரசு வாழ்க!
இந்தியப் படை ஒழிக!


முதல்வர் இல்லம்
தமிழக மேலவை மத்திய அரசு ஒப்புதல்



கல்கி

1989 மே 28
மலர் 47 இதழ் 43
சுக்ல வைகாசி 15



வறட்சி நிலைக்கு நிரந்தரத் தீர்வு

தமிழகத்தின் வறட்சி நிலைமையை ஆராய, மத்திய அரசின் சார்பில் பார்வையாளர்கள் வந்து போயிருக்கிறார்கள். உழைப்பாளர்களுக்குத் தரப்படும் அரிசியின் தரம் மட்டமாக இருப்பதை ஓரிடத்தில் கவனித்துக் குறை கூறியும் இருக்கிறார்கள். இப்படி கடமையைச் செய்தவர்கள், மாநில அரசு கேட்டிருக்கும் உதவித் தொகையைக் குறைக்காமல் மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்து, தங்கள் கடமையைப் பூர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

ஏனெனில், தமிழக அரசு கேட்டிருக்கும் தொகை அதிகமல்ல. கூடுதலாகக் கேட்டால்தான் ஒன்றுக்குப் பாதியாவது கிடைக்கும் என்ற நோக்கில் செயல்படாமல், மத்திய அரசின் பெருந்தன்மையில் நம்பிக்கை வைத்து, சரியான அளவில் தேவையைக் கணித்து உதவித் தொகையைக் கேட்டிருக்கிறது தமிழக அரசு.

தமிழக முதல்வரும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடச் சென்று, கடும் வெய்யிலில் நின்று, உழைப்பாளர்களுடன் உறவாடியிருக்கிறார். சமீப காலமாகத் தமிழகம் கண்டிராத அளவில் வறட்சி நிலவுவதை உணர்ந்துமிருக்கிறார். மத்திய அரசின் உதவி வரும் வரை காத்திராமல் தமிழக அரசு ஏற்கெனவே நிவாரணப் பணிகளைத் தொடங்கி நடத்தி வருகிறது. வறட்சி நிவாரணப் பணி என்பது பெரும்பாலும் ஏரி குளங்களை ஆழப்படுத்துதல், சாலை போடுதல் போன்றவைதான். இதற்கு மக்களிடம் வேலை வாங்கிக் கொண்டு, அவர்களுக்குப் பகுதி அளவு கூலி ரூபாயாகவும் பகுதி அளவு தானியமுமாக வழங்கப்படுகிறது. ஆழ் கிணறுகள் தோண்டுவதும் ஒரு பணி. இவற்றுக்கெல்லாம் செலவிடப்படும் தொகை, மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய அளவில் போய்ச் சேருவதில்லை என்பதும், இடையில் காண்ட்ராக்ட் வழங்குவதில் பல தில்லுமுல்லுகள் நடந்து, அதிகாரிகளும் கட்சிக்காரர்களும் பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறார்கள் என்பதும் நீண்ட காலமாகவே இருந்து வரும் குறை. இந்த ஆண்டேனும் இத்தகைய புகார்கள் எழாமல் இருந்தால், தி. மு. க. அரசின் விழிப்புணர்ச்சியைப் பாராட்டி மகிழ நமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ஆண்டுதோறும் வறட்சி, அதற்கு நிவாரணப் பணி என்பது வாடிக்கையாகி விட்டது. இந்த நிலைக்கு முடிவு கட்டி, நிரந்தரப் பரிகாரம் காண முயற்சி செய்ய வேண்டும். 'பருவ மழை பொய்ப்பதாலும் கர்நாடகா அரசு காவிரியில் நீர் விட மறுப்பதாலும் ஏற்படும் வறட்சிக்கு எப்படி நிரந்தரப் பரிகாரம் காண்பது?' என்று கேட்டுக் கொண்டிருக்காமல் புதிதாக அமைந்திருக்கும் திட்டக் கமிஷனை இது பற்றியும் சிந்திக்குமாறு கோரலாம். கோடிக்கணக்கில் செலவாகும் மக்களின் வரிப் பணத்தை மிச்சம் பிடிக்க வழியுண்டா என்று யோசிக்கலாம்.

கடந்த காலத்தில் பல தவறுகள் நடந்திருக்கின்றன. தமிழகத்தில் எத்தனை ஏரிகள், குளம் — குட்டைகள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகி, கட்டிடங்கள் உருவாகியிருக்கின்றன என்று கணக்குப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கும். பெய்கின்ற சிறிதளவு மழையும் தேங்க இடமின்றி வடிந்து போனால், வறட்சி உக்கிரமடையவே செய்யும். கோடையில் போடப்படும் குழாய்க் கிணறுகள் மழைக் காலத்தில் மாயமாய் மறைந்து போகின்றன! இதற்கு இடம் தராமல் உள்ளாட்சி அமைப்புக்களை இவற்றுக்குப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

மழைக் காலத்தில் பெய்யும் நீரை எப்படி சேமிக்கலாம்; நிலத்தடி நீர் வளம் பெருக என்ன செய்யலாம் என்பதற்கான யோசனைகளை ஆதிசேஷய்யா, குழந்தைசாமி போன்ற அறிஞர்கள் உள்ளடங்கிய திட்டக் கமிஷன், அரசுக்கு எடுத்துக் கூற வேண்டும். உதாரணமாக, மழைக் காலத்தில் கூவம், அடையாறு ஆகிய நதிகளில் ஓடி, கடலில் கலக்கும் நீரைச் சேமிக்க முடிந்தாலே பல மாதங்களுக்குச் சென்னை நகரின் குடிநீர் பிரச்னையைச் சமாளிக்கலாம் என்று ஓர் அறிஞர் எடுத்துக் காட்டுகிறார்.

நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டமான கங்கை — காவிரி இணைப்புக்கு இன்றே பிள்ளையார் சுழி போட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, இன்றைய நோக்கு, குறுகிய கால நோக்கு, நீண்ட கால நோக்கு என்று மும்முனைகளில் பிரச்னையைத் தாக்க வேண்டியது அவசியம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

டி.வி. சாவிக்குச்

பேரனின் யோசனை

●● எங்கள் நாலு வயதுப் பேரன் ப்ரேம், மாலை ஐந்து மணியளவில் விளையாடப் போனவன் எட்டு மணியாகியும் வீடு திரும்பவில்லை. என் பிள்ளையும், கணவரும் அவனைப் பல இடங்களில் தேடியும் காணாமல் போலீஸில் தெரிவிக்கச் சென்றனர். மணி ஒன்பதும் ஆகி விட்டது. அப்போது படுக்கையறையில் ஸ்டூலின் மேல் சுருட்டி அடுக்கி இருந்த மெத்தைச் சுருள் மெல்ல அசைந்தது. ஓடிப் போய்ப் பார்த்தால் அதனுள் குறுகிப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான் ப்ரேம். அவனை எழுப்பிச் சாப்பிடச் செய்து மெல்லக் கேட்டால்... "நான் காணாமல் போனால் என் போட்டோவை டீ.வி.யிலே கொடுப்பீங்க! அதுக்குத்தான் நான் ஒளிந்துக்கிட்டேன்" என்றானே, பார்க்கலாம்! எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை!

— விசாலம் பத்மநாபன், காகிதபுரம்.

காவஸ்கருக்கு அறுபது!

●● ஒரு விசேஷத்திற்காகச் சென்னையிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தோம். பகலுணவு முடிந்து, அப்போது சென்னையில் நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் மாட்சை டீ.வி.யில் எல்லோருமாகச் சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

அந்த வீட்டு அம்மாள், ஒழிந்தபோதெல்லாம் வந்து எங்களோடு டீ.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்தவர், கவாஸ்கரைப் பார்த்து, "இவரைப் பார்த்தா அறுபது வயசானா மாதிரியே தெரியலையே!" என்று திடீரென்று கூறவும், எங்களுக்கெல்லாம் திகைப்பு! "யார் இவருக்கு அறுபது வயசாயிடுச்சுன்னாங்க?" என்று நான் கேட்க, அந்த அம்மாள் "பின்னே இவர் ரிடையராகப் போறதா பேப்பர்ல போட்டிருந்ததே?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார்! முதலில் சிரித்தோம். பிறகு அவருக்கு விளக்கினோம்.

— இரா. இராகவன், மேல்மங்கலம்.

ஃபாத்திமாப் பொண்ணுக்கு நெற்றிப் பொட்டு

●● எங்கள் வீட்டிற்கு டீ.வி. வந்த புதிது. தமிழ்ச் செய்தி ஆரம்பித்தது. வாக்கிங் போய் விட்டு வீட்டுக்குள் நுழைந்த என் மைத்துனர் "அப்பாடா! ரொம்ப நாளா எனக்கும் ஓர் ஆசை.... இப்படி லட்சணமாக இருக்கும் இந்த ஃபாத்திமாப் பொண்ணு ஒரு பொட்டு வைத்துக் கொண்டால் எப்படி இருக்கும் என்று யோசிப்பேன். இன்னிக்கு மங்களகரமா நெற்றிக்குப் பொட்டு வெச்சிருக்காள்" என்றார்.

எல்லோரும் ஆச்சர்யமாக அப்போதுதான் டீ.வி.யைக் கவனித்தோம். ஃபாத்திமா நெற்றியில் பளிச்சென்று பொட்டு. ஆனால் அந்தப் பொட்டு அப்படியும் இப்படியும் அசைகிறதே!

"நான்தான் பாட்டி பொட்டு வெச்சேன்" என்றாள் குழந்தை விஜிஷா!

நெற்றிக்கு நேரே ஒரு ஸ்டிக்கர் பொட்டை அவள் ஒட்டியிருந்தாள்!

— ராதாராம், புதுக்கோட்டை.

வழக்கும் வருத்தமும்

●● 7.5.89 அன்று சென்னை தொலைக்காட்சியில் திரை மலர் நிகழ்ச்சியில் ஒளிபரப்பான 'பாசப் பறவைகள்' படத்தைக் குடும்பத்தார் அனைவரும் சீரியஸாகப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

நீதிமன்றக் காட்சி ஒன்றில் நீதிபதி 'இந்த வழக்கு பதினைந்தாம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது என அறிவித்தார். தற்செயலாக, டீ.வி.யில் தடங்கலுக்கு வருந்துவதாக அறிவிப்பு வர, என் மகன், "வழக்கை ஒத்தி வைத்ததற்குத் தொலைக் காட்சி நிலையத்தினர் ஏன் வருத்தம் தெரிவிக்கிறார்கள்?" என்ற போது சிரிப்பலைதான்!


— என். சந்திரா, சென்னை — 11.

யாருக்குப் புரியும்?

●● சமீபத்தில் சென்னையில் நடந்த திரைப் படத்துறையின் பவள விழாவை டீ.வி.யின் தேசிய நிகழ்ச்சியில் ஏறக்குறைய முழுமையாக ஒளிபரப்பினார்கள். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் முழுமையான தமிழ்ப் பேச்சும் ஒளிபரப்பப்பட்டது. வடநாட்டைச் சேர்ந்த பத்திரிகைகளும் சரி, பெரும்பாலான ஆங்கிலப் பத்திரிகைகளும் சரி இது பற்றி ரொம்பவும் அலுத்துக் கொண்டுள்ளன. இவ்வளவு நீள உரையை— தமிழில் ஆற்றப்பட்ட உரையை — ஓர் அர்த்தமும் புரியாமல் எத்தனை நேரம் சகித்துக் கொண்டிருப்பது என்று கேள்வி எழுப்பியுள்ளன. இன்னொரு பத்திரிகை, அவருடைய பேச்சை மொழிபெயர்க்காமல், சப் டைட்டில் கூடப் போடாமல் (இரண்டே இரண்டு இடங்களில்தான் டைட்டில் போட்டார்கள்) ஒளிபரப்பினால் யாருக்குப் புரியும்? என்று கேட்டிருக்கிறது. இந்தக் கேள்விகள் நியாயமானவையாக இருக்க



சர்க்கரைப் பொங்கல்



லாம். ஆனால் டி.வி. ஆரம்பித்ததிலிருந்து இது நாள் வரைக்கும் இந்தி நிகழ்ச்சிகளை யெல்லாம் இப்படித்தானே ஒளிபரப்புகிறார்கள்....!

— எம். செல்வி, பெங்களூர் — 5.

நகைகளா? காயகல்பமா?

●● தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம் இவை அனைத்தையும் விடச் சிறந்தது 'க்ரௌன் காயகல்பம்' என்று டி.வி.யில் விளம்பரதாரர் நிகழ்ச்சியை ஒரு நாள் ஒளிபரப்பிக் கொண்டிருக்க, மாடல் அழகி தனது நகைகள் அனைத்தையும் கழற்றி, தராசின் ஒரு பக்கத் தட்டிலும், மற்றொரு தட்டில் காயகல்பத்தையும் வைத்து, பாட்டிலை எடுத்துக் கொள்வது போலவும் அதனைக் குடும்பத்தினர் அனைவரும் விரும்பிச் சாப்பிடுவது போலவும் உள்ள காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அப்போது எனது அண்ணன் மகள் கவிதா, "பாட்டி உனக்கு இரண்டு பாட்டில் காயகல்பம் வாங்கித் தருகிறேன். நீ எனக்கு எல்லா நகைகளையும் கழற்றித் தருகிறாயா?" என்று எனது அன்னையிடம் கேட்கவும், டி.வி. பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் அன்றும் சிரித்து விட்டோம். நினைத்து, நினைத்து இன்றும் சிரிக்கிறோம்.

— எஸ். ஷண்முகம், வேதாரண்யம்.

அலட்டலும் பரிதாபமும்

●● என் நண்பனுக்கு இரண்டு பெண்கள். செய்தி வாசிப்பாளர் ஷோபனா ரவியை ஒருத்திக்குப் பிடிக்கும். மற்றவளுக்கு ஃபாத்திமா. இருவருக்கும் அடுத்தவரின் நபரைக் கலாட்டா செய்வதில் படு குஷி. இது விவரம் எனக்கு ஒன்றும் தெரியாது.

ஒரு நாள் நியூஸ் நேரம். 'நீயா, நானா?' என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டே ஒருத்தி பிளாஸ்டிக் பக்கெட்டுடன் வந்து நின்றாள். அடுத்தவள் ஃபான் ரெகுலேடரில் தயாராகக் கையை வைத்துக் கொண்டாள்.

வழக்கமாகச் செய்திக்கு முன் இயங்கும் வாத்திய இசை முடிந்தவுடன், ஷோபனா ரவி வணக்கம் சொல்லிக் கொண்டே செய்தியைப் படிக்கத் தொடங்கினார். உடனே பிளாஸ்டிக் பக்கெட்டை டி.வி.யின் அடியில் நகர்த்தி விட்டு வந்து உட்கார்ந்து கொண்டாள் ஒருத்தி. ஃபான் ரெகுலேடரில் கை வைத்திருந்தவள் 'வெல்கம்' சொல்லிக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

இப்போது அவர்களை விவரம் கேட்டால்— "ஷோபனா ரொம்பவும் அலட்டல். நியூஸ் முடியும் வரை பக்கெட்டில் கொட்டும் அலட்டல்களை, அப்புறம் வெளியில் கொண்டு போய்க் கொட்டி விட்டுத்தான் வருவேன்" என்றாள் ஒருத்தி. அடுத்தவள்—"ஃபாத்திமா மேக்கப் ரூமச். கம்மா அவருக்கு உடம்பு வியர்த்துக் கொட்டும். பரிதாபமாக இருக்கும். அதனால்தான் அவர் வந்தவுடன் ஃபேன் புல் ஆன், டோர்ஸ் அண்ட் வின்டோஸ் ஃபுல் ஓபன்" என்றாள்.

இப்படி தினமும் ஷோபனா, ஃபாத்திமாவுக்கு இருவரும் தயாராக இருப்பது இவர்கள் வழக்கமாம். பல நேரங்களில் சண்டையும் நடக்குமாம். எப்படி இவர்களின் நியூஸ் ரீடர் பற்றிய விருப்பு — வெறுப்பு!

— ராஜன், சென்னை — 83.

டி. வி. சாமிக்குச் சர்க்கரைப் பொங்கல்!

●● நாங்கள் டி.வி. வாங்கிய போது கடைக்காரர், "ஆன்டனா அமைக்க எங்கள் மெக்கானிக் ஞாயிற்றுக் கிழமைதான் வருவார்!" என்று சொல்லி விட்டார். அதனால் டி.வி.யை வாங்கிக் கொண்டு, அப்படியே வீடியோ லைப்ரரிக்குச் சென்று வி.ஸி. ஆரையும் நாலைந்து கேசட்டுகளையும் வாடகைக்கு எடுத்துக் கொண்டு வீடு திரும்பினோம்.

குழந்தைகள் உடனே வீடியோவைப் போட்டுப் படம் பார்க்கத் துடிக்க, எங்கள் மாமியாரோ, "யார் யார் கண் பட்டதோ! திருஷ்டி சுற்றிப் போட்டு விட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும். அப்படியே இன்று வெள்ளிக் கிழமையாகவும் இருப்பதால் சாமிக்கும் படைத்து விடலாம்!" என்று ஆரம்பித்து விட்டார்கள்.

அப்புறமென்ன; டி.வி.க்குச் சந்தனப் பொட்டு, குங்குமப் பொட்டெல்லாம் வைக்கப்பட்டது. அதோடு பந்தாவாகப் பூமாலை. திருஷ்டி சுற்றிப் போடுவதற்காக உப்பு, மிளகாய், சாம்பிராணி என்று ஒரே களேபரம்தான்! அதன் பிறகு டி.வி.க்கு எதிரே ஒரு தலைவாழை இலையில் சர்க்கரைப் பொங்கலையும் பொங்கி வைத்தோம்! டி.வி.யைச் சுற்றி வந்து கும்பிட்டு, கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறைதான்!

ஒருவழியாக டி.வி.க்குச் சூடம் கொளுத்திக் காட்டி விட்டு, வீடியோவைப் போடப் போனால் கரண்ட் போய் விட்டது! போன கரண்ட் இரவு பத்து மணிக்குத்தான் வந்தது!

— ஆர். அமுதா, வடுகவிருட்சியூர்.

‘எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலேர்ந்தே...’

வட்டமேஜை

* நான்:— எனக்கு நெனைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து வாரியாரோட ‘படம் கூடாது’ துணுக்கைப் பத்திரிகைகள்ல படிச்சிருக்கேன்.....

என் பாட்டி: — அட கம்மா இருடா! எனக்கும் நெனைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து இதே துணுக்கைப் பத்திரிகைகள்ல படிச்சிருக்கேனாக்கும். என் அம்மாவும் இதையே சொல்வா....!

பரமக்குடி, வேணுகோபால்.

* ‘அபூர்வ சகோதரர்கள்’ படத்தைப் பார்த்த ரசிகர்களின் மனத்தில் எழுந்த கேள்விகளுக்கு, அப்பட டைரக்டர் சிங்கீதம் சீனிவாசராவ் பதிலளித்த விதம், கமலின் — அந்தக் கேரக்டரின் — உண்மையான உழைப்பை வெளிப் படுத்திக் காட்டியது.

திருப்பரங்குன்றம், எஸ். மந்திரமூர்த்தி.

* ‘குள்ளக் கமலை உருவாக்கியது எப்படி?’ — தலைப்பைப் படித்ததும் அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கட்டுரையைப் படித்தால் ‘சப்’ என்று ஆகி விட்டது.

கடலூர், பெ. அருள்.

* மரணத்திற்கு ஒரு டிக்கெட்! மிகவும் வேதனைப் பட வேண்டிய கட்டுரை! எப்படி லஞ்சம் வாங்கலாம் என்ற சிந்தனையில் அலைமோதும் அரசியல் வாதிகள் ஏழை மக்களின் பாதுகாப்புப் பற்றி எங்கே கவலைப் படுவார்கள். இனிமேலாவது அரசு ரயில்வேத் துறையில் இதுபோன்ற விபத்துக்கள் நடக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

திருவெண்ணெய்நல்லூர், ஆர்.கே. கங்கா சீனிவாசன்.

* நெடுஞ்செழியன் என்ன செய்கிறார்?என்ற தலைப்பில் கௌசல்யா தொகுத்தளித்திருந்த அரசியல் செய்திகள் யாவும் சுவாரஸ்யமாக இருந்தன.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

* பல வட்டமேஜை வாசகர் கடிதங்களின் இடத்தை ஆக்ரமித்துக் கொண்டாலும் நெய்வேலி வாசக சகோதரியின் கடிதத்தில் குமுறல் தெரிகிறது; கோபம் புரிகிறது. கவலையும் இறங்குகிறது; ஆண்களுக்குச் சூடும் படுகிறது!

சென்னை —14, அய்யாறு எஸ். வாசுதேவன்.

* தலையங்கம் படித்தேன். ‘கிராம ராஜ்யம்’ பற்றி மகாத்மா காந்தி அவர்கள் நாட்டிற்கு எடுத்துரைத்து, நாற்பதாண்டுகளுக்கும் மேலாயிற்று. சுதேசித் தொழில் வளர்ப்பு, கிராம மக்களின் வேலை வாய்ப்பினை மனத்தில் கொண்டு, அவர் உருவாக்கிய சர்வோதய தத்துவம், ஆகியவற்றைக் காற்றில் பறக்க விட்டாயிற்று. கம்ப்யூட்டரும், பல்வேறு மின்னணுக் கருவிகளும் வந்தாயிற்று. அந்நியத் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தாயிற்று. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்தாச்சு. இந்நிலையில் நமது பிரதமர் திடீரென்று ஞானோதயம் பெற்றாற் போல, ‘கிராமப் பஞ்சாயத்துக்’களை வாழ்விக்க வந்த தெய்வம் போல தன்னைக் கருதிக் கொண்டு, பஞ்சாயத்து நிர்வாகத்தை மத்திய அரசே எடுத்துக் கொள்ளும் முயற்சியாகத் தொடங்கியுள்ள தந்திரமே இது. சொந்தக் கட்சிக்குள்ளேயே ஜனநாயகம் இல்லை, தேர்தல் கிடையாது. இவர் பஞ்சாயத்துக்களுக்கு ஜனநாயகத்தைக் கொண்டு வருகிறாராம், நல்ல வேடிக்கை!

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

* சட்டை கூட இல்லாத ஏழை அப்பாவி இந்திய குடிமகனுக்கு, மகாராஜா போல் பட்டு முண்டாசு கட்டும் ராஜீவ் காந்தியைப் பற்றிய கார்ட்டூன் அட்டகாசமான சிரிப்பு!

மங்கை நல்லூர், ஆர். செல்வராணி.

* எதற்கெடுத்தாலும் ‘நூறு நாட்கள் சாதனை’ என்று விளம்பரப் படுத்தும் இக்காலத்தில், ஆரவாரமில்லாமல் ஆலம்பூண்டியில் செயல் புரியும் அயல் நாட்டு அபூர்வ சகோதரர்கள் இருபத்தைந்து ஆண்டுகளைக் கழித்தார்கள் என்பதை எண்ணும் போது மலைப்பாகத்தான் இருக்கிறது. ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்’ என்று சொல்லிக் கொண்டு இருப்போருக்கு நடுவே ஏழையின் தொண்டில் இறைவனைக் கண்ட இச்சகோதரர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். "சேவை செய்வதற்காக மட்டுமே நாங்கள் வரவில்லை.... ஏழைகளோடு வாழ்ந்து அவர்களின் எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்து அதன் மூலம் இறைவனைத் தரிசனம் செய்வதற்காகத்தானே வந்திருக்கிறோம்" என்ற அவர்களின் மன உறுதியை யார்தான் போற்றாமலிருக்க முடியும்?

சென்னை — 19, ஆர்.வி. சுப்பிரமணியன்.

* ஆலம் பூண்டி அபூர்வ சகோதரர்களைப் பார்த்து, நாட்டில் இப்படி எல்லாம் கூட நல்ல மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்களா?என்று எண்ணி வியப்பில் ஆழ்ந்தேன். தமிழின் மேல் அந்த மூன்று அயல் நாட்டுக்காரர்களுக்கு இருக்கும் மரியாதை, சமூகத் தொண்டின் மேல் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம், சகோதரத்துவம், மனப்பக்குவம், ஆடம்பரமில்லாத அமைதியான வாழ்க்கை...... அப்பப்பா! அசத்தி விட்டார்கள்! கட்டுரை தந்த உங்களையும், கவிதை போல் வாழும் அந்த மூன்று அபூர்வ ஜீவன்களையும் வாழ்த்துகிறேன்.

ஈரோடு — 11, வி. ரெங்கநாதன்.

* சுதாகரின் ‘இறுதி ஊர்வலம்’ சிறு கதை படித்தேன். ஊரில் இறந்தவர்களுக்கெல்லாம் பாடை கட்டியவனின் இறுதி ஊர்வலத்தைப் பற்றிப் படித்தபோது நன்றி கெட்ட நம் சமுதாயத்தின் அல்ப புத்தி மிக யதார்த்தமாய் வெளிப்பட்டது.

பாபனாசம், ப. மணிமுடி.

* சங்கரி அப்பனின் ‘இன்று நான் சூப்பர் ஸ்டார் இல்லை’ சிறுகதை, மிக வித்தியாசமாக, மாறுதலாக, நுணுக்கமான மனநிலைகளை உணர்த்தி அசத்தியது.

சிநேகிதாவின் ‘வெற்றிக்குப் போடும் வேஷங்கள்’ சிறுகதையில் சத்துரு சிந்திக்க ஆரம்பித்து விட்டான். இதைப்போல இந்தியமக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க ஆரம்பிக்கும் காலம் எப்போது வருமோ, அப்போதே இந்தியாவும் ஜப்பான் போல முன்னேறி விடும்!

முடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

* சங்கரி அப்பன் எழுதிய ‘இன்று நான் சூப்பர் ஸ்டார் இல்லை’ ஒரு புகழ் பெற்ற கலைஞனின் கஷ்டங்கள் குறித்துப் புதிய கோணத்தில் இருந்தது. ஆனால் அரவிந்த் மட்டுமே ஏ.சி. பெட்டியில் வேறு துணை இல்லாமல் ஏறுவது நம்புமாறு நஹி!

நீடூர், முஹம்மது நிஜாமுத்தீன்.


உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!
முன்பே-பக்குவப்படுத்தப்பட்ட
ஃபாரெக்ஸ்® -வெஜ்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.
இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
Nutritious
farex-veg
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-ஃபுரூட்

இலவசம்

இந்த அழகான ஸ்டோன்வேர் கோப்பை!



கேம்ப்கோ வின்னர் - ஜோரான ருசியுள்ள சாக்கலேட் ட்ரிங்க்! இதில் சாக்கலேட், குளூகோஸ், மினரல்கள், விட்டமின்கள் எல்லாம் உண்டு.

சக்தி தரும் சத்துள்ள கேம்ப்கோ வின்னருடன் இப்போது கிடைக்கிறது ஒரு அழகான கோப்பை!

இன்றே வாருங்கள்! பெற்றுச் செல்லுங்கள் இந்த இலவச கோப்பையை

ஒவ்வொரு 500 கிராம் கேம்ப்கோ வின்னர் ஜாடியுடனும்!



ஸ்டாக் உள்ளவரை மட்டுமே இச்சலுகை!

Campco

கேம்ப்கோ லிமிடெட்
மங்களூர்.

R K SWAMY/CL

கவிதாலயா முத்திரையில் ஒரு கௌபாய் படம்!

காதிலே பூ சுற்ற வேண்டியதுதான். அதற்காக அநியாயக் கொள்ளை இப்படியா! ஓர் இந்து ஜோடிக்கு ஒரு பையன். ஒரு கிறிஸ்துவ ஜோடிக்கு ஒரு பையன். கூட்டாக வீட்டில் இருக்கும் போது தீவிபத்து. அதில் ஒரே சமயத்தில் கிறிஸ்துவத் தாயும் இந்துப் பையனும் ஒருபுறம் தப்பியோட, கிறிஸ்துவப் பையன் ஒருபுறம் தப்பியோட, பையன்கள் இருவரும் ஒருவரையொருவர் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்குப் பிறகுதான் அடையாளம் கண்டு கொள்கிறார்களாம்!

ஃபைட்டில் ரஜினி ஸ்டைலைச் சண்டைப் பிழிந்து காட்டிவிட வேண்டும் என்ற வெறியில் ஒரு படம் எடுத்தால் எப்படி இருக்கும்? சிவா மாதிரிதான்!

வேலை வெட்டி இல்லாமல் ரஜினி எப்படி அந்த மேரியம்மா சௌகாரையும் ரேஸ் குதிரைக்குச் சமமான அந்த வெள்ளைக் குதிரையையும் வைத்துப் பராமரிக்கிறார்? மெஷின் கன், குண்டு வீச்சு, ஜீப், கார்கள் ஒருபுறம் சீறிப் பாய்ந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் ராஜா காலத்துக் குதிரைப் படைகளைப் போல் அத்தனை புரவியேற்ற வித்தைகள் சம்பவிப்பது சாத்தியமா? பின்னைப் பகுத்தறிவு வினாத் தொடுக்காதா?



சிவா

ரஜினியின் மோதலில் ஏதோ புதுமை பண்ணுவதாய் நினைத்துக் கொண்டு திகட்டிப் போகும் அளவுக்கு ஒரு ஸ்டைல் காட்டியிருக்கிறார்.

வளர்ப்புத் தாயிடம் பாசம் காட்டும் விதத்தில் வழக்கம் போல் நெகிழ்ச்சியூட்டுகிறார். சௌகாருக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை – 'இனிமேல் நான் யாரையும் கை நீட்டி அடிக்க மாட்டேன்' – காப்பாற்ற எதிரியிடம் அடி வாங்கிக் கொண்டு வந்து நிற்கும் போது, சௌகார், 'என் பிள்ளை எனக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பாத்திட்டான்,' என்று பூரித்துப் போய் நிற்க, பக்கத்திலிருந்த மனைவி ஷோபனா பொறுக்க மாட்டாமல், 'உங்களுக்கு உங்க சத்தியம்தான் பெரிசு. அவர் அடிபட்டுச் செத்திருந்தாலும் கவலையிருக்காது. ஏன்னா நீங்க அவரை வளர்த்த தாய்தானே? பெத்த தாயில்லையே!' என்று குமுற, ரஜினி அவர் கன்னத்தில் பளாரென்று அறைந்து, 'அவர் புள்ளையை அவங்க ஒரு தடவைதான் பெத்தாங்க. ஆனா என்னை ஆயிரம் தடவை பெத்திருக்காங்க, தெரியுமா?' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டுவிட்டுக் கண் கலங்குகிறாரே உருக்கம்தான்.

கண்டிப்புக்கும் கண்ணீருக்கும் பேர் சௌகார் ஜானகிதான். அவரது நடிப்பிலும் முதிர்ச்சி.

சோகத்தின் உச்சக்கட்டத்தில் அழுது அழுதே ஹாஸ்ய ரசம் பிழிந்திருக்கும் ஜனகராஜ் கலகல சக்ரவர்த்திதான். ஷோபனா அவரிடம், 'உன்னைத் தனியா பார்க்கணும்னு எங்கெல்லாம் தேடறேன்' என்று ஆரம்பித்ததும் ஜொள்ளு வடிய அவர் விவரம் கேட்கும் தோரணை, கடைசியில், 'டைகரைப் பார்க்கணும்யா. ஏற்பாடு பண்ணு,' என்றதும் இடிந்து போகும் அந்தப் பொசுக் – ஜனக முத்திரை.


ரஜினிக்கு ஏற்ற ஜோடிதான் ஷோபனா. 'இத பாரு, சத்தம் போட்டே, கடிச்சே கொன்னுடுவேன்,' என்று அவர் இறுக்குவது மிகைதான் என்றாலும் கிளுகிளு.

அந்தக் கிளைமாக்ஸ் காட்சி ஏதோ ஸ்பெஷல் வடக்கத்தித் தயாரிப்பாம். எப்போதோ பார்த்த ஹாலிவுட் இறக்குமதிதான் என்றாலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இருக்கிறது. அடேங்கப்பா எத்தனை புரவிகள், எத்தனை புஸ்வாண வெடிகள்! தீவிளி அமர்க்களம்!

பாவன்னா முத்திரை மட்டும்தான் தந்தேன் என்று ஒதுங்கிக் கொள்வது பொறுப்பாகுமா? பகுத்தறிவுக்கு இடமில்லை; பாக்ஸ் ஆஃபீஸ் ஹிட்டுக்குத்தான் என்று சொல்ல முடியுமா? என்னமோ சார், புரிந்து கொள்ள முடியவில்லை.

— பி. எஸ். எஸ்.


"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
NEW CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL FOR FRESHNESS ALL DAY LONG
PROTECTIVE • SOOTHING • FRAGRANT
CINTHOL
NEW CINTHOL
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் - நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்



புலம்பல்: அன்றும் இன்றும்

பள்ளி வாசலில் தாய்மார்களின் கூட்டம். முழு ஆண்டு பரீட்சையென்றால் சும்மாவா? பிள்ளைகளை விட அம்மாக்களுக்கு அதிக டென்ஷன்! நாலாவது வகுப்பு பரீட்சைக்கு ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள் என்று அவர்களைக் கேட்டால், ''அவர்கள் வயசுக்கு அது ஐ.ஏ.எஸ். பரீட்சை மாதிரிதானே'' என்று பதில் வரும். உண்மைதானே?

வீட்டிலேயே உபதேசங்கள் தொடங்கி விட்டன.

''அந்தப் பாலு அம்மா படிச்சியான்னு கேட்டா, ரொம்ப பீத்திக்க வேண்டாம். நான் 'உனக்கு ஜுரம், படிக்கவே முடியலைன்னு சொன்னா, தலையை ஆட்டு.

பாலு அம்மா கேட்ட கேள்விகளைச் சாமர்த்தியமாக மழுப்பி ஆயிற்று.

கடைசி நிமிட உபதேசங்கள் தொடங்கி விட்டன.

''பெரிசா குண்டு குண்டா எழுது.''

''கொஸ்சின் புரியலைன்னா டீச்சரைக் கேளு.''

''ஒரு கேள்வி தெரியலைன்னா அதிலேயே டைம் வேஸ்ட் பண்ணாம அடுத்த கேள்விக்குப் போ.''

''எழுதி முடிச்சுட்டு அப்படியே கொடுத்திடாதே. நிதானமா படிச்சு ஸ்பெல்லிங் மிஸ்டேக் செக் பண்ணு. வாங்குகிற நாப்பது மார்க்கில் அதெல்லாம் வேறே போயிடும்.''

மூன்று வயதிலிருந்து கேட்டுக் கேட்டு இந்த உபதேசங்கள் மனத்தில் பதிந்து போயிருந்தாலும், ஒவ்வொரு தடவையும் கேட்டுக் கொண்டு, தலையை ஆட்டி விட்டுப் பரீட்சைக்குச் செல்ல வேண்டும்.

ரவியின் அம்மாவும் பாலுவின் அம்மாவும் வீடு திரும்புகையிலும் பேச்சு படிப்பைப் பற்றித்தான்.

''என்ன எழுதப் போறானோ தெரியலை. பாலு அப்பாவோட உறவினர் யாரோ வந்துட்டா... நேத்து முழுக்க விருந்தாளிக் கூட்டம். போறாததுக்கு டீவி வேறே. வீட்டிலே இருக்கிறவாளையே சொல்ல முடியாது... வந்தவாளை எப்படிச் சொல்றது. பாலுவாலே படிக்கவே முடியவில்லை.

''ரவிக்கு நேத்து முழுக்கக் கண் திறக்க முடியாதபடி ஜுரம். பாஸ் மார்க் வாங்கினா போதும். குழந்தையைக் கஷ்டப்படுத்தாதேன்னு அவனப்பா சொல்லிட்டார்.

போட்டி போட்டுக் கொண்டு யார் குறைவாகப் படித்திருக்கிறார்கள் என்று விவரித்தவாறு நடந்தனர்.

பரீட்சை முடிந்து லீவ் விட்டாயிற்று. இன்று ரிஸல்ட். ஸ்கூல் வாசலில் கூட்டம். ரப்போர்ட் கார்ட் வாங்கிக் கொண்டு திரும்பும் ரவி அம்மாவும் பாலு அம்மாவும் புலம்புகிறார்கள்.

''இது என்ன அநியாயம்! ''பி'' க்ரேட் தான் வாங்கியிருக்கான். ரவி என்ன க்ரேட்?'' — இது பாலுவின் அம்மா.

''அவனும் 'பி'தான். என்னாலே நம்பவே முடியல்லே. உசிரை விட்டுண்டு படிச்சான். எல்லா பேப்பருக்கும் சரியா விடை எழுதியிருந்தான். மார்க் எப்படிக் குறைஞ்சதுன்னு புரியலை. குளிச்சுச் சாப்பிட்ட நேரம் போகக் கஷ்டப்பட்டுப் படிச்சு என்ன லாபம்?''

''பாலு மாத்திரமென்ன? ரசமும் அப்பளமும் போதும். சமையலை விட்டுக் குழந்தை படிப்பைக் கவனின்னு அவன் அப்பா ஸ்ட்ரிக்டா சொன்னார். நானும் கூடவே உட்கார்ந்து வறட்டுத் தவளை மாதிரி கத்திச் சொல்லிக் கொடுத்தேன். நிச்சயம் ஏ ப்ளஸ் க்ரேட் வரும்னு எதிர்பார்த்தேன்.''

''என்ன தில்லுமுல்லோ யார் கண்டா? இவா ஸ்கூல்லே ஒழுங்காத் திருத்தறதில்லே. நோட்புக்ஸ் எடுத்துப் பாருங்கோ. தப்பு திருத்தாமலேயே டிக் போடறா. கண்ணை மூடிண்டு திருத்தினால் மார்க் எப்படி வரும்?''

''அது மட்டுமில்லே. போன பெற்றோர் சங்கக் கூட்டத்திலே அவன் வகுப்பு டீச்சர் கிராமர் சரியா சொல்லித் தரதில்லைன்னு நான் வெளிப்படையாச் சொன்னேன். அதை மனசிலே வெச்சுண்டு மார்க்கைக் குறைச்சுப் போட்டிருப்பாளோன்னு சந்தேகம்.''

''இருக்கலாம் மாமி. இப்பல்லாம் காக்கா புடிச்சாதான் காலம் தள்ளலாம். நேர்மையா உழைச்சு ஒரு பிரயோசனமும் இல்லை!''

''வர வர உலகம் எங்கே போயிண்டிருக்குன்னு புரியலே.''

இருவரும் ஒரே ராகத்தில் புலம்பியவாறு நடந்தனர்.

பாலு குமார்



“என் கண்மணியின் மிருதுவான சருமத்திற்கு நான் ஜான்ஸன்ஸ் பேபி சோப் ஒன்றையே நம்புகிறேன்.”



**வேறு எந்த சோப்பிலும்
ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் கிடையாது**

குழந்தைப் பராமரிப்பில் தலைமுறை தலைமுறையான நிறுவனம். ஜான்ஸன் அன்ட் ஜான்ஸன்

OBM/4584/TM

[illegible]

ஆர். சூடாமணி

எல்லாமே பழகு. ஏன், நானே பழகுதான். எழுபது வருஷமாகிறது நான் இந்த உலகத்துக்கு வந்து. கணவன், பிள்ளை, பேரக் குழந்தைகள் எதற்கும் குறைவில்லை. எத்தனை பேரால் இப்படிச் சொல்ல முடியும்? பிஞ்சாய், மொட்டாய், மலர்ந்த பூவாய், எத்தனை உயிர்கள் பொட்டென்று உதிர்ந்து விடுகின்றன! இதோ நான் இருக்கிறேன். பழுத்த பழமாய். காய்ந்த சருகாய். இந்தக் கணம் நான் செத்து விழுந்தாலும் அற்பாயுசில்லை.

...நான் ஏன் சாகக் கூடாது? நீயே சொல்லு அம்மா. நீ முப்பத்தஞ்சு வயசிலேயே நிமோனியா வந்து போய்ட்டே. நான் எழுபது வயசில், உன்னை விடப் பெரியவளாய், இன்னும் ஏன் வாழ்ந்துக்கிட்டிருக்கணும்? ஆமாம், எப்பவோ செத்துப் போய்ட்ட நீ எப்படி இப்ப எனக்கெதிரே உட்கார்ந்துக்கிட்டிருக்கே? ஆனா உன் கூடப் பேசறது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. நீ அப்பப்போ வர்றது எனக்குச் சந்தோஷமாயிருக்கு. "எங்கம்மா வந்திருக்காங்க பாரு!" அப்படின்னு உன்னைப் பல தடவை சோமுவுக்குக் காட்டியிருக்கேன். ஆனா எப்பவுமே அவர் உன்னைப் பார்க்காம என்னைத்தான் பார்க்கறார், வருத்தமா...

திடீரென்று எனக்குப் பயமாயிருக்கிறது. எனக்கு மூளை கலங்கி விட்டதா? சில சமயம் அருண் என்னை ஒரு மாதிரி பார்க்கிறான். "பாட்டி, பார்த்து வாங்க" என்று அநாவசியமான ஒரு கரிசனத்தைக் குரலில் காட்டி என் கையைப் பிடித்து நடத்துகிறான், என்னமோ நான் நடக்க முடியாமல் தடுமாறுவதைப் போல். சின்னவர்களுக்கே ஓர் எண்ணம், வயதானவர்களென்றால் ஒன்றும் முடியாதவர்கள், உபயோகமற்றவர்கள், மனம் பேதலித்தவர்கள் என்று. உலகமே இளைஞர்களுக்காகப் படைக்கப்பட்டிருப்பதாய் இவர்கள் நினைப்பு. கதைகளிலும் சினிமாவிலும் கூடப் பார்க்கிறேனே! அழகான பெண் என்றால் அழகான இளம் பெண் என்றுதான் அர்த்தம். அழகான கிழவி என்பதாய் ஒன்று இருக்க முடியுமென்று யாருக்கும் தோன்றுவதில்லை. முதுமையில் அழகைக் காணும் பக்குவம் யார் கண்ணிலும் இல்லை. அழகென்றால் இளமை என்பது நிஜமானால் மனிதர்களுக்கு முதுமை என்று ஒன்று ஏன் நேர்கிறது? முதுமைக்கும் மனித வாழ்வில் இடம் கொடுத்தது, இளமையைப் படைத்த அதே கடவுள்தானே!

இதைப் புரிந்து கொள்ளாதவர்களைப் பார்த்து, ஹோன்னு சில சமயம் வாய் விட்டுச் சிரிக்கறேன். குடும்பமே அப்போ என்னை விசித்திரமாய்ப் பார்க்குது. "காந்தா!" ன்னு ரொம்பப் பரிவாய் அழைச்சுச் சோமு என் கையை மெதுவா தடவிக் கொடுக்கிறார். "உடம்பை ஏதானும் செய்யுதா காந்தம்மா? போய்க் கொஞ்ச நேரம் படுத்துக்கறியா?" அப்படிங்கறார். நான் இன்னும் பெரிசா சிரிக்கறேன்.

ஒரு வாட்டி அருண் தன் அம்மாகிட்ட "வயசாய்ட்டாலே இப்படித்தான். அர்த்தமில்லாம நடந்துப்பாங்க" ன்னு சொல்லிக்கிட்டிருந்ததைக் கேட்டேன். வயசானவங்கன்னா தங்களுக்குச் சம்பந்தமில்லாத வேறேதோ இனம்னு இவங்க நினைக்கிறாங்க...

அங்கேதான் இவர்கள் தவறு செய்கிறார்கள். நான் இன்னும் மனித இனம்தான். எழுபது வயசின் ஒவ்வோர் ஆண்டும் இன்னும் எனக்குள் உயிரோடு, துடிப்போடு இருக்கிறது. என்னுள் ஒரு தொடர்ச்சி ஓடுகிறது. நான் சிறுமியாய், இளம் மங்கையாய், நடுத்தர வயசுக்காரியாய், கிழவியாய், இருந்த அனுபவமெல்லாம் என்னுள் பசுமையாய் மூச்சு விட்டு வாழ்கிறது. இந்த அறாத அனுபவச் சரட்டில் கோத்த மணிகள்தான் என் எழுபது ஆண்டுகள். இந்தத் தொடர்ச்சியின் காரணமாய் எனக்கு என் கிழத்தனம் தனியே உணர்வாவதில்லை. ஆனால் இந்த 'நான்' என்ற கூட்டுக்கு வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிவது ஒரு கிழவிதானே? இது புரிந்தாலும் என்னை யாராவது கிழவியாய் நடத்தும் போது சில சமயம் திக்கென்று ஓர் ஆச்சரியம் உறைக்கிறது. நிலைக்கண்ணாடியில் தெரிகிற நரையும் முகக் கோடுகளும் விசித்திரமாய்த் தோன்றுகின்றன. இது எப்படி நேர்ந்தது என்று வியப்பாயிருக்கிறது. யாரோ போட்டு விட்ட வேஷம் போல் இருக்கிறது. நாம் ஒவ்வொருவருமே நம் வயசுக்குள் சிறைப்பட்டிருப்பதாய் நினைக்கிறேன். வயது என்பது ஒரு தொடர்ச்சி, தனித்தனி பிரிவுகள் இல்லை என்பதை அனுபவமாய்ப் புரிந்து கொண்டால் இந்தச் சிறைக் கதவு தானே திறந்து கொண்டு விடும்.

வயசுங்கறது ஒரு தொடர்ச்சின்னா, அப்போ மரணம்...?

நான் மாடி பால்கனியில் உட்கார்ந்து பேசறதையெல்லாம் எதிரே உட்கார்ந்து சிரிச்ச முகத்தோட கேட்டுக்கிட்டிருந்தா போதுமா? வாயைத் திறந்து பதில் சொல்லேம்மா! மரணம்னா என்ன? ஊஹூம், சொல்ல மாட்டியே! சரி சரி, உன் ரகசியத்தை நீயே வச்சிக்க. ஒரு நாள் அது எனக்கும் தெரியாமலா போகப் போகுது? வேறேதானும் பேசேன்! உன் குரலைக் கேட்டு எத்தனை

காலமாயிடிச்சு அம்மா!

தெரியாததின் பயம்தான் மரண பயமாம். ஃபியர் அஃப் தி அன்நோன். ஆனால், தெரிந்ததின் பயம் அதைவிட எவ்விதத்தில் குறைந்தது? இன்று பொழுது விடியும் போது நாளைப் பொழுது எப்படி விடியுமென்று தெரியும். என் அன்றாட நடைமுறை நியமம் தெரியும். காலை ஐந்து மணிக்குப் பச்சைத் தண்ணீர் ஸ்நானத்தில் ஆரம்பித்து இரவு ஒன்பது மணிக்குப் படுக்கப் போகும் வரை தினம் ஒரே மாதிரி. வாரத்தில் இன்னின்ன நாளில் இன்னின்ன சமையல், இன்னின்ன டிபன் என்பது கூட நிச்சயப்படுத்தியாயிற்று. இந்த அமைப்புச் சங்கிலியிலிருந்து விடுபடவே முடியாதா என்று மனம் உறைந்து போகிறது. தெரிந்ததின் பயம் — ஃபியர் அஃப் தி நோன் — பெருங் கொடுமை. எனக்கு வாழ்க்கையில் எல்லாமே பழசாய்த் தெரிகிறது. எல்லாமே அலுத்துப் போய் விட்டது. உயிருடனிருப்பவர்களுக்கு ஒருகால் மரணம் ஒன்றுதான் புதிய அனுபவமாயிருக்க முடியுமோ என்னமோ! அன்றாடம் மனிதர்கள் இறந்தாலும் யாரும் திரும்பி வந்து இதுதான் சாவு என்று சொன்னதில்லை. மெருகு அழியாத ஒரே புதுமை மரணம்தான்.

அம்மா, நீ இன்னிக்கு ரொம்ப அழகாயிருக்கே. இவ்வளவு அழகா நீ? மறந்து போயிடிச்சு. ரொம்ப வருஷமாயிடிச்சில்லையா நீ போய்? நீ ஏம்மா போனே? உனக்





— மயிலாடுதுறை ஸ்வாமி.

கும் இளமைதான் பிடிச்சிருந்ததா? கிழவியாகக் கூடாதுன்னுதான் என்னை விட்டுட்டு நிமோனியா பின்னே போய்ட்டியா?

இக் கால இளைஞர்கள் தம்மைப் புதுமையின் இருப்பிடமாய் நினைத்துக் கொள்கிறார்கள். என் இளைய பேத்தி கவிதா என்ன சொன்னாள் தெரியுமா ஒருநாள்? ''பாட்டி, நான் ரொம்ப மாடர்ன். அது என்னைப் பார்க்கறப்பவே தெரியுதில்லே?'' என்றாள். அவளைப் பார்த்தேன். வெட்டிய முடி. அதோடு மூக்குத்தி. மாக்ஸி உடை, ஹைஹீல் ஷூஸ், கூடவே கணுக்காலில் கொலுசு! எனக்குச் சிரிப்பு வந்தது. ''கொலுசும் மூக்குத்தியும்தான் மாடர்னா?'' என்றேன். ''இப்ப அதான் ஃபாஷன். உங்களுக்குப் புரியாது பாட்டி. நீங்க பழங் காலம்'' என்றவள் கைக்கடியாரத்தைப் பார்த்தாள். ''ஓ. இட்ஸ் ஸோ லேட்! ஷேகர் வில் பி வொய்ல்ட்!'' என்றபடி வெளியே ஓடினாள். என் அம்மாக் காலத்துப் பெண் நாட்டுச் சேலை அணிந்து கணவனின் கோபத்தை எண்ணித் தமிழில் கவலைப் பட்டால், இவள் மாக்ஸி அணிந்து பாய் ஃப்ரெண்ட் கோபத்தை எண்ணி இங்கிலீஷில் கவலைப்படுகிறாள். வேறென்ன வித்தியாசம்? இதில் எந்தப் புதுமையும் எனக்குத் தெரியவில்லை. புதுமை என்பது சிந்தனையிலல்லவா பிறக்க வேண்டும்? டீ.வி.யில் பார்க்கிறேனே! பெரும்பாலான நாடகங்களில் இளம் மனைவி கணவனை அழைக்கும் விதம் ''ஏங்க!'' அல்லது ''ஏன்னா!''


ஆனால் என் விஷயம் எப்படி, தெரியுமா? அந்த நாளிலேயே, எங்களுக்குத் திருமணமான அன்று சோமு என்னிடம், ''உன்னை நான் 'நீ'ன்னு சொல்லிக் காந்தான்னு கூப்பிடுவேனில்லையா? நீயும் அதே மாதிரி என்னை 'நீ'ன்னு சொல்லிச் சோமுன்னு கூப்பிடு. நீயும் நானும் சமம்'' என்றார். அந்தச் சமத்துவம் எங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் இன்று வரை நிலவுகிறது. இன்று பல வகைகளில் நாம் பின்னோக்கிப் போவதாய் எனக்குத் தோன்றுகிறது. வழக்கொழிந்து போக வேண்டிய பல சமூகத் தீமைகள் மீண்டும் தலைவிரித்தாடுகின்றன. அருண் கிடாரில் பாப் இசை வாசித்துக் கொண்டே, ''உங்க காலத்துக்கிப்ப உலகம் ரொம்ப முன்னேறியிருக்கு பாட்டி'' என்கிறான். விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்கள்தானே எல்லாம்? இன்று கதைகளிலும் சினிமாவிலும் வாழ்க்கையிலும் பாலுணர்ச்சியும் வன்முறையும் கட்டவிழ்த்து ஓடுகின்றன. இது முன்னேற்றமா? இவ்விரு தன்மைகளும் படு பழசு. ஆதிகாலத்துக் 'காட்டு நியதி'யைச் சேர்ந்த கூறுகள் இவை. இவற்றைக் கட்டுக்குள் வைத்து, நடத்தையில் பண்பாட்டையும் மனத்தில் மனிதத் தன்மையையும் வளர்த்துக் கொள்வதல்லவா உண்மையில் முன்னேற்றம்? அப்படி வாழ்கிறவர்கள் தானே உண்மையில் மாடர்ன்? இன்று உலக மளாவி நிற்கும் வன்முறையை என்னால் தாங்க முடியவில்லை. பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கிறது. காட்டு நியதியை மீண்டும் அமல்படுத்தும் இந்தப் பழமை எனக்கு வேண்டாம். பழசெல்லாம் அலுத்து விட்டது. எல்லாமே பழசு...

நான் சொல்றது சரிதானேம்மா? எல்லாமே பழசுதானே? எனக்குப் புதுசு வேணும். புதுசு எங்கேம்மா கிடைக்கும்? கொஞ்சம் வாயைத்தான் திறவேன்! வா, எழுந்து அந்த பால்கனி கைப்பிடிச் சுவர் கிட்டயே போய் நிக்கலாம். ஒண்ணா, கை கோத்துக்கிட்டுப் போகலாம். அட, நீ எவ்வளவு அழகாயிருக்கேம்மா! சின்னவளா அழகாயிருக்கே, நான் கிழவியா அழகாயிருக்கேன். நீ என் சாயல்தான்... உன் அழகா இப்படித் திமீர்னு ஆகாயம் முழுக்க நிறைஞ்சு போயிடிச்சு? நட்சத்திரங்கள்ளாம் அழகுப் பொறிகளாய்ப் பிச்சுக் குழட்டிக் கிட்டு என் மனசுக்குள் பாய்ஞ்சு வந்து நுழையுதே! நான் குனிஞ்சு பார்க்கறேன். பால்கனிக்குக் கீழே அங்கே என்ன? நான் தேடற புதுமையா? எத்தனை அழகாயிருக்கு!





தாகப் பிணைப்பு
காரசார சண்டையிலும் லிம்கா
மௌனச் சண்டையிலும் லிம்கா
காரசாரமாக விவாதித்து விவாதித்து அல்லது
மௌனமாக இருந்து இருந்து களைத்து நீங்கள்
தாகத்தால் தவிக்கும் பொழுது...
ஐசோடானிக் ஸால்ட் அடங்கிய கிருமிகள்
அற்ற லிம்கா அருந்தி தாகம் தணிப்பீர்.
Limca®
எலுமிச்சை நீர்போன்ற சுவையான பானம்
குளிர்வித்துக்
கொடுக்கவும்.
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.
RADEUS/PE/L/5-89-TAM



''லஞ்சப் பணத்தை எடுத்துக்காம அந்த ஆபீஸுக்குப் போனது தப்பாப் போச்சு...''

''ஏன்...?''

''கரண்ட் வர்ற வரைக்கும் விசிறியால விசிறிக்கிட்டு இருக்கச் சொல்லிட்டாங்க!''

— ஷெந்தில்.

நான் கீழே குதிச்சா அது எனக்குக் கிடைச்சுடும். என் உடம்பின் ஒவ்வொரு மயிர்க்காலும் சிலிர்த்துக்கிட்டு அங்கே பாயத் துடிக்குது. என் உச்சந்தலையிலேர்ந்து, அடி வயித்திலேர்ந்து, ரத்த நாளங்கள்லேர்ந்து, ஒரு கிளர்ச்சி வெடிச்சுக்கிட்டு வருதே! நான் பார்க்கற இடமெல்லாம் யார் விளக்கேத்தி வச்சாங்க? அம்மா, இந்தப் பேரழகு உன்னுதா என்னுதா இல்லே என்னைக் கீழே இழுக்கிற அந்தப் புதுமை மர்மத்தினுடையதா? இதோ நான் அங்கே அந்த அழகின் இதயத்துக்குள் பாஞ்சுடப் போறேன். என் உடம்பும் உயிரும் சிலிர்த்துக்கிட்டு நிக்குது. இப்ப நான் எத்தனை மகிழ்ச்சியாயிருக்கேன்! எத்தனை மகிழ்ச்சியாயிருக்கேன்... ஐயோ, இதென்னம்மா என்னைப் பின்பக்கமா இழுக்கறே? விடு, விடு என்னை, என் மகிழ்ச்சியைக் கெடுக்காதே, அம்மா, நான் முன்னே போகணும், அந்த அழகுக்குள் சங்கமமாயிடணும், என்னைப் பின்னுக்கு இழுக்காதே, அம்மா என்னை விடேன், அம்மா அம்மா...

அவள் கண்களைத் திறந்த போது தன் படுக்கையில் இருந்தாள். எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருந்த சோமு அவளையே பார்த்துக் கொண்டிருந்தார், வருத்தமாக.

''அம்மா, எப்படிம்மா இருக்கு இப்ப?'' கவலையோடு கேட்கும் மகன். இன்னும் மருமகளும் பேரக் குழந்தைகளும் கூட அறையில் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

''எப்படியிருக்குன்னா? எனக்கு என்ன ஆச்சு? தூங்கிட்டேனா?''

''பால்கனி கைப்பிடிச் சுவர்கிட்ட நின்னுட்டிருந்தப்ப கால் இடறி அப்படியே மாடியிலிருந்து கீழே விழ இருந்தே. தற்செயலா அப்பா பார்த்துட்டு உன்னைப் பிடிச்சு இழுத்து நிறுத்தியிருக்கார். நீ மயக்கமாய் விழுந்துட்டே.

தாத்தா மட்டும் உங்களைப் பின்னுக்கு இழுத்திருக்காட்டி நாளை நியூஸ் பேப்பர் அபிசுவரியில் திருமதி. காந்தாமணி சோமசுந்தரம் என்கிற பேர் வந்திருக்கும். நல்ல வேளை, உயிர் தப்பினீங்க பாட்டி'' என்றான் அருண்.

பால்கனியருகில் நின்றிருந்தாளா? கீழே விழ இருந்தாளா? ஒன்றுமே நினைவில்லையே? தலையில் பாரமாயிருந்தது. புருவங்களைச் சுருக்கிக் கொண்டாள்.

''சூடா கொஞ்சம் பால் குடிக்கிறீங்களா அத்தை?'' என்றாள் மருமகள்.

''ம்.''

மருமகள் கொண்டு வந்த பாலைக் குடித்தாள். சோமு எல்லோரையும் அறையை விட்டு அனுப்பினார். அவள் கையை மென்மையாய்ப் பிடித்துக் கொண்டார். எவ்வளவு கிழவராய்த் தெரிகிறார் சோமு! அவளை விட நான்கு வயதே பெரியவரில்லையா? தலை வழுக்கை, வாயில் பொய்ப் பற்கள்... பார்வையில் இப்போது மிக ஆழமாய் ஏதோ ஒரு பாவனை.

''ரொம்ப பயந்துட்டியா சோமு? நான் இனிமே பால்கனிகிட்ட நிக்க மாட்டேன்'' என்றாள் மெலிந்த குரலில்.

சோமு புன்னகையோடு தலையாட்டினார்.

''நீ காப்பாத்தியிருக்காட்டி என்ன ஆகியிருக்கும்? நினைக்கவே பயமாயிருக்கு... தற்செயலா விழ இருந்தேனா?''

சோமு எதுவும் பேசாமல் அவளை நிதானமாய் உற்றுப் பார்த்தார். அவர் கண்களின் ஆழம் ஏதேதோ உணர்த்துவது போல் இருந்தது. காந்தாமணி பார்வையை விலக்கிக் கொண்டாள். நெற்றிப் பொட்டை விரல்களால் அழுக்கிக் கொண்டு, ''தலை நோகுது'' என்றாள். மனமே என்னமோ குழம்பிக் கிடந்தது.

''கண்ணை மூடிட்டுத் தூங்கு.''

அவளுள் ஏதேதோ அசைந்தது. நினைவுகள் பிரக்ஞையை எட்டி எட்டிப் பார்த்துப் பிடிபடாமல் நழுவின. ''என்னமோ தெரியலே சோமு, திடீர்னு அம்மா நெனப்பு வந்திச்சு... வந்திச்சுன்னுதான் நினைக்கறேன்.''

சோமசுந்தரம் அவளை மிக்க கருணையோடு நோக்கினார். தன் பதினைந்தாம் வயதில், வயதுக்கு வந்த புதிதில், தாயைத் திடீரென்று இழந்தது எத்தகைய பேரிடியாய் அதிர்ச்சி தந்தது என்பதை அவள் அவருக்குப் பலமுறை சொல்லியிருக்கிறாள். அதன்பின் அவளுக்கு வாழ்க்கை நிறைவாக அமைந்திருந்தபோதிலும் இப்போது முதுமையில் சிறிது காலமாய் மூளையில் அவ்வப்போது ஒரு மேக மூட்டம் கவியும் போது அந் நிலையில் தன் தாயைக் காண்பதான பிரமை... இன்று அந்தப் பேதலிப்பு நிலையில் ஒரு விபரீத முயற்சி... இனியும் வெறும் முதுமைக் கோளாறு என்று சும்மாயிருக்கக் கூடாது.

''பால்கனி... ஆமாம்... அங்கே.. கீழே ஏதோ அழகா, பிரகாசமா... எனக்குச் சொல்லத் தெரியலே, பயமாயிருக்கு.'' சோமுவின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

''ஒண்ணும் பயப்படாதே காந்தம்மா! டாக்டரை வச்சு உனக்கு வைத்தியம் செஞ்சிடுவோம், எல்லாம் சரியாய்ப் போயிடும்'' என்று சோமு அவள் கையைத் தட்டிக் கொடுத்தார்.

அவளுக்கு என்ன நோய், வைத்தியம் செய்ய? தெரியவில்லை. ஆனால் சோமு தனக்கு வைத்தியம் செய்விக்கப் போகிறார் என்பதைக் கேட்க ஆறுதலாயிருந்தது.

பொன்னியின் செல்வன்

மணியம்

அத்தியாயம் 46
படகு நகர்ந்தது!

வந்தியத்தேவன் ஒரு பக்கத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தான்.

மற்றொரு புறத்தில் மணிமேகலை, "அக்கா! உணவு சித்தமாயிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தாள்.

கரிகாலர் இருபுறமும் பார்த்துவிட்டு, "நந்தினி! என்னைக் கடம்பூர் மாளிகைக்கு வர வேண்டாம் என்று தடுக்க வந்தியத்தேவன் மட்டும் முயலவில்லை. ஆழ்வார்க்கடியான் என்னும் வைஷ்ணவனும் அதே மாதிரி செய்தியைக் கொண்டு வந்தானே? என் தந்தையின் உயிர் நண்பரும் என் பக்திக்கு உரியவருமான முதன் மந்திரி அநிருத்தரும் சொல்லி அனுப்பினாரே?" என்றார்.

"முதன் மந்திரி அநிருத்தர்! தங்கள் தந்தையின் பிராண சிநேகிதர்! ஆகையினால் தங்கள் தந்தையின் பிராணனைத் தாமே அபகரிக்கப் பார்க்கிறார். தங்களுடைய பக்திக்கு உரியவர்! ஆகையால் தங்களுக்கு அடுத்த பட்டம் இல்லாமற் செய்யப் பார்க்கிறார்...."

"ஏன்? ஏன்?"

"தாங்கள் வெறிபிடித்தவர் என்றும், தெய்வ பக்தி இல்லாதவர் என்றும் அவருக்கு எண்ணம். தங்கள் தம்பிக்குப் பட்டம் கட்டி வைத்து அவனை வீர வைஷ்ணவனாக்கி இந்தச் சோழ நாட்டையே வைஷ்ணவ நாடாக்கி விட வேண்டுமென்பது அவருடைய விருப்பம். தங்களுடைய தம்பி நடுக்கடலில் காணாமற் போன போது அவருடைய எண்ணத்திலே மண் விழுந்தது!"

"அதற்காக என்னைக் கடம்பூர் வராமல் தடுக்க வேண்டிய அவசியம் என்ன?"

"அவர்களுடைய அந்தரங்கத்தையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடலாம் அல்லவா?"

"உனக்கு எப்படி அவர்களின் அந்தரங்கம் தெரியும்?"

"ஐயா! அந்த வைஷ்ணவன் ஆழ்

அமரர் கல்கி



வார்க்கடியான் சகோதரி நான் என் பதை மறந்து விட்டீர்கள்......''

''உண்மையாக நீ அவனுக்கு உடன் பிறந்த சகோதரியா? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறாயா?''

''நானும் அந்தக் கதையை நம்ப வில்லை. தங்களை நம்புமாறு சொல்லவும் இல்லை. அவனுடைய தந்தையின் வீட்டில் நான் வளர்ந்து வந்தேன். ஆகையால் என்னைச் சகோதரி என்று அழைத்து வந்தான். என்னை ஆண்டாளின் அவதாரம் என்று அந்த வைஷ்ணவன் சொல்வது வழக்கம். ஊர் ஊராக அவனுடன் நான் சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பரப்ப வேண்டும் என்பது அவனுடைய ஆசை.''

''புத்த சந்நியாசினிகளைப் போல் உன்னையும் வைஷ்ணவ சந்நியாசினியாக்க அவன் விரும்பினானா?'' என்று ஆதித்த கரிகாலர் கேட்டார்.

''அப்படி ஒன்றுமில்லை. நான் அவனைக் கலியா

ணம் செய்து கொண்டு தம்பதிகளாகப் பாசுரம் பாடிக் கொண்டு ஊர் ஊராகப் போக வேண்டும் என்பது அவன் ஆசை. வைஷ்ணவத்தைப் பிரசாரம் செய்ய நான் பல குழந்தைகளைப் பெற்று அளிக்க வேண்டும் என்பதும் அவன் விருப்பம்....''

''சீச்சீ! அந்தக் குரங்கு மூஞ்சித் திருமலை எங்கே? நீ எங்கே? உன்னை அவன் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள-விரும்பினானா?.....''

''ஐயா! என் துரதிர்ஷ்டம் அது! நான் பிறந்தவேளை அப்படி! என்னை நெருங்கி வரும் ஆண் பிள்ளைகள் எல்லாரும் துர் எண்ணத்துடனேயே என்னை நெருங்குகிறார்கள்.....''

''கிழவன் பழுவேட்டரையனுடைய புத்தி போன பாட்டில் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?''

''கோமகனே! பழுவேட்டரையரைப் பற்றி என் காதில் படத் தூஷணையாக எதுவும் சொல்ல வேண்டாம். அவர் என்னிடம் ஆசை கொண்டார். என்னை உலகமறிய மணந்து கொண்டார். அநாதைப் பெண்ணாயிருந்த என்னை அவருடைய திருமாளிகையில் பட்டத்து ராணியாக்கிப் பெருமைப்படுத்தினார்....''

''ஆனால் உன்னுடைய விருப்பம் என்ன, நந்தினி? நீ அவரை உண்மையிலேயே உன் பதியாகக் கொண்டு பூஜிக்கிறாயா? அப்படியானால்...''

''இல்லை, இல்லை. அவரிடம் நான் அளவில்லா நன்றியுடையவள். ஆனால் அவருடன் நான் மனை வாழ்க்கை நடத்தவில்லை. அவரும் என்னை வற்புறுத்தவில்லை. ஐயா! நான் ஏழைக் குடியில் பிறந்தவள்; பிறந்தவுடனே கைவிடப்பட்டவள். ஆயினும் என்னுடைய நெஞ்சை ஒரே ஒருவருக்குத்தான் அர்ப்பணம் செய்தேன். அதை ஒரு நாளும் மாற்றிக் கொண்டதில்லை......''

''நந்தினி! அந்தப் பாக்கியசாலி யார்? வேண்டாம்; அதைச் சொல்ல வேண்டாம். நீ யார்? உண்மையைச் சொல்! நீ என் தந்தையின் மகள் இல்லாவிடில், என் சகோதரி இல்லாவிடில், ஆழ்வார்க்கடியானுடன் கூடப் பிறந்தவளும் இல்லை என்றால், பிறகு நீ யார்? அதை மட்டும் சொல்லி விடு, நந்தினி! அதைத் தெரிந்து கொள்ளா விட்டால் எனக்குப் பைத்தியம் உண்மையிலேயே பிடித்து விடும்!'' என்றார் கரிகாலர்.

''அதைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன். ஆனால் தங்களுடைய தோழரும் என்னுடைய தோழியும் இதோ நெருங்கி வந்து விட்டார்கள். மறுபடியும் சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவசியம் சொல்லுகிறேன்'' என்றாள் நந்தினி.



மீக் சமீபத்தில் வந்து விட்ட வல்லவரையனைப் பார்த்துப் பழுவூர் ராணி, "ஐயா! இது என்ன வெறுங்கையுடனே திரும்பி வந்திருக்கிறீர்கள்? புலியின் தலை எங்கே?" என்று கேட்டாள்.

"தேவி! புலியின் தலையைக் கொண்டு வந்து தங்கள் காலடியில் சமர்ப்பிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை!" என்றான் வந்தியத்தேவன்.

"ஆகா! இவ்வளவுதானா உமது வீரம்? உமது முன்னோர்களின் வீரத்தைப் பற்றிப் பாட்டுகள் எல்லாம் சொன்னீரே? மூன்று குலத்து வேந்தர்களின் தலைகளைப் பறித்துக் கழனியில் நடவு நட்டார்கள் என்று சொன்னீரே?"

"அது என்ன அப்படிப்பட்ட பாடல்?" என்று கரிகாலர் கேட்டார்.

"ஐயா! நீர் சொல்கிறீரா? நான் சொல்லட்டுமா?" என்று நந்தினி வந்தியத்தேவனைப் பார்த்து வினவினாள்.

"ராணி! அப்படி ஒரு பாடல் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லையே?" என்றான் வந்தியத்தேவன்.

"உமக்கு ஞாபகம் இல்லை. ஆனால் எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. நான் சொல்லுகிறேன் கேளுங்கள், ஐயா!

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில் — மான பரன்
பாவேந்தர் தம்வேந்தன் வாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி!

எப்படியிருக்கிறது பாட்டு! கோமகனே! தாங்கள் பாண்டியன் ஒருவனுடைய தலையை மட்டுமே கொண்டீர்கள். இந்த வீரருடைய முன்னோர்கள், சேர சோழ பாண்டியர்களுடைய தலைகளைப் பறித்துக் கொண்டு வந்து கழனியில் நடவு நட்டார்களாம்......!"

கரிகாலருடைய முகத்தில் அருவருப்பும் குரோதமும் தாண்டவம் ஆடின.

"நல்ல உழவு! நல்ல நடவு!" என்று சொல்லி விட்டு அவர் இடி இடி என்று வாய் விட்டுச் சிரித்தார்.

வந்தியத்தேவன் கரிகாலருடைய முகத்தையே ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. அவன் தட்டுத் தடுமாறி, "தேவி! இத்தகைய பாடல் ஒன்றைத் தங்களிடம் நான் சொல்லவே இல்லையே?" என்றான்.

"அதனால் என்ன? ஏற்கெனவே தெரிந்து கொண்டிராவிட்டால் உமது குலத்தின் பெருமையை இப்போதாவது தெரிந்து கொள்ளும்! அவ்வாறு முக்குலத்துவேந்தர்களின் முடிகளைப் பறித்து நட்ட வம்சத்தில் பிறந்தவர் கேவலம் காயம் பட்ட புலி ஒன்றின் தலையைக் கொண்டு வர முடியவில்லையே?" என்றாள்.

"தேவி! காயம்பட்ட அந்தப் புலி செத்துத் தொலைந்து போய்விட்டது. செத்த புலியின் தலையை வெட்ட நான் விரும்பவில்லை."

"அது எப்படி? புலி தத்தித் தத்திப் படகில் ஏறியதை நான் பார்த்தேனே?" என்றார்.

"நான்தான் அந்தக் காட்சியைத் தங்களுக்குக் காட்டினேன். படகில் ஏறிப் படுத்துக் கொண்ட பிறகு அது செத்துப் போயிருக்கிறது. பழுவூர் இளைய ராணியின் திருமேனியைக் காயப்படுத்தி விட்டோமே என்ற பச்சாத்தாபத்தினால் அது பிராணனை விட்டு விட்டதோ, என்னமோ?" என்றான் வந்தியத் தேவன்.

கரிகாலரின் முகத்தில் கடு கடுப்புச் சிறிது தணிந்து புன்னகை அரும்பியது.

"ஆனால் அது தண்ணீரிலேயே செத்துப் போயிருக்கலாமே? படகில் ஏறிச் சாக வேண்டியதில்லையே?" என்றார் கரிகாலர்.

"என்னைப் போல் அதற்கும் தண்ணீரைக் கண்டால் பிடிப்பதில்லை போலிருக்கிறது. எல்லாச் சாவுகளிலும் தண்ணீரிலே சாவதுதான் எனக்குப் பயமளிக்கிறது!" என்றான்

வந்தியத் தேவன்.

"ஆயினும் சற்று முன்னால் தைரியமாகத் தண்ணீரில் குதித்து விட்டீரே? இந்தப் பேதைப் பெண்களின் பேரில் அவ்வளவு கருணை போலிருக்கிறது!"

"தேவி! தண்ணீரைக் காட்டிலும் எனக்குப் பெண்களைக் கண்டால் அதிக பயம் உண்டாகிறது. இளவரசருடைய வற்புறுத்தலுக்காகத்தான் குதித்தேன். உண்மையில் அப்படிக் குதித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று இப்போது தெரிகிறது!" என்றான் வல்லவரையன்.

"ஆம், ஆம்! நீர் தண்ணீரில் விழுந்து சாவது பற்றித்தான் உமக்குப் பயம். பிறரை மூழ்க அடித்துச் சாகச் செய்வது பற்றி உமக்குப் பயமே இல்லை!" என்றாள் நந்தினி.

இந்தப் பேச்சுக்கள் ஒன்றும் மணிமேகலைக்குப் பிடிக்கவில்லை என்பது அவளுடைய முக பாவத்திலிருந்து நன்கு வெளியாயிற்று.

"அக்கா! சமைத்த உணவு ஆறிப் போய் விடும். வாருங்கள், போகலாம்!" என்றாள்.

நால்வரும் பளிங்கு மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். அப்போது இடையிடையே மணிமேகலை வந்தியத்தேவனை நோக்கினாள். அவனுடைய மனத்தில் ஏதோ சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இளவரசரும் நந்தினியும் அவனுக்கு ஏதோ தொல்லை கொடுக்கிறார்கள் என்றும் அவள் தன் உள்ளுணர்ச்சியால் அறிந்தாள். "யார் தங்களுக்கு எதிரியானாலும் நான் தங்களுடைய கட்சியில் இருப்பேன்; கவலைப்பட வேண்டாம்!" என்று நயன பாஷையின் மூலம் வந்தியத்தேவனுக்கு ஆறுதல் கூற முயன்றாள். ஆனால் வந்தியத்தேவனோ அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவன் கவலைக் கடலில் அடியோடு மூழ்கிப் போனவனாகக் காணப்படான்.

நந்தினி தேவியின் வஞ்சக வார்த்தைகளும் வந்தியத்தேவன் மீது அவள் சுமத்திய பயங்கரமான பழியும் இந்தக் கதையைத் தொடர்ந்து படித்து வரும் நேயர்களுக்கு அருவருப்பை அளித்திருக்கக் கூடியது இயல்பேயாகும்.

எனினும், நாம் அறிந்துள்ள வரையில் அவளுடைய பிறப்பையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நினைவு கூர்ந்தால் அவ்வளவாக வியப்பு அடைய மாட்டோம்.

மனிதர்களின் குணாதிசயங்கள் பரம்பரை காரணமாக இரத்தத்தில் ஊறியுள்ள இயல்புகளினால் அமைகின்றன; சூழ் நிலையினாலும் பழக்க வழக்கங்களினாலும் வாழ்க்கை அநுபவங்களினாலும் மாறுதலடைகின்றன.

ஊமையும் செவிடுமான மந்தாகினி காட்டிலே பெரும்பாலும் வாழ்ந்திருந்தவள். வன விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள அவள் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருந்தது. தான் உயிர் தப்புவதற்காகச் சில சமயம் அந்த மிருகங்களைக் கொடூரமாகக் கொல்ல வேண்டியும் நேர்ந்தது.

வெகு காலம் வரையில் பால்போல் தூய்மையாக இருந்த அவள் உள்ளத்தில் ஒரு சமயம் அன்பு என்னும் அமுத ஊற்றுச் சுரந்தது. விரைவில், அந்த ஊற்று வறண்டு அவளுடைய நெஞ்சத்தை வறண்ட பாலைவனம் ஆக்கியது. விதியின் விளையாட்டு அவளை ஒரு பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி விட்டது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி அவளுடைய புத்தியே பேதலித்துப் போகும்படி செய்துவிட்டது. எனினும், நாளடைவில் அவளுடைய நெஞ்சின் காயம் ஆறியது. அன்பாகிய அமுத ஊற்று மீண்டும் சுரந்தது. சுந்தர சோழரின் மீது கொண்ட காதலையெல்லாம் அவருடைய அருமைப் புதல்வனாகிய அருள்மொழிச் செல்வனிடம் பிள்ளைப் பிரேமையாக மாற்றிக் கொண்டாள்.

மந்தாகினியின் புதல்வியாகிய நந்தினியிடம் தாயின் குணாதிசயங்கள்


து. காந்தமென கவர்ந்திழுக்கும் தன்மையது.
Old Spice
TALC
CHAITRA-B OS 187 TAM R



பல இயற்கையில் தோன்றியிருந்தன. ஆனால் தாயை உலகம் வஞ்சித்ததைக் காட்டிலும் மகளை அதிகமாக வஞ்சித்தது. பெற்ற தாயினாலும் கைவிடப் பட்டாள். பிறர் வீட்டில் வளர்ந்தாள். காட்டு மிருகங்களினால் அன்னைக்கு ஏற்பட்ட தொல்லைகளைக் காட்டிலும் நாட்டு மனிதர்களால் மகள் அதிக கொடுமைகளுக்கு உள்ளானாள். இளம் பிராயத்தில் அரசகுலத்தினரால் அவமதிக்கப்பட்டதெல்லாம் அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்து நிலைத்து விஷத்திலும் கொடிய துவேஷமாக மாறியது. துவேஷத்துக்கு மாற்று அளிக்கக் கூடிய அன்பு என்னும் அமுதம் அவளுக்குக் கிட்டவில்லை. அவள் யார் யாரிடம் அன்பு வைத்தாளோ அவர்கள் ஒன்று அவளை அலட்சியம் செய்து புறக்கணித்தார்கள்; அல்லது துரதிர்ஷ்டத்துக்கு உள்ளாகி மாண்டு போனார்கள். அவளை அவமதித்தவர்களும், அவளால் வெறுக்கப்பட்டவர்களும் மேன்மையுடன் வாழ்ந்தார்கள். ஒரு பெண்ணின் உள்ளத்தை நஞ்சினும் கொடியதாக்குவதற்கு வேறு என்ன காரணங்கள் வேண்டும்? தன்னை வஞ்சித்தவர்களையும் அவமதித்தவர்களையும் பழி வாங்குவதைத் தவிர அவளுடைய உள்ளத்தில் வேறு எதற்கும் இடம் இருக்கவில்லை. அதற்கு வேண்டிய சூழ்ச்சித் திறன்கள் அன்னையின் கர்ப்பத்தில் இருந்த நாளிலேயே அவளுடைய இரத்தத்தில் சேர்ந்திருந்தன. வாழ்க்கையில் அவள் பட்ட அல்லல்களும் ஏமாற்றங்களும் பயங்கர அநுபவங்களும் அவளுடைய உள்ளத்திலிருந்து இரக்கம், அன்பு முதலிய மிருதுவான பண்புகளை அடியோடு துடைத்து இரும்பினும் கல்லினும் கடினமாக்கியிருந்தன.

இக் கதையில் இனி வரப் போகும் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்தக் குணாதிசய விளக்கத்தை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதி எழுதினோம்.

உணவருந்தும் வேளையில் அவர்களுக்குள் உற்சாகமான பேச்சு எதுவும் நடைபெறவில்லை. நந்தினியும், கரிகாலரும், வந்தியத்தேவனும் அவரவர்களுடைய கவலையிலே ஆழ்ந்திருந்தார்கள். இதனால் மணிமேகலைக்குத்தான் மிக்க ஆதங்கமாயிருந்தது. பழுவூர் ராணியுடன் உல்லாசமாகப் பேசி உற்சாகமாகப் பொழுது போக்கும் எண்ணத்துடன் அவள் அன்று நீர் விளையாடலுக்கும் வன போஜனத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தாள். இளவரசரும் வந்தியத்தேவனும் எதிர்பாராமல் வந்து சேர்ந்து கொண்டவுடன் அவளுடைய உற்சாகம் அதிகமாயிற்று. ஆனால் அதற்குப் பிறகு மற்ற மூவரும் பேசிய வார்த்தைகளும் நடந்து கொண்ட விதமும் அவளுக்குச் சிறிதும் திருப்தி அளிக்கவில்லை. நந்தினியையும் வந்தியத்தேவனையும் சேர்த்துப் பார்த்த போது ஏற்பட்ட வேதனையை அவளுடைய குழந்தை உள்ளம் உடனே மறந்து விட்டது. அதைப் பற்றித் தவறாக எண்ணி அசூயைக்கு இடங் கொடுத்தது தன்னுடைய தவறு என்று எண்ணித் தேறினாள். அதற்குப் பிறகு மற்ற மூன்று பேரும் கலகலப்பில்லாமல் சிடு சிடு வென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்ததும் கபடமாகப் பேசி வந்ததும் அவளுக்கு விளங்கவும் இல்லை; பிடிக்கவும் இல்லை.

எனவே, உணவருந்திச் சிறிது நேரம் ஆனதும் மணிமேகலை ''அக்கா! நாம் திரும்பிப் பிரயாணப்படலாமா? படகைக் கொண்டு வரச் சொல்லட்டுமா? இவர்கள் இருவரும்

நம்முடன் வருகிறார்களா? அல்லது குதிரைமீது வந்த வழியே போகிறார்களா?'' என்று கேட்டாள்.

அப்போதுதான் கரிகாலர் சிந்தனை உலகத்திலிருந்து வெளி உலகத்துக்கு வந்தார். ''ஆ! ஆ! இந்தப் பெண்ணின் யாழிசையைக் கேட்காமல் திரும்புவதா? ஒரு நாளும் முடியாது. நந்தினி! மறந்து விட்டாயா, என்ன? மணிமேகலை! எங்களை ஏமாற்றி விடாதே!'' என்றார்.

''அதை நான் மறக்கவில்லை. தங்களையும்தங்கள்சிநேகிதரையும்பார்த்தால் கானத்தைக் கேட்கக் கூடியவர்களாகத் தோன்றவில்லை. முள்ளின் மேல் நிற்பது போல் நிற்கிறீர்கள்! ஆயினும் பாதகமில்லை. மணிமேகலை! எங்கே! யாழை எடுத்துக் கொண்டு வா!'' என்றாள்.

''எதற்காக, அக்கா! விரும்பாதவர்களின் முன்னால், எதற்காக என்னை யாழ் வாசிக்கச் சொல்கிறீர்கள்?'' என்று மணிமேகலை சிறிது கிராக்கி செய்தாள்.

''இல்லை, இல்லை! இளவரசர் தான் கேட்பதாகச் சொல்லுகிறாரே? அவருடைய நண்பருக்குப் பாட்டுப் பிடிக்கா விட்டால் காதைப் பொத்திக் கொள்ளட்டும்'' என்றாள் நந்தினி.

''கடவுளே! அப்படியொன்றும் நான் இசைக்கலையின் விரோதி அல்ல! கோடிக் கரையில் பூங்குழலி என்னும் ஓடக் காரப் பெண்,

'அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?'

என்று ஒரு பாட்டுப் பாடினாள். அதை நினைத்தால் இப்போதும் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

''சில பேருக்குச் சிலருடைய பாட்டுத்தான் பிடிக்கும். என்னுடைய பாட்டு உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோ?'' என்றாள் மணிமேகலை.

''பிடிக்காமற் போனால், யார் விடுகிறார்கள்? அதற்கு நான் ஆயிற்று; நீ யாழை எடுத்துக் கொண்டு வா!'' என்றார் கரிகாலர்.

மணிமேகலை யாழை எடுத்துக் கொண்டு வந்தாள். பளிங்கு மண்டபத்தின் படிக் கட்டில் மேற்படியிலே உட்கார்ந்து கொண்டாள். நரம்புகளை முறுக்கிச் சுருதி கூட்டினாள். ஏழு தந்திகள் கொண்ட யாழ் அது. ஒவ்வொரு தந்தியிலும் பாதி வரையில் ஒரு ஸ்வரமும் அதற்கு மேலே இன்னொருஸ்வரமும்பேசக்கூடியது.

சிறிது நேரம் யாழை மட்டும் வாசித்து இன்னிசையைப் பொழிந்தாள். கரிகாலரும் வந்தியத்தேவனும் உண்மையிலேயே மற்றக் கவலைகளையெல்லாம் மறந்து விட்டார்கள். யாழின் இசையில் உள்ளத்தைப் பறி கொடுத்துப் பரவசமானார்கள்.

பின்னர், மணிமேகலை யாழிசையுடன் குரலிசையையும் சேர்த்துப் பாடினாள். அப்பர், சம்பந்தர், சுந்தரரின் தெய்வீகமான பாசுரங்களைப் பாடினாள்.

சிறிது நேரமானதும் இளவரசர், ''மணிமேகலை! உன்னுடைய கானம் அற்புதமாயிருக்கிறது. ஆனால் எல்லாம் பக்திமயமான பாடல்களையே பாடி வருகிறாய். அவ்வளவாக நான் பக்தியில் ஈடு பட்டவனல்ல. சிவ பக்தியையெல்லாம் மதுராந்தகனுக்கே உரிமையாக்கி விட்டேன். ஏதாவது காதல் பாட்டுப் பாடு!'' என்று சொன்னார்.

மணிமேகலையின் அழகிய கன்னங்கள் நாணத்தினால் குழிந்தன. சிறிது தயக்கம் காட்டினாள்.



பதிவு



— காயத்ரி க.ரேஷ்.

"பெண்ணே! ஏன் தயங்குகிறாய்? இங்கே நீ காதல் பாட்டுப் பாடினால் என்னை உத்தேசித்துப் பாடுகிறாய் என்று நான் எண்ணிக் கொள்ள மாட்டேன். என் சிநேகிதனும் எண்ணிக் கொள்ள மாட்டான். ஆகையால் தயக்கமின்றிப் பாடு!" என்றார் கரிகாலர்.

"அப்படி யாராவது எண்ணிக் கொண்டால் மணிமேகலை அதற்காகக் கவலைப் படவும் மாட்டாள்!" என்றாள் நந்தினி.

"போங்கள், அக்கா! இரண்டு புருஷர்கள் இருக்குமிடத்தில் இப்படிப் பரிகாசம் செய்யலாமா?" என்றாள் மணிமேகலை.

"இவர்கள் புருஷர்கள் என்று நீ நினைப்பதுதான் பிசகு. ஒரு செத்த புலியின் தலையைக் கொண்டு வர முடியாதவர்களை ஆண் பிள்ளைகள் என்று சொல்ல முடியுமா? முற்காலத்தில் தமிழ் நாட்டு வீர புருஷர்கள் உயிருடன் புலியைப் பிடித்து அதன் வாயைப் பிளந்து பற்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து தங்கள் நாயகிகளுக்கு ஆபரணமாகச் சூட்டுவார்களாம்! போனால் போகட்டும்! நீ பாடு! அன்றைக்கு என்னிடம் பாடிக் காட்டினாயே? அந்த அழகான பாட்டைப் பாடு!" என்றாள் நந்தினி.

மணிமேகலை யாழ் வாசித்துக் கொண்டு பின் வரும் கீதத்தைப் பாடினாள். அது என்னமோ, இத்தனை நேரம் பாடியதைக் காட்டிலும் இந்தப் பாட்டில் அவள் குரல் இணையற்ற இனிமையுடன் அமுத வெள்ளத்தைப் பொழிந்தது:—

"இனியபுனல் அருவி தவழ்
    இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
    கரம்பிடித்து உகந்ததெல்லாம்
கனவு தானோடி — சகியே
நினைவு தானோடி!

புன்னைமரச் சோலையிலே
    பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லி அவர்
    கன்னல்மொழி பகர்ந்ததெல்
                                        லாம்
சொப்பனந் தானோடி — அந்த
அற்புதம் பொய்யோடி?

கட்டுக்காவல் தான்கடந்து
    கள்ளரைப்போல் மெள்ள வந்து
மட்டிலாத காதலுடன்
    கட்டி முத்தம் ஈந்ததெல்லாம்
நிகழ்ந்ததுண்டோடி — நாங்கள்
மகிழ்ந்த துண்டோடி?"

இவ்வாறு மேலும் மேலும் பல கண்ணிகளை மணிமேகலை வெவ்வேறு பண்களில் அமைத்துப் பாடி வந்தாள். அந்தக்கான வெள்ளத்தில் மற்ற மூவரும் மூழ்கிப் போனார்கள். பல காரணங்களினால் நெஞ்சைக் கல்லிலும் இரும்பிலும் கடின மாக்கிக் கொண்டிருந்த நந்தினியின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. ஆதித்த கரிகாலர் இந்த உலகத்தை அடியோடு மறந்து விட்டார். வந்தியத் தேவன் அடிக்கடி திடுக்கிட்டு விழித்துக்

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)
9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017

இப்பொழுது செரிலாக்®
நன்மைகள் அடங்கிய காய்கறிகளுடன்





உங்கள் குழந்தைக்கு செரிலாக் அனுகூலம் அளிக்க இன்னுமோர் வழி



இதோ புதிய செரிலாக் வெஜிடெபிள்–கேரட் மற்றும் டொமேட்டோவின் நன்மைகள் நிறைந்தது. இப்பொழுது நீங்கள் குழந்தையின் வளரும் ருசிக்கேற்ப வெவ்வேறு விதத்தில் அளிக்கலாம்.

செரிலாக் வெஜிடெபிளில் எல்லா செரிலாக் அனுகூலங்களும் அடங்கியுள்ளது–ஒவ்வொரு ஊட்டத்திலும் முழுமையான போஷாக்கு, நற்சுவை மற்றும் உடனடி தயாரிக்கும் வசதி ஆகிய எல்லா அனுகூலங்களும் நிறைந்தது. நான்கு மாதங்களிலிருந்து உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. இதுவே அவனுக்கு செரிலாக் அனுகூலங்களை புகட்ட உகந்த வேளை. நான்கு மாதங்களிலிருந்து செரிலாக் வீட் கொடுக்க ஆரம்பியுங்கள். ஆறு மாதங்களிலிருந்து புதிய செரிலாக் வெஜிடெபிள் அல்லது செரிலாக் ஆப்பிள் அல்லது செரிலாக் ஆரஞ்சு–உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி கொடுங்கள்.

சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கவும். உங்கள் குழந்தைக்கு சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தவறு செய்யாது பின்பற்றுங்கள்.

செரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, ...ப்பான சுவை

Nestlé

RK SWAMY/FSL/5463 TAM

கொண்டவன் போல் மணிமேகலையை நோக்கினான். அப்போதெல்லாம் அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது கண்டு அந்த வீரனுடைய உள்ளம் மேலும் திடுக்கிட்டது. "ஐயோ! இந்தப் பெண்ணுக்கு நாம் என்ன தீங்கு செய்துவிட்டோம்?" என்று அவன் நெஞ்சம் பதை பதைத்தது.

கான வெள்ளத்திலும் உணர்ச்சி வெள்ளத்திலும் மூழ்கியிருந்தவர்கள் வரவரக் காற்று கடுமையாகிக் கொண்டு வருவதைக் கவனிக்கவில்லை. ஏரியில் முதலில் சிறிய சிறிய அலைகள் கிளம்பி விழுந்ததையும் வரவர அவை பெரிதாகி வந்ததையும் கவனிக்கவில்லை. காற்று கடும் புயலாக மாறிக் காட்டு மரம் ஒன்றை அடியோடு பெயர்த்துத் தள்ளிய போதுதான் நால்வரும் விழித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தார்கள். கடுமையான புயல் காற்று அடிப்பதையும் ஏரி கொந்தளித்துப் பேரலைகள் 'ஓ' என்ற இரைச்சலுடன் எழுந்து விழுவதையும் பார்த்தார்கள்.

திடீரென்று நந்தினி, "ஐயோ! படகு எங்கே?" என்று அலறினாள்.

கட்டிப் போட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை. உற்றுப் பார்த்தபோது வெகு தூரத்தில் படகு அலைகளால் மொத்துண்டு நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தது.

"ஐயோ! இப்போது என்ன செய்வது?" என்று நந்தினி அலறினாள்.

"உங்கள் இருவருக்கும் குதிரை ஏறத் தெரிந்தால் ஏறிப் போய் விடுங்கள், நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தப் புயல் காற்றில் காட்டு மரங்கள் பெயர்ந்து விழுந்து எங்களைச் சாக அடிப்பதற்கு வழி செய்கிறீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டாம். புயலின் வேகம் தணியும் வரையில் இங்கேயே இருந்து விடுவோம். அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்? சமையலுக்குப் பண்டங்கள் இருக்கின்றன; பாடுவதற்கு மணிமேகலை இருக்கிறாள். இவ்வளவு சந்தோஷமாகச் சமீபத்தில் நான் இருந்த



"டாக்டர் என் நாய்க்கு உடனே நாற்பது ஊசி போடணும்...!"

"நாய்க்கா...! எதுக்கு...?"

"என் மாமியாரைக் கடிச்சுடுச்சு...!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

தில்லை!" என்றார் கரிகாலர்.

"இளவரசே! அது சரியல்ல! சம்புவரையரும் கந்தமாறனும் என்ன நினைப்பார்கள்?" என்றான் வல்லவரையன்.

"இவரே புலியைத் தேடிச் சென்றபோது படகை அவிழ்த்துவிட்டு விட்டார் போலிருக்கிறது!" என்றாள் நந்தினி.

"அக்கா! ஏன் வீண் பழி சொல்கிறீர்கள்? இவர் வந்தபோது படகு கரையோரமாகத்தானே இருந்தது. யாரும் கவலைப்பட வேண்டாம். என் தந்தை இந்தப் புயல் காற்றைப் பார்த்ததும் நம் துணைக்குப் பெரிய படகுகளை அனுப்பி வைப்பார்!" என்றாள் மணிமேகலை.

அவள் கூறியது சற்று நேரத்துக்கெல்லாம் உண்மையாயிற்று. ஏறக்குறைய கப்பல் என்று சொல்லத் தக்க இரு பெரும் படகுகள் அத்தீவை நோக்கி வந்தன. அவற்றில் ஒன்றில் பெரிய சம்புவரையரே இருந்தார். நாலுபேரும் பத்திரமாய் இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

அவர்களை ஏற்றிக் கொண்டு அலை கடல் போல் பொங்கிக் கொந்தளித்த ஏரியில் இரண்டு படகுகளும் திரும்பிச் சென்றன. சம்புவரையரைத் தவிர, மற்ற நால்வரின் உள்ளங்களிலும் கடும் புயல் வீசிக் கொந்தளிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

"பொன்னியின் செல்வன்" நாலாம் பாகம் முடிவுற்றது. கடைசிப் பகுதியான ஐந்தாம் பாகம் அடுத்த இதழில் தொடரும்.

பிரிந்து

"இருடி இரு." என்று பாய்ந்து வந்து தடுத்தாள் மாமியார் பாக்கியம்.

உலையில் அரிசியைப் போடப் போன இளைய மருமகள் நாகு ஒரு நொடி நொடித்து விட்டு, "ஏன், என்னவாம்?" என்று கேட்டாள்.

ஏண்டி, நானும் பார்த்திட்டுத்தான் இருந்தேன். தடதடன்னு பழுங்கடத்திலிருந்து அரிசியை அள்ளினே; தண்ணி விட்டே; அப்படியே அள்ளி உலையில் போடறையே!" என்று வெடுக்கென அவள் கையிலிருந்த பாத்திரத்தைப் பறித்தாள்.

"ஏன், இதுக்கென்னவாம்?"

"என்னன்னா கேட்கிறே? கல்லு மண்ணு பொறுக்கலை; களையலை. இதை இப்படியே போட்டா எவன் சாப்பிடுவான்?"

"எல்லாம் நானும் அவரும் சாப்பிட்டுக்குவோம். இந்த நச்சு வேலையெல்லாம் செய்ய....

"என்னடி சொன்னே?" என்று இளைய மருமகளின் மோவாயில் ஓர் இடி இடித்தாள் மாமியார்க்காரி.

இத்தனையும் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்த சின்னவன் கன்னையா — நாகுவின் கணவன், "அம்மா!" என்று இடி முழக்கம் செய்தான். "நானும் பார்க்கிறேன். என்னதான் சின்ன மருமக — இல்லாத வீட்டுப் பொண்ணா இருந்தாலும், இப்படியா அம்மா கொடுமைப் படுத்தறது? அடுப்படி வேலைக்கெல்லாம் இவள். சும்மா அப்படி மேல் பார்க்கப் பெரிய மருமகள்! இல்லையா? ஏம்மா ஒரு கண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு?"

பாக்கியம் அப்படியே பிரமித்துப் போய் நின்றுவிட்டாள். சின்ன மகன் கன்னையா அவளுக்குத் தெரிந்து ஒரு நாள் கூட இப்படி அவளை எதிர்த்துப் பேசியவன் அல்ல. அபாண்டமாக வேறு இப்போது புரளி பண்ணுகிறான் என்றால் அவளால் பொறுக்க முடியவில்லை. "ஏண்டா, நானா ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் வைக்கிறேன்? உன் பெண்டாட்டியை மட்டுமா அடுப்படி வேலைக்கு விடுகிறேன்? ஒரு வாரத்துக்குப் பெரியவன்னா மறு வாரத்துக்கு இவள் சமைக்கிறாள். ஊமைக் கோட்டான் மாதிரி நிற்கிறாளே, கேளேன்!"

சின்ன மருமகள் நாகு கண்ணைக் கசக்கினாள். "நான்தான் ஊமைக் கோட்டான், நட்டுவாக்கிளி, கட்டுவிரியன். என் தலையெழுத்து. இல்லாததையும் பொல்லாததையும் கேட்டுக்கிட்டு இந்த வீட்டிலே இடிபடணும்னு இருக்கு.

"செய்கிறதை ஒழுங்காய்ச் செய்தால் நீ ஏன் இடிபடணும்? நீலிக் கண்ணீர் வடிக்கிறே? மாய்மாலமா பண்றே?" என்று கையை ஓங்கினாள் மாமியார்க்காரி.

வெடுக்கென்று தாயின் கையை ஒதுக்கினான் கன்னையா. "இதோ பாரம்மா, இன்னொருவாட்டி அவள் மேல் கையை வைச்சே, அப்புறம் நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். நீ வா நாகு." என்று பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு மூன்றாம் கட்டுப் பக்கமாய்ப் போய்விட்டான்.

பேச வாய் வராமல் தூணில் சாய்ந்து, சரிந்து அப்படியே உட்கார்ந்துவிட்டாள் பாக்கியம்.

நிலம் நீச்சு என்று பெரியவர்கள் விட்டுச் சென்றதைச் சிறுகச் சிறுக விருத்தி செய்து, இரண்டு பையன்களுக்கும் கல்யாணம் பண்ணி வைத்து, ஒரு பெண்ணையும் மண முடித்து அனுப்பி விட்டு, நாலு கட்டு வீட்டிலே அவிபக்த குடும்பமாய்க் கலகலவென்று குழந்தை குட்டிகளோடு வாழலாம் என்று ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தார் மாணிக்க வேலு.

பெரியவன் தயாநிதி ஏதோ ஹைஸ்கூல் படிப்பு வரை எட்டிப் பிடித்தான். அதற்கு மேல் வக்கரித்துக் கொண்டு, டவுனில் ஃபான்ஸி சாமான் கடை வைத்துக் கொடு என்று முரண்டு பிடித்து, ஒரு கடை போட்டுக் கொண்டான். பையன் பார்ப்பதற்கு லட்சணமாய் இருப்பான். வாயடிக்கும் பஞ்சமில்லை. அதைப் பார்த்துப் பார்த்து டவுனில் ஷராப் கடைக்காரர் ஒருத்தர் தன் ஒரே பெண்ணை வலிய வந்து கொடுத்து விட்டார். எல்லாம் அந்தப் பொண்ணுக்கும் இவனுக்கும் ஏற்பட்ட சிநேகம் என்று பேச்சு. எப்படியோ போகட்டும். நகை நட்டோடு வந்த பணக்கார வீட்டுப் பெண் எப்படியிருக்குமோ ஏதோ என்று மாணிக்கவேலு தம்பதி மறுகிக் கொண்டிருந்தபோது, அவர்களைத் திகைக்க வைப்பதைப் போல அப்படிப்

எஸ். சகுந்தலா

பட்டதொரு குடும்பப் பாங்கான அடக்க வொடுக்கமான பெண்ணாக வந்து சேர்ந்தாள், பெரிய மருமகள் மீனா.

சின்னவன் திருமணத்தைப் பற்றி யோசிக்கும் வேளை வந்தது.

பாக்கியத்தின் தம்பியொருவன் இறக்கும் தருவாயில், 'அக்கா, எப்படியும் என் பெண் நாகுவை உன் மருமகளாக்கிக்க,' என்று வாக்குப் பெற்றுக் கொண்டிருந்தான்.

அதனால்தான் தங்கள் அந்தஸ்துக்குக் குறைந்த இடம் என்றாலும் பொருட்படுத்தாமல் நாகுவைத் தன் இளைய மருமகளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள் பாக்கியம்.

ஆரம்பத்தில் இரண்டு மூன்று மாதங்கள் வரை மீனாவும் நாகுவும் அக்கா தங்கைகள் மாதிரி இழைவதையும் அவர்கள் வீட்டில் போட்ட கும்மாளத்தையும் கண்டு பாக்கியம்

வைத்தவள்



பூரித்துப் போனதுண்டு.


பெரியவனைப் போல் சின்னவன் கன்னையாவுக்கு அத்தனை வாயடி கையடி கிடையாது. சின்னவன் காடு கழனியிலேயே வேலை செய்யப் பிடிக்காமல் பட்டறை ஒன்றில் வேலை பார்த்து வந்தான். கல்யாணத்துக்கு முன்பு வரை பேதம் காட்டாமல் வாழ்ந்து கொண்டிருந்தவன், கொஞ்ச நாட்களாகத் தனக்குத் தனியாகப் பட்டறை போட்டுத் தரும்படி பெற்றோரை நச்சரிக்க ஆரம்பித்திருந்தான்.

கேட்டால், "உங்களுக்கு மத்தவங்களைப் பற்றி என்ன அக்கறை? உங்க பணக்கார மருமக ஒவ்வொரு தடவையும் தாய் வீடு போயிட்டு வந்தால் ஏதாவது நகை நட்டுன்னு பூட்டிட்டு வர்றாள். இவளுக்கு அப்படியெல்லாம் வரிசை செய்றதுக்கு வசதியான பெத்தவங்க கிடையாது. அதுக்காக நாம் சும்மா இருந்துட முடியுமா? என் பெண்டாட்டிக்கு நான் நகை நட்டுகளாய் வாங்கிப் பூட்டணும். அதுக்கு நானும் நாலு காசு சம்பாரிக்கணும்," என்று மூச்சு விடாமல் பேசித் தீர்த்துவிட்டான் கன்னையா.

உண்மையில் மாணிக்கவேலுவுக்கு அதுவரையில் தன் வீட்டில் இப்படியெல்லாம் ஒரு கலாம் புலாம் நடந்து கொண்டிருக்கிறது என்ற சங்கதியே தெரியாது. அவருண்டு, நிலம் நீச்சு உண்டு, லேவா தேவியுண்டு என்று இருந்து கொண்டிருந்தார். தன் மனைவிக்கு நிம்மதி கொடுத்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தவருக்கு, இப்படியொரு சிக்கலில் அவள் புழுங்கிக் கொண்டிருக்கிறாள் என்ற விவரமே போதுமான எரிச்சலை மூட்டிற்று.

"அது சரி. நாமும் இருக்கிற ஜாக்கிரதையில் இருந்துக்க வேண்டியதுதான். இருக்கிறதைப் பிரித்துக் கொடுக்க என்னிக்குமே நான் தயாராய் இருக்கிறேன். குஞ்சுகளுக்கு இறக்கை முளைச்சாச்சு. பறக்க வேண்டியதுதானே? இரண்டு பேரையுமே தனிக் குடித்தனம் போயிடச் சொல்லு," என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

பாக்கியம் முதற்கொண்டு அக்கம் பக்கத்தில் உள்ள அத்தனை பேரும் நாகுவைக் கரித்துக் கொட்ட ஆரம்பித்து விட்டார்கள்.



— ஆர். வசந்தகுமார்

''இந்தக் கோடாரிக் காம்பு என்னிக்கு வீட்டிலே அடியெடுத்து வைச்சதோ அன்னிக்கே குடும்பத்தைக் கூறு போட்டுட்டது!''

இத்தனை பிரிவினைக்கும் காரணமாய் இருந்த நாகுவோ எதிலும் கலந்து கொள்ளாமல் ஒரு மூலையில் ஒடுங்கிப் போயிருந்தாள்.

பெரியவன் தயாநிதி தன் மனைவி மீனாவைக் கூட்டிக் கொண்டு நகர்ப்புறத்துக்கே போய் விட்டான்.

சின்னவன் கன்னையா, சொந்தப் பட்டறையையும் விட்டையும் ஒரே இடத்தில் வைத்துக் கொண்டு ஊருக்கு ஒதுக்குப்புறமாய் உள்ள லாரி ஸ்டாண்டு பக்கம் குடி பெயர்ந்து விட்டான்.

இரண்டு மகன்களைப் பெற்றும் தன்னந்தனியாய் மன்றாடிக் கொண்டிருந்தாள் பாக்கியம். தன் குடும்பத்தையும் தன்னையும் தாங்கப் போகிறாள்; தன் வீட்டுக்கு வந்த லக்ஷ்மியென்று எவளை நம்பிக் கொண்டிருந்தாளோ அந்த நாகு — தன் சொந்தத் தம்பி மகள் — இப்படி குடும்பத்தை வெட்டிப் பிரித்து விட்டாளே என்று அவள் நெஞ்சுக்குள் புழுங்காத நாளே கிடையாது. அந்தப் புழுக்கத்தை அக்கம் பக்கத்தில் எவரிடமாவது ஒரு முறை சொல்லி அழுதால்தான் அவளுக்கு வேலையே ஓடும்.

அன்றைக்கும் பாக்கியம் அதற்காகத் தான் கோடி வீட்டுக்குப் போயிருந்தாள். அந்த அம்மாளும் வேலை வெட்டியில்லாமல் பேசிக் கொண்டிருந்தாள். நேரம் போவது தெரியாமல்.

திடீரென்று பாக்கியம், ''பார்த்திங்களா? வெய்யில் உச்சிக்கு வந்துட்டதே. கிணத்தடியிலே எல்லாம் 'போட்டது போட்டபடி இருக்கு. இனிமேல்தான் அடுப்பை மூட்டணும். வீட்டைத் திறந்து போட்டுட்டு வந்திருக்கேன் அப்படியே. அங்கே யார் வந்தாங்களோ, என்ன போச்சோ,'' என்று அங்கலாய்த்துக் கொண்டவளாய் எழுந்தாள்.

நேரே கிணற்றடிக்குப் போனவள் அப்படியே திகைத்துப் போய் நின்றாள். அங்கே ஒரு சாமான் சட்டு கிடையாது! துடைத்து மெழுகினாற் போல் சுத்தமாய் இருந்தது. தொட்டியில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அழுக்குத் துணிகளைச் சுத்தமாய்த் துவைத்து உலர்த்தியிருந்தது. அடுப்படியிலிருந்து எழுந்த தாளித மணம் அவளை அங்கு ஈர்த்தது. இனம் தெரியாததொரு பரவசம் அவளை ஈர்க்க, அடுப்படிக்கு விரைந்தாள் அவள்.

அவள் காண்பது கனவல்ல. அவளுடைய தம்பி மகள் நாகுதான் பாங்காக எல்லா வேலைகளையும் செய்து முடித்திருந்தாள். இவளுக்கு இவ்வளவு வேலைகள் தெரியுமா? நேரில் கண்ட அவளது சாமர்த்தியத்தை ஒருபுறம் வியந்தாலும், அவளால் நேர்ந்த பிளவை மாமியார் மன்னிக்கத் தயாராய் இல்லை. ''ஏண்டி, உன்னைத் தானே? யாரைக் கேட்டுட்டு இந்த வீட்டிலே அடியெடுத்து வச்சே? எந்த முகத்தோட இந்த வீட்டில் நுழைஞ்சே?'' என்று கத்தினாள் அவள்.

இதைக் கேட்டு நாகு கொஞ்சமாவது துணுக்குற்றதாகவோ பதறியதாகவோ தெரியவில்லை. தான் தாளித்து இறக்கி வைத்த குழம்பில் கொஞ்சம் போல் கரண்டியில் முகந்து எடுத்து வந்து, ''உப்புக் காரம் சரியா இருக்குதா, பார்த்துச் சொல்லுங்க அத்தே....'' என்று நீட்டினாள்.

ஓங்கி அதைத் தட்டி விட்டு விட்டு பாக்கியம், ''நாங்க உப்புக் காரத்தோடு சாப்பிட்டுக்கிட்டுதான் இருக்கிறோம். நீங்க இல்லாததால் எதுவும் கெட்டுப் போகலை,'' என்றாள்.

''தெரியுமே, எனக்கு. உப்புக் காரம் அதிகமாப் போட்டு வளர்த்துத்தானே உங்க சின்ன மகனை அப்படி ஆக்கி வச்சிருக்கீங்க?'' என்று பதிலடி கொடுத்தாள் அவள்.

இதற்குள் நடை வாசல் பக்கம் அக்கம் பக்கத்துத் தலைகள் இரண்டொன்று தெரியவே, நாகு விடுவிடுவென்று வாசலுக்கு விரைந்து அவர்கள் முகத்தில் அறைவதைப் போல் படீரென்று கதவைச் சாத்தினாள்.

திரும்பி வந்தவள் தடாரென்று பாக்கியத்தின் காலில் விழுந்து பற்றிக் கொண்டாள்.

நாகு நிமிர்ந்த போது அவள் கண்கள் குளமாகியிருந்தன. ''அத்தே, உங்களை நான் எப்படி வேதனைப்படுத்திட்டேன்னு எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அத்தே, நான் இந்தக் குடும்பத்தைப் பிரிச்சவள், உங்களுக்கெல்லாம் துரோகம் பண்ணினவள்னு யார் வேணா என் மேல் மண்ணை வாரித் தூத்தட்டும். எனக்கு அக்கறை இல்லை. ஆனா நீங்க ஒருத்தர் மட்டுமாவது என்னைப் புரிஞ்சிக்கிட்டாப் போதும்,'' என்றாள்.

''இதுவரைக்கும் என் மேல் குறை சொல்லி உன் வீட்டுக்காரன் மனசைக் கெடுத்தே. இப்போ அவன் மேல் குறை சொல்ல வந்திருக்கியாக்கும்? அதுதான் என்னமோ ஆரம்பிச்சியே நாங்க சின்னப்

பிள்ளையை வளர்த்ததைப் பத்தி?'' என்று மாமியார் அவளாகவே அடியெடுத்துக் கொடுத்தாள்.

''அத்தே, பொறாமைங்கறது பொண்ணுக்கு மட்டும்தான் சொந்தம்னு நினைச்சிட்டிருக்கீங்களா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. அண்ணனைப் போல் தனக்கும் எல்லாம் செய்யணும்னு உங்க சின்ன மகன் நான் வர்றதுக்கு முன்னாடி எப்பவும் உங்களைக் கேட்டது கிடையாதா?''

நிஜமாகவே பாக்கியத்தின் நெஞ்சில் சுரீரென்று எதுவோ பாய்ந்ததைப் போலிருந்தது. உண்மைதான். தயாநிதிக்கு ஒன்றைத் தனியாகச் செய்தால் கன்னையாவின் முகம் கூம்பிப் போவதை ஜாடை மாடையாகக் கண்டிருக்கிறாள். நேரிடையாகப் பல முறை அனுபவித்திருக்கிறாள்.

''மீனா அக்கா நகை நட்டோடு வர்றதைப் பார்த்து நான் மனசுக்குள் ஏங்கறதா அவர் சொன்னதுக்குப் பொறுப்பு அவர்தானே தவிர, நானல்ல. அந்த எண்ணம் — சத்தியமாச் சொல்றேன் — அது அவருக்குத்தானே தவிர எனக்கல்ல.''

''அப்படிப்பட்ட உத்தமிதான் இன்னிக்குக் குடும்பம் பிரிஞ்சு போகக் காரணமா இருந்திருக்கிறே, இல்லே?'' என்று பொருமினாள் பாக்கியம்.

''குடும்பம் பிரியறதுக்கு நான்தான் காரணம்னு ஒப்புக்கறேன் அத்தே. எல்லாம் உங்க பிள்ளையோட நல்லதுக்காகத்தான். இன்னும் கொஞ்ச நாள் இங்கே அவர் இருந்திருந்தா, அக்காவோட சீர் சிறப்பைப் பார்த்துப் புழுங்கிப் புழுங்கி ரத்தக் கொதிப்பே வந்திருக்கும். முடிஞ்ச வரைக்கும் அவங்க நினைப்பு இல்லாம இருந்தாத்தான் நான் அவரை ஒழுங்காப் பார்க்க முடியும். உங்களுக்குத் தெரியாது அத்தே. எத்தனை ராத்திரி அவர் தூங்காமல் அவங்களைப் பத்தியே தனக்குள்ளே பேசிட்டிருந்திருக்கார் தெரியுமா? அத்தே. நீங்களே சொல்லுங்க. என் புருஷனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே பார்க்கறதை விட அவரோட இப்படித் தனிக் குடித்தனம் போயாவது வாழணும்னு நான் ஆசைப் பட்டது பிசகா?''

''பிசகே இல்லை நாகு... ஆனா அந்தப் பாவி. நீ இங்கு வந்தது தெரிஞ்சா, உன்னை என்ன பண்ணுவானோ?''

''ஹூம். அவரை எப்படி எப்படித் தட்டித் திருப்பி வழிக்குக் கொண்டு வரலாம்னு எனக்குத் தெரியும்'' என்றாள் நாகு. ''போன ஒரு வாரமாய் மந்திரம் போட்டு அவரே, 'அம்மா எப்படியிருக்கிறாங்கன்னு போய்ப் பார்த்து விட்டு வா'ன்னு சொல்ல வச்சிட்டேனாக்கும்!''

''இதே மாதிரி பெரியவனையும் அவன் பெண்டாட்டியையும் கூட்டிட்டு நீங்க ரெண்டு பேரும் இந்த வீட்டுக்குள்ள என்னிக்கு வரப் போறீங்க?'' என்று கேட்டாள் மாமியார் ஆவலோடு.

''கூடிய சீக்கிரம். அதுவரைக்கும் நான் மாத்திரம் வந்து வீட்டு வேலையைக் கவனிச்சிட்டுப் போறேன். அத்தே, வரேன்,'' என்று விடைபெற்றாள் அந்த அழுத்தக்கார மருமகள்.

கோகுலம்

ஜீன் இதழில்



தேசபந்துவின்

சித்திரத் தொடர்கதை

ஆரம்பம்

அப்பா உசத்தியா,
அம்மா உசத்தியா?

— ஒரு பாலர் பட்டிமன்றம்



சுகபோகத் தீவுகள்

"இன்னாப்பா, கிருஷ்ணமூர்த்தி! இன்னிக்குச் சாயங்காலம் ஏதாவது வேலை இருக்கா உனக்கு?" என்றார் கல்வி அமைச்சர். வெளியே புறப்படும் கோலத்தில் இருந்தார் அவர். சுருட்டை முடியைச் சீவியிருந்தார். அதி வெள்ளையில் இருகரை வேஷ்டியும், தோளில் மடித்துப் போடப்பட்ட சால்வையுமாக இருந்தார் அவர். வீட்டில் இருக்கையில், மடித்துக் கட்டப்பட்ட கைலியும், பனியனும்தான் அவர் ஆடையாக இருக்கும். எப்போதும் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் கண்கள் அவருக்கு. அது இயற்கை அவருக்குத் தந்திருக்கும் கொடை என்றே அவர் நினைத்தார். எதைப் பற்றி என்ன நினைக்கிறார் என்றே யாரும் கண்டுகொள்ள முடியாத கண்கள் அவருக்கு.

"எதுக்கு சார் கேக்கறீங்க? எனக்கொரு வேலையும் இல்லை" என்றான் கிருஷ்ணமூர்த்தி.


"அப்போ, என்னுடன் வா. ஏதோ ஒரு பள்ளிக் கூடத்தில் ஆண்டு விழா நடக்கிறது. நான் பரிசு கொடுத்து மாணவர்களைப் பாராட்டிப் பேச வேண்டியிருக்கிறது. உனக்கும் பொழுது போகும். ஏதோ என்னிடம் பேச வேண்டும் என்றாயே, அதையும் பேசி முடித்து விடலாம். என்ன, வருகிறாயா? ஏம்பா, எங்கே அந்த செக்ரடரி? அந்தக் கூட்டத்திலே நான் பேச வேண்டியதைத் தயார் பண்ணிட்டியா?"

கிருஷ்ணமூர்த்தி அவருடன் புறப்பட வேண்டியதாகி விட்டது. உதவி கோரி யாரிடம் போனாலும், அவர் விருப்பப்படி இயங்குவதுதானே, மரபு? தவிரவும், அவன் மேற்கொண்டிருக்கும் வேலை, விநோதினி சம்பந்தப்பட்டது அல்லவா?

அது ஒரு தனியார் பள்ளிக்கூடம். தலைநகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வியாபாரங்களில், சாராயத்துக்கு அடுத்தபடியான வியாபாரம். குறுகிய காலத்தில், வியாபாரம் சூடு பிடித்து, இரண்டு மூன்று இடங்களில் பள்ளிக் கூடத்தின் கிளைகளைத் திறந்திருந்தார்கள் அவர்கள். ஆயிரக்கணக்கான மாணவர்கள் குழுமி இருந்த அந்தக் கூட்டத்தில், பேச்சு, பாட்டு, விளையாட்டு போன்ற துறைகளில் சிறந்தவர்களுக்குக் கல்வி அமைச்சர் பரிசுகள் வழங்கினார். "பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பேசச் சொல்லுங்கள், பார்ப்போம்" என்று கேட்டுக் கொண்டார் கல்வி அமைச்சர். 'காசு கொடுத்துச் சூனியம் வைத்துக் கொள்வது' என்பார்களே, அது போன்று அமைந்து விட்டது அது.

பேச வந்த இளைஞனுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயது இருக்கும். களையான முகம். மேடையில் அவன் தாவி ஏறிய பாங்கே அவனது இளமையை, உற்சாகத்தை வெளிப்படுத்துவதாய் இருந்தது. மைக்கின் முன் கம்பீரமாக அழகாகச் சென்று நின்றான் அவன். ஆகாயத்தில் ஆசனம் போட்டு அமர்ந்திருப்பவன் போல, அவன் கூட்டத்தைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்.

"என் அன்புக்கும், தோழமைக்கும், நம்பிக்கைக்கும் உரிய மாணவ சமுதாயமே! உனக்கு முன் நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டு விடைபெறுகிறேன். உங்களில் பலர் பல அரசியல் இயக்கங்களில் பங்கு கொண்டிருக்கிறீர்கள். அது உங்கள் உரிமை! அதில் தலையிட நான் தயார் இல்லை. எனினும், உங்களின் தலைவர்கள் உங்களைக் கருவேப்பிலைகளைப் போல, காரியம் ஆக, கொடி பிடித்துக் கோஷம் போட, ரகளை விளைவிக்கப் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர, உங்களுக்கு அவர்கள் செய்த உதவிதான் என்ன? படித்து வெளிவந்த பிறகு, உங்களின் தலையாய பிரச்னையாக இருக்கப் போகிற வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு இந்தத் தலைவர்கள் என்ன செய்தார்கள், என்ன செய்யப் போகிறார்கள்? இன்று, நாக்கில் தேனைப் பூசிக் கொண்டு இளைய நண்பர்களே என்று அழைப்பவர்கள், நீங்கள் அவர்களின் உதவி கோரி அவர்களின் அலுவலகத்துக்குச் சென்றால், அவர்கள் உங்களை ஆதரிப்பார்கள் என்று நினைக்



20


கிறீர்களா? ஒருகாலும் இல்லை. அலட்சியமே செய்வார்கள். இதோ இங்கிருக்கும் கல்வி அமைச்சரையே நாம் சென்று பார்த்து நம் கோரிக்கைகளைச் சொல்லச் சென்றோமே, என்ன நடந்தது? அரை நாள் காத்திருந்து, நாம் அலுத்த பிறகு ஒன்றை நிமிஷங்கள் அவர் நம்முடன் பேசினார். கோரிக்கைகளைக் கவனிப்பதாகச் சொன்னார். கவனித்தாரா? இல்லை. நம் கோரிக்கைகள் குப்பைத் தொட்டிக்கே சென்று விட்டன.

''மாணவ சமுதாயமே! ஒன்றை நினைத்துப் பார். ஒரு காலத்தில், மகாத்மா காந்தி என்றும், நேதாஜி என்றும், நேரு என்றும், சாஸ்திரி என்றும், ராஜாஜி என்றும், காமராஜர் என்றும் எத்தனை மாமனிதர்கள் வாழ்ந்தார்கள்? அந்த மகத்தான மனிதர்கள், முதலில் சொந்த வாழ்க்கையில் மகத்தானவர்களாக வாழ்ந்தார்கள். அப்புறம் அரசியல்வாதியாகத் திகழ்ந்தார்கள். அவர்களுக்கு வாழ்க்கைத் தருமம் இருந்தது. அந்த தருமம் அரசியலில் பிரதிபலித்தது. நம் காலத்தில், நமக்கு முன் உதாரணமாகத் திகழத்தக்க மனிதர் யாராயினும் இருக்கிறார்களா, என்ன? எனக்குச் சொல்லுங்கள். உங்கள் தலைவர்களுக்கு, அவர்கள் அரசியல்வாதிகள் என்பது தவிர வேறு அடையாளம் இருக்கிறதா? யாரோ சொன்னார்களே, அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல் என்று. அதை நான் மறுக்கிறேன். அயோக்கியர்களின் கர்ப்பப் பையே அரசியல்தான் என்று நான் உள்ள படியே கருதுகிறேன்....''

ஆயிரம் மாணவர்கள் இரண்டாயிரம் கைகளைத் தட்டிப் பேரொலி எழுப்பினார்கள். கல்வி அமைச்சர் முகம் கிழக்கு வானமாய்ச் சிவந்து, கோபச் சூரியனைப் பெற்றெடுத்தது. அவர் எழுந்தார். தம் பாதுகாப்பாளருடன் தம் காரை நோக்கி விரைந்தார். பள்ளிக் கூடக் கரஸ்பாண்டெண்ட்டும், பிரின்ஸ்பலும் அமைச்சரின் இரு பக்கமும், அஞ்சி, புலியைக் கண்ட காட்டுவாசி மாதிரி பின்தொடர்ந்தனர்.

''சார்... சார்.... அந்தப் பையன் அந்த மாதிரி பேசுவான் என்று எதிர்பார்க்கலை சார். போட்டியில் அவன் பேசினதே வேறே. தேசிய ஒருமைப்பாடு பற்றித்தான்

பிரபஞ்சன்



அவன் பேசினான். பேமானி, இன்னைக்கு மாத்திப் பேசிட்டான். நான் அவனை டிஸ்மிஸ் பண்ணிடறேன், சார்...'' என்றார் கரஸ்பாண்டென்ட். கட்சிக்காரரான அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அமைச்சர், தம் காரில் போய் அமர்ந்தார். ''வண்டியை எடுடா...'' என்றார், டிரைவரிடம். ரொம்ப தூரம் வரும் வரை அவர் பேசவில்லை. அந்தச் சமயத்தில் பேசுவதும் அவ்வளவு சரியாக வராது என்று தோன்றிக் கிருஷ்ணமூர்த்தியும் மிக அமைதி காத்தான்.

''உம்... அந்தப் பையன் பேரு என்ன?''

''எந்தப் பையன் சார்?'' என்றார் முன் சீட்டில் இருந்த அவர் பி.ஏ.

''மேடையில் தாறுமாறாகப் பேசினானே, அந்தப் பையன்தான்.''

''ஸ்டாலின் சக்திவேல் சார்...''

''ம். நினைச்சேன். அந்தப் பையன் கம்யூனிஸ்ட்டா அதுவும் நக்ஸலைட்டா இருப்பான்னு நினைக்கிறேன். யோவ், பி.ஏ. போலீஸ்கிட்டே சொல்லி, அவனை வாட்ச் பண்ணச் சொல்லுயா. என்ன?''

''சரி, சார்.''

''நீ என்ன சொல்றே, கிருஷ்ணமூர்த்தி?''

''அவனை வாட்ச் பண்றதா இருந்தா, இந்த நாட்டில் இருக்கிற லட்சக்கணக்கான இளைஞர்களை நாம் வாட்ச் பண்ண வேண்டியிருக்கும். இந்த வயது வரம்புக்குள் இருக்கிற இளைஞர்கள், சற்றேறக் குறைய அத்தனை பேருமே, இந்த மாதிரி சிவப்புச் சிந்தனைகளோடுதான் இருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் இருந்து பார்த்தால் அந்த உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.....''

''என்னையா, சொல்றே நீ? இந்த மாதிரி பயல்களை வளர விட்டால், நாளை நமக்கு ஆபத்து ஐயா. முளையிலேயே போலீசைக் கொண்டு கிள்ளி எறிய வேண்டாமா?''

''அது முடியாது சார். எந்தக் கொம்பன் வந்தாலும், நியாய உணர்ச்சிகளுக்கு, தார்மீக ஆவேசத்துக்கு யாரும் தடை போட முடியாது. அஸ்தமிக்காத 'சூரியர்கள் நாங்கள் என்று கொக்கரித்தார்களே வெள்ளைக்காரர்கள், அந்த வெள்ளைக் கொக்குகளை எந்தச் சக்தி விரட்டியடித்தது? அந்தக் காலத்து இளைஞர்களின் தார்மீக ஆவேசம் தான் அதைச் சாதித்தது. அவர்களின் ரத்தம்தான். அவர்களின் வியர்வைதான். இதை நாம் சௌகர்யமாக மறந்து விடக் கூடாது.''

''என்னமோ, போ. முதல்வருக்கு என்றால், அருமையான ஐடியாவை எல்லாம் தர்றே. எனக்கு மட்டும்னா, என்னை அவமானப்படுத்தறவனுக்கு ஆதரவா பேசறே...''

''சார். ஒன்று செய்யுங்களேன். அந்தப் பையனையே அழைத்துப் பேசிப் பாருங்கள். உங்களால முடிந்தால், அவனை உங்கள் வழிப்படுத்துங்கள். இல்லையென்றால், நீங்கள் அவன் வழிப்படுங்கள்.''

கல்வி அமைச்சர் அவனைக் கோபமாகப் பார்த்தார்.

''சரி... என்னமோ என்னிடம் பேச வேண்டும் என்றாயே. சொல்...'' என்றார் அவர்.

''என் சிநேகிதி ஒருத்திக்கு, உங்கள் இலாகாவில் ஏதேனும் வேலை போட்டுக் கொடுக்க வேண்டும்.''

''என்ன குவாலிபிகேஷன்...''

''எம்.ஏ. எம்.ஃபில்.''

''பெண் இப்போ எங்கிருக்கிறாள்?''

''டில்லியில்.''

''யார். அந்த வினோதினியா?''

கிருஷ்ணமூர்த்தி திகைத்தான்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''முதலமைச்சர் ஒருமுறை இது பற்றி என்னிடம் சொன்ன ஞாபகம்.''

''என்னவென்று சார்?''

''கோகிலாவின் பெண் கொஞ்சம் சண்டித்தனம் செய்கிறவள். நம்மைக் கூட மதிக்காமல், பெற்ற தாயை மதிக்காமல், டில்லியில் போய் வாழ்கிறாள் என்று.''

''சண்டித்தனம் என்றால்?''

''தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பது.''

''முதல்வருக்கு அது எப்படித் தெரிந்திருக்கக்கூடும்?''

''அவள் அம்மா அது பற்றிப் பேசி இருக்கக்கூடும். ஒரு கட்டத்தில் நம் கட்சியின் மாதர் பிரிவுக்கு அவளைக் கொண்டு வர அவர் விரும்பினார் என்பது எனக்குத் தெரியும். சரிப்பா! ஏதாவது கல்லூரியில், அல்லது தமிழ் வளர்ச்சித் துறை மாதிரி ஏதாவது. அமைப்பில் வேலை போட்டுக் கொடுக்கலாம். ஆனால் அவள் வர மாட்டாள். வீணாக உன் மூக்கையும் உடைத்துக் கொண்டு, என் மூக்கையும் உடைக்காதே!''

''முதலில் நீங்கள் வேலை போட்டுக் கொடுங்கள். அவளை இங்கு கொண்டு வருவது என் பொறுப்பு.''

அமைச்சருக்கு இரண்டு தோல்விகள் ஏற்பட்டன.

மாணவன் ஸ்டாலின் சக்திவேலை அழைத்து அவர் பேசியதாகவும் அவன் அவரைத் தூக்கி எறிந்து பேசி விட்டதாகவும், கிருஷ்ணமூர்த்திக்குத் தகவல் வந்தது. அவன் சொன்னானாம்.

''சார்... உங்கள் அரசியல், உங்கள் கொள்கை, உங்கள் தத்துவம் இவற்றின் மீது எனக்கு ஒரு நயா பைசா அளவுக்குக் கூட மரியாதை கிடையாது. ஆகவே, நீங்கள் எனக்குத் தருவதாகச் சொல்லும் மாணவர்

''எவர்சில்வர் பானை காணாமல் போனதற்கா இவ்வளவு கவலைப்படுகிறாய்?''

''அதில் தண்ணீரும் இருந்துச்சே!''

— எஸ். சுந்தர்.



அருள்வாக்கு

கரும்பைக் கசக்கிக் கிலேசப்படுத்துவதால்தான் கருப்பஞ்சாற்றை எடுத்துப் பானம் பண்ணுகிற இன்பம் கிடைப்பது போல, உடம்பைக் கிலேசப்படுத்துவதால் தான் உள்ளத்துக்கு ஸௌகரஸம் கிடைக்கிறது.

வியாபாரி முதலில் கையிலிருப்பதைச் செலவழித்துத்தான் பண்டங்கள் வாங்குகிறான். அப்புறம் அதை விற்று அதிகப் பொருள் சம்பாதிக்கிறான். அப்படியே உடம்பை முதலில் செலவழித்து, அப்புறம் அந்தச் செலவுக்கு மேல் பெரிய வரவு ஆத்மாவுக்கு ஸம்பாதித்துக் கொள்வதற்கே உபவாஸமிருப்பது.

சாப்பிடுகிற நாட்களிலும் பகவத் தியானம் பண்ணுங்கள். உபவாஸ நாளில் சாப்பிடாமலிருந்தும் தியானம் பண்ணிப் பாருங்கள். தனக்கே வித்தியாசம் தெரியும். அந்த லாபத்துக்காக இந்த நஷ்டம் படலாம் என்று தெரிந்து கொள்வீர்கள். நான் நிறையச் சொல்வதைவிடப் பிரத்யக்ஷமாகப் பண்ணிப் பார்த்து விட்டாலே உபவாஸத்தின் அவசியமும் பெருமையும் விளங்கி விடும்.

வயிற்றை வற்றப் போடுகிற நாட்களில் மனசுக்கு த்யானாம்ருத போஜனத்தைக் கொடுத்துக் கொண்டால் எது பெரிய இன்பம் என்று தெரியும்.

சாப்பாடு இல்லாத வாய்க்கு அதைவிட ரஸம் சொட்டுகிற அவனுடைய நாமாமிருதத்தை, லீலாமிருதத்தை ஜபமாக, பஜனையாக, ஸ்தோத்ரமாக, பாராயணமாகக் கொடுத்துக் கொள்ள வேண்டும். காதுக்கு அம்ருத போஜனமாகக் கீர்த்தனையும் ஹரிகதையும் கிடைக்கப் பண்ணணும். ஏகாதசி புராண படநம் ரொம்ப விசேஷம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



தலைவர் பதவி, கட்சியில் மாணவர் அமைப்பில் பதவி, எதுவும் எனக்குப் பொருட்டில்லை. உங்கள் கட்சியையும், உங்களைப் போன்ற கட்சி மாறிகளையும் முகத்திரையைக் கிழித்து, மக்களுக்கு இனம் காட்டுவது தான் என் வாழ்நாள் லட்சியம்.''

கிருஷ்ணமூர்த்தி மகிழ்ச்சியடைந்தான். இளைய தலைமுறை அப்படி ஒன்றும் சோடை போய் விடவில்லை என்கிற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவனுக்குத் துயரம் தரும் செய்தி, வினோதினி அவனுக்குப் ஃபோன் மூலம் சொன்ன செய்திதான்.

இரவு அவனது வீட்டுக்குப் ஃபோன் வந்தது. அரை போதையில் அவன் இருந்தான். அவள் தெளிவாகச் சொன்னாள்.

''கிருஷ்ணமூர்த்தி! நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என் நன்றி. வேலைக்கு ஆன உத்தரவு எனக்குக் கிடைத்தது. ஆனால் அதை என்னால் ஏற்க முடியாது. நான் தமிழகத்துக்கு வர ஆசைப்பட்டதும், உங்களிடம் சொன்னதும் உண்மைதான். ஆனால், அதன் அர்த்தம், உங்கள் கட்சி, கட்சிக்காரர்கள் உதவியை நான் பெற்றுக் கொள்வேன் என்பதல்ல! அப்படி நான் பெற்றுக் கொண்டால், அது உங்களை, உங்கள் கட்சியை, தத்துவத்தை நான் ஒப்புக் கொண்டதாகவே அர்த்தம். அந்தச் சமரசத்துக்கு நான் உடன்பட மாட்டேன். மற்றும் ஒரு விஷயம். எனக்குத் தமிழகத்தில் வேலை கிடைத்து விட்டது. இடம் கன்னியாகுமரியில். வேலை, பொருளாதாரத்தில் மிகவும் குறைந்த மக்களுக்கு நடுவில் பணி. அது அரசுப் பணி அல்ல.

கிருஷ்ணமூர்த்தியின் மனம் மிகவும் சோர்ந்து போயிற்று. தான் ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

(தொடரும்)



Enterprise/GS/153Tm

கமிஷன், எத்தனை கமிஷனடி?

''பிரச்னையின் தலையில் கல்லைப் போடு, அல்லது கமிஷனைப் போடு!' என்று கிண்டலாக எழுதியவர் யார் தெரியுமா?''

''யார்? ஒருவேளை ''கல்கி''யோ? அவர்தான் இப்படி தமாஷாக எழுதுவார்; தலைப்புத் தருவார்!''

''கரெக்ட்! அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்னைகளைச் சமாளிக்க முடியாமல், உடனுக்குடன் ஒரு முடிவு எடுக்க முடியாமல் சங்கடப்படும் போது மத்திய அரசும் மாநில அரசுகளும் அந்தச் சமயத்துக்குத் தப்பித்துக் கொள்ள ஒரு கமிஷனை நியமித்து விடுவார்கள்....''

''சரி, சரி, சர்க்காரியா கமிஷன், மண்டல் கமிஷன், அம்பாசங்கர் கமிஷன், பால் கமிஷன், தக்கர் கமிஷன்.... ரே கமிஷன்...''

''எக்ஸாக்ட்லி... எக்ஸாக்ட்லி... இது மாதிரி கமிஷன் பெயர்கள் உங்களுக்கு இன்னும் எத்தனை தெரியும்?''

''சட்டென்று நினைவுக்கு வரவில்லை. அவகாசம் கொடுத்தால் யோசித்துச் சொல்கிறேன்...''

''சாவகாசமாக யோசித்து நீங்களே எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அது மட்டும் போதாது. எந்த எந்தக் கமிஷன் எதெதுக்காக வைக்கப்பட்டது என்றும் எழுத வேண்டும்....''

''சரிதான்... ஆளை விடுங்க...! வாஞ்ச்சூ, கோஸ்லா, பல்வந்த்ராய் மேத்தா, அசோக் மேத்தா, என்று கமிஷன்கள் பெயர்கள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. அவங்க எதைப் பற்றி என்ன சொன்னார்கள் என்று ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....''

''ரொம்ப சரி. ஒரு கமிஷன் வைப்பதாக அறிவிக்கப்படும் போது அதன் பெயர் தெரியும். அடுத்த கமிஷன் வைக்கப்படும் போது பழைய கமிஷனை மறந்து விடுவோம். அது எதற்காக அமைக்கப்பட்டது என்பதும் மறந்து விடும். நாலைந்து வருடங்கள் கழித்து நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ எதிர்க் கட்சி உறுப்பினர் ஒரு கமிஷனின் பெயரைக் குறிப்பிட்டுக் கேள்விகள் கேட்கும் போதுதான், அமைச்சர் பரணிலிருந்து பழைய கோப்புகளை எடுத்துப் பார்த்து ஏதோ பதிலைக் கூறித் தட்டிக் கழிப்பார். அப்போதுதான் நமக்கும் நினைவு வரும்.''

''கமிஷன் போட்டு விட்டால் ஒரு பெரிய சௌகரியம் என்ன தெரியுமா? எதிர்க் கட்சி



உறுப்பினர், சங்கடமான கேள்வி ஒன்று கேட்டுவிட்டால், ''இந்தப் பிரச்னை கமிஷனின் விசாரணையிலிருந்து வருகிறது. ஆகவே, இப்போது அதைப் பற்றிப் பதில் சொல்வது சரியில்லை'' என்று கூறி அமைச்சர் தப்பித்துக் கொள்ளலாம்!''

கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டாலோ கீழ்க்கண்டவாறு கேள்வி—பதிலை எதிர்பார்க்கலாம்:

''....கமிஷனின் பரிந்துரைகள் என்ன ஆயின?''

''அரசின் கவனத்தில் இருந்து வருகின்றன.''

மெரீனா

''அவற்றை எப்போது செயல்படுத்தப் போகிறீர்கள்?''

''காலம் கனிந்து வரும் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.''

''அந்த அறிக்கையை ஏன் நாடாளுமன்றத்தில் (சட்டமன்றத்தில்) வைக்கவில்லை!''

''அதற்கான நேரம் வரும் போது நிச்சயம் வைக்கப்படும்.''

''அந்த நல்ல நேரம் எப்போது வரும் என்று அமைச்சர் கூற முடியுமா?''

''மந்திரி சபை கூடி முடிவெடுக்க வேண்டிய விஷயம் அது.''

இப்படி அறிவு பூர்வமான, ஆக்க பூர்வமான கேள்வி — பதில்களால் அன்றைய பொழுது கழிந்து விடும்!

மற்றொரு வகையான கமிஷன்கள் உண்டு. அவ்வப்போது நடைபெறும் துப்பாக்கிச் சூடு, தடியடி, கலவரங்கள், கொலை, கொள்ளை, ரயில் விபத்து, விமான விபத்து இவற்றுக்காக அமைக்கப்படும் விசாரணைக் கமிஷன்கள்!

''சுதந்திரம் கிடைத்ததிலிருந்து நம் நாட்டில் போடப்பட்டுள்ள கமிஷன்களுக்கான நம் வரிப்பண விரயம் எவ்வளவு இருக்கும் என்று உத்தேசமாகச் சொல்ல முடியுமா?''

''அடேயப்பா! அதற்கு ஒரு தனி கமிஷன் போட்டுத்தான் கண்டுபிடிக்க வேண்டும்.''

''அடடே! அது பஸ்ட் கிளாஸ் ஐடியா வாச்சே! கடந்த நாற்பது வருடங்களில் மத்திய அரசும், மாநில அரசுகளும் மொத்தம் எத்தனை கமிஷன்களை, எந்தெந்த பிரச்னைகளை ஆராயப் போட்டிருக்கின்றன, அவற்றுக்கான மொத்த செலவு என்ன, கிடங்கில் போடப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று ஒரு பட்டியல் தயாரிக்க ஒரு கமிஷன் போட்டால் என்ன?''

''எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் மாநில அரசுகளின் கமிஷன்களைப் பற்றி மத்திய அரசு ஆராய்வது எங்கள் அதிகாரத்தில் தலையிடுவதாகும். அதை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கண்டனக் குரல் எழுப்பலாம்.''

''அதனால் என்ன? அந்த ஆட்சேபணை குறித்து ஆராயவும் ஒரு கமிஷன் நியமித்து விட்டால் போகிறது!''

அடுத்த இதழில்...

ஏஷியாட் தங்கம்
எட்டும் உயரத்தில்

— உயரம் தாண்டும் சாம்பியன்
ஏன்ஜலா வின்ஸியுடன்
ஒரு சிறப்புப் பேட்டி.



''தலைவருக்கு முன்னாலே ஓர் ஆள் வழியெல்லாம் பூச்சிமருந்து அடிச்சுக்கிட்டே போறாரே, ஏன்?''

''அவர் ஆரோக்கியமான அரசியல் நடத்தப் போகிறாராம்! அதுக்காகத்தான்!''

— சம்பத்குமாரி.




''ரொம்ப வித்தியாசமான தலைவர் தான் உங்க தலைவர்!''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''கூட்டத்தில் உண்டியல் குலுக்குகிறதைக் கூட டெண்டர் விட்டிருக்காரே!''

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.





தியானமும் நல்வாழ்வும்

நாம் பிரார்த்தனை செய்தால் நம்மை பகவான் பார்வைபடும் தூரத்தில் கொண்டுவிடும் உபவாசம் தவறாது இருந்தால் பகவானுடைய வாயிலருகில் கொண்டு போய் சேர்க்கும். தான தருமங்கள் செய்தோமானால் நம்மை பகவானின் இதயத்தில் இடம் பெறச் செய்து விடும்.

—ஜப்பான் பழமொழி.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542 — இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அநுசரித்து சுமார், முறையே ரூ. 250/- அல்லது 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- அல்லது 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.

****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****

மாதக் கடைசியில் சமாளிப்பது எப்படி?

கிரிஜா பார்த்திபன்: தினமும் செலவு செய்ய இருபது ரூபாய் எடுத்தால், மூன்று ரூபாயைத் தனியே உண்டியலில் போட்டு வைத்து விட வேண்டும் என்று எனக்கும், என் கணவருக்கும் இடையே ஓர் ஒப்பந்தம். கடைசிவாரப் பிரச்னையைச் சமாளிக்க எங்களுக்குக் கைகொடுப்பது இந்தச் சேமிப்புப் பணம்தான்.

ஆதிவராகன்: ஒரு கணிசமான தொகையை, ரிசர்வ் தொகையாய் வைத்துக் கொள்வது என்னுடைய நெடுநாள் பழக்கம். மிகவும் அவசியமான, எதிர்பாராத செலவு என்றால், இதிலிருந்து எடுத்துச் செலவு செய்து கொள்வேன்.

• ரமணி பாஸ்கர்



• கிரிஜா பார்த்திபன்



லட்சுமி செந்தில்: பால் கார்டு, காய்கறி, பள்ளிக்கூட ஃபீஸ், கரண்ட் பில், மளிகை, நியூஸ் என்று அத்தனைக்கும் பட்ஜெட் போட்டு, அந்தந்தப் பணத்தை அவற்றிற்குரிய கவரில் போட்டு வைத்து விடுவோம் எங்கள் வீட்டில். இது தவிர, எதிர்பாராத் செலவுகளுக்கென்று இருநூறு ரூபாய் எடுத்துத் தனியே வைத்து விடுவதால், மாதக் கடைசி எங்களைப் பயமுறுத்துவதில்லை.

சீனிவாசன்: வேலை பார்க்கிற இடத்தில், தெரிந்தவர்களிடத்தில், செலவின் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்லி, பணம் புரட்டி விடுவேன். அடுத்த மாதம், சினிமா போன்ற செலவுகளைக் கட் பண்ணி, அத்தியாவசியச் செலவுகளிலும் சிக்கனம் பிடித்து, ஒரு மாதத்தில் முடியா விட்டால், இரண்டு மூன்று தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவேன்.

• சீனிவாசன்



• ஆதிவராகன்





லட்சுமி செந்தில் •

ரமணி பாஸ்கர்: திடீர் செலவுக்கு அக்கம்பக்கத்தில், நண்பர்களிடத்தில் கடன் வாங்கிச் சமாளித்துக் கொள்வோம். இப்படியே கடன் தொகை அதிகமாகி விட்டால், ஆபீஸில் அவர் ஏதாவது ஒரு லோன் போட்டுப் பணம் வாங்கிக் கடன்களைத் தீர்த்து விடுவார்.

கேட்டவர்: **மௌஷ்மி**

படங்கள்: **சோமு**



* நீங்கள் ரயிலில் டிக்கெட் ரிசர்வ் செய்யும் போது, ரயில்வேக்காரர்கள், 'இடம் இல்லை' என்றால், 'இடமில்லை' என்பதை ரிசர்வேஷன் விண்ணப்பத்திலேயே எழுதிக் கையெழுத்திட்டுத் தரச் சொல்லுங்கள்.

* நீங்கள் ஒரே விஷயத்தை ஒரே ஊரில் ஐந்து விலாசங்களுக்குத் தந்தி அனுப்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். (உ—ம். ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற சபாநாயகர், ரயில்வே மந்திரி, நிதி மந்திரி) ஐந்து தனித்தனித் தந்திகள் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. ஒரு தந்தியில் விஷயத்தை எழுதி, இதன் பிரதிகள் நான்கு முகவரிகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டால் போதும். இதனால் உங்களுக்குப் பணம் மிச்சம். எப்படி? ஒரு தந்திக்கு ரூ பத்து கட்டணம் எனில், ஐந்துக்கு ஐம்பது ரூபாய் ஆகிறது. ஆனால் மேற்சொன்ன முறையில் அனுப்பினால், முதல் தந்திக்கு ரூ. பத்தும், நான்கு பிரதிகளுக்குமாய் (4 X 5) ரூ. இருபதும் ஆக மொத்தம் முப்பது ரூபாய்தான் செலவு.

உங்களைத்தான் சார்...!

* சமையல் எரிவாயு கனெக்ஷன் தரப்படும் போது, அதே ஏஜென்ஸியில் ஸ்டவ் வாங்க வேண்டும் என்று விதியேதும் இல்லை. ஆனால் வாங்கும் அடுப்பு தரமானதாய் இருப்பது தான் பாதுகாப்பு. காஸ் ஏஜென்ஸிகாரர், தங்களிடம்தான் அடுப்பும் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினால், தாராளமாய், கேஸ் நிறுவனத்துக்கு நீங்கள் புகார் செய்யலாம்.

* பேட்டரி செல்கள் வாங்கும் போது ஐ.எஸ்.ஐ. முத்திரை உள்ளதா என்று பார்த்து வாங்குங்கள். ஒவ்வொரு செல்லிலும், தயாரிக்கப்பட்ட மாதம், வருடம் பொறிக்கப்பட வேண்டியது கட்டாயம். செல்லின் முழுப் பயனையும் பெற வேண்டுமானால், தயாரான நான்கு மாதத்துக்குள் வாங்குங்கள். ஆறு மாதத்துக்கு முந்தைய செல் வாங்குவதில் பிரயோஜனம் இல்லை.

நன்றி:- கன்ஸ்யூமர் பாதுகாப்பு அமைப்பு.

தகவல்: மௌலி.



பயனளிக்கும் 'பவர்கட்'

அகிலா கார்த்திகேயன்

முன்குறிப்பு: சென்னையைத் தவிர மற்ற ஊர்களில் நாள் ஒன்றுக்குப் பத்து மணி நேரமாவது பவர்கட் மக்களைப் பாடாய்ப் படுத்துக்கிறது. பவர்கட் இப்படிப் பாடாய்ப் படுத்துகிறதே என்று பல்லைக் கடிக்காமல் அதை எல்வாறெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாமென்பதைப் பார்க்கலாம்!

1. கோடை விடுமுறையில் விடேன் தொடேன் என்று வீட்டுக்கு வந்து உட்கார்ந்து கொள்ளும் விருந்தாளிகள், 'பவர் கட்'டினால் ஃபேன் போட முடியாமல் புழுங்கி, மோட்டார் ஓடாததினால் கிணற்றிலிருந்து மூச்சிரைக்கத் தண்ணீர் இழுத்து, மழுங்கி, அவதிப்பட்டு, தாங்களாகவே ஓரிரு நாட்களில் தங்கள் ஊரைப் பார்க்க ஓடிப் போகலாம்.

நீங்களும் உங்கள் ஊரின் அசாத்திய 'பவர்கட்' சாக்கைச் சாதகமாக்கிச் சென்னை, பெங்களூர் உறவினர்கள் வீட்டில் சௌகரியமாக 'டேரா' போடலாம்.

2. பக்கத்து வீட்டுப் பங்கஜம் உங்களிடம் 'ப்ரிஜ்' வாங்கினேன், வீடியோ டெக் பார்த்தேன் என்று பீற்றிக் கொண்டாளல்லவா, இப்போது உங்களுக்கு ஒரு சான்ஸ். "பங்கஜம்... பாவம் ப்ரிஜ், டெக்னு இருந்து என்ன புண்ணியம்... இப்படி பவர்கட் பண்ணித் தொலைக்கிறானே... என்ன இருந்தாலும் நமக்கெல்லாம் பானைத் தண்ணீரும், 'சினிமா தியேட்டரும்தான் சாஸ்வதம்'' என்று அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளலாம்!

3. பிடிக்காதவர்களைப் பழிவாங்கலாம்—மருமகள் சமுதாயம் மாமியாருக்கு மட்டும் தனியாகச் சமையலில் உப்பை அள்ளிப் போடலாம். ''ஏன் இப்படிக் கரிக்கிறது'' என்று கேட்டால் ''அச்சச்சோ... உப்பை அள்ளிப் போட்டுட்டேனா... சமைக்கும் போது இப்படி பவர்கட் பண்ணித் தொலைச்சுடறான்... கண்ணும் தெரிய மாட்டேங்கிறது, கடையும் தெரிய மாட்டேங்கிறது!'' என்று முதலைக் கண்ணீர் வடித்து, மாமியாரைப் பசி நேரத்தில் சரியாகப் புசிக்க

விடாமல் செய்து பழிவாங்கலாம்.

மாமியார் வர்க்கமே, நீங்களும் பழிக்குப் பழி வாங்கலாம்! இரவில் எப்போது பவர்கட் வரும் என்று காத்திருங்கள். இருட்டும் நேரத்தில் மாட்டுப்பெண் நெருப்புப் பெட்டியைத் தேடி கப்பென்று விளக்கு ஏற்றுவதற்கு முன், முந்திக் கொண்டு அவளை 'ணங்'கென்று மோதுங்கள். அல்லது உங்கள் கைத்தடியால் இடறிவிட்டுத் தொப்பென்று விழச் செய்யுங்கள். ''பார்த்து வரப்படாதோடியம்மா... கடன்காரன் கண்ட நேரத்துக்கும் கரண்ட் கட் பண்ணிடறான்... நன்னா அடி பட்டுடுத்தோ...? பாவம்!'' என்று 'பழி' தாப அலைகளை வீசலாம்.

4. ஆபீஸ் நேரத்தில் 'பவர்கட்' ஏற்பட்டால் ''சே... இந்த வெயிலில் ஃபேன் இல்லாமல் எவன் வேலை செய்வான்'' என்று உரிமையோடு சொல்லிவிட்டு, கேன்டீனில் காலத்தைப் போக்கிவிட்டு வரலாம்!


அப்படி ஆபீஸ் நேரத்தில் சப்ளை இருந்து தொலைத்துவிட்டால் ''என்ன சார், ராத்திரியெல்லாம் கரண்ட் சப்ளை இல்லாமல் சாகடிச்சுடறான். மனுஷனை, ஃபேன் இல்லாமல், புழுக்கத்தில் தூங்க விடாமல் பண்ணிடறானே!'' என்று அனுதாப அலைகளை ஆடவிட்டு ஆபீஸில் சர்வசுதந்திரமாகத் தூங்கலாம்.''

5. மின்வெட்டினால் ஏ. ஸி. இயங்காது. பிறகென்ன, கம்பெனி டைரக்டர் ஏ. ஸி. ரூமில் கிடந்து தவிப்பார். நீங்கள் கையில் ஒரு வெட்டிவேர் விசிறியுடன் உள்ளே நுழையுங்கள். அவர் 'வேண்டாம், வேண்டா'மென்றாலும் விடாப்பிடியாக அவர் பக்கத்தில் நின்று 'பவர்' வரும்வரை சாமரம் வீசுங்கள். அப்புறம் பாருங்கள், உங்கள் சமாசாரங்களில் ஏகச் சலுகைகள்தான், போங்கள்!

5 (அ). இதே விசிறி விஷயத்தை லேடி டைப்பிஸ்ட் காஞ்சனாவிடம் காண்பித்து அவளுடைய விசிறியாகி உங்கள் காதல் விஷயத்தைக் கனியாக்கலாம்.

6. மிக்ஸி, கிரைண்டர் இத்யாதிகளை மின்சாரவெட்டினால் உபயோகிக்க முடியாமல் உங்கள் சம்சாரம் பட்டு, ஆட்டுக் கல்லைக் கட்டிக் கொண்டு அவஸ்தைப் படுவதைக் கண்டு ஆனந்திக்கலாம். (உங்கள் சம்சாரம் இந்த சமாசாரங்களை உங்கள் தலையில் கட்டும் ரகமாக இல்லாத பட்சத்தில்)

7. அடாடா... ஒரு பெரிய நன்மையைச் சொல்ல மறந்து விட்டேனே 'பவர்கட்' பல டீ. வி. நிகழ்ச்சிகளிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறதே... அதுபோதாதா, போங்கள்...!



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1989



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

o கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும்பிரசுரமானதில்லைஎன்றும்உறுதிமொழி தேவை.

o அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுதமாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.

o நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

o உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

o பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலைஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

o கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

o எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

o சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

o போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

o எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

அத்தியாயம் — 6

குரலில் ஒரு கிறக்கம்!

நாடகக்காரர்கள் அனுமதி வாங்குவதற்கு அதிகம் கஷ்டப்படவில்லை.

தமிழ்முரசு யோசித்தார். பின்னர் விசாரித்தார்.

நல்ல பாரம்பரியம் உள்ள நாடகக் கம்பெனி. பங்கு பெறுபவர்கள் புகழ்பெற்ற கலைஞர்கள். போடப் போகும் நாடகங்கள், வள்ளித் திருமணம், பவளக் கொடி, சத்தியவான் சாவித்திரி, கோவலன் போன்ற 'ஒரிஜினல்' நாடகங்கள் என்று தமிழ்முரசுக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது. முதலில் கனைத்தார். பிறகு, தவத்தைக் கலைத்துப் பேசுவது போல் உடனே அனுமதி வழங்கி விட்டார்!

பளபளப்பான முழுக்கை சட்டை. தொள தொளப்பான பெல்ஸ் பேண்ட். ஷூவுக்கும், செருப்புக்கும் இடையிலான ஒன்றைக் காலில் அணிந்திருந்தான். பின்பக்க பேண்ட் பாக்கெட்டில் சிவப்புச் சீப்பு. அதை எடுத்து அடிக்கடி படியத் தலை வாரிக் கொண்டான். மைக்கை இந்தக் கைக்கும், அந்தக் கைக்கும் மாற்றி, மாற்றி ஸ்டைலாகக் கடகடவெனப் பேசிக் கொண்டே இருந்தான். அடிக்கடி கையால் தலையைக் கோதிக் கொண்டான். செல்லமாகத் தன் தொண்டையைக் கண்டிப்பது போலக் கனைத்துக் கொண்டான். கழுத்தில் செருகி இருந்த கர்ச்சீப் அப்படியே இருந்தது. கையிலிருந்த சின்னத் துண்டால் முகத்தை அடிக்கடி துடைத்துக் கொண்டான்.

அவன் சரளமான வார்த்தைகளைக் கேட்டுச் சிலர் வேலைகளை மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

என் உயிர்த் தோழன்

மழை இல்லாத காலங்களில் இது போன்ற நாடகக் குழுக்கள் ஊருக்கு வந்து நாடகம் போட்டால் சொல்லி வைத்தாற் போல் மழை பெய்யுமாம்! இது ஒரு சொல் வழக்கு.

இந்த நாடகக் குழு வளர்ந்து சிறப்புப் பெற்றுள்ளது பற்றி அனைவருக்கும் சொல்லப்பட்டது. ஆரம்பத்தில் தீவட்டிகளைச் சுற்றி வைத்துக் கொண்டு அவற்றின் ஒளியில் நடித்தது; பின், பெட்ரோமாக்ஸ் லைட்டாய் அது மாறியது; இப்போது மைக் செட், கலர் லைட் இத்தியாதி வசதிகளுடன் வளர்ந்திருப்பது....

சந்தனத்தேவன்பட்டியில் 'உற்சாகத் தூறல்கள்' விழ ஆரம்பித்தன. அரசமரத்தடி பக்கத்தில் நாடகக்காரர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. அன்று இரவு நாடகம் ஆரம்பிப்பதற்கான களை கட்ட ஆரம்பித்தது.

தடிமனான எழுத்துக்களைக் கொண்ட நாடக நோட்டீசுகளை வாரி இறைத்துக் கொண்டு ஒற்றை மாட்டு வண்டி போய்க் கொண்டிருந்தது.

தெளிவான வார்த்தைகளை உச்சரித்த படி வண்டியினுள் அமர்ந்திருந்த இளைஞன், உற்சாகத்துடன் நோட்டீசுகளை வீசிக் கொண்டிருந்தான்.

நன்றாகப் படிய வாரிய தலை. பெரிய கூலிங்கிளாஸ். உடம்பை இறுக்கிப் பிடித்த

சிலர் அவனுக்கு மோர் கொடுத்தனர். சிலர் கூழ் தந்தனர். ஒரு வீட்டில் தண்ணீர் குடித்தான். எதையும் அவன் வேண்டாம் என்று சொல்லவில்லை. வண்டியின் பக்க வாட்டில் இருந்த போஸ்டரைப் பார்த்துக் கொண்டே சின்னஞ் சிறுசுகள் கூடவே ஓடின!

ஜன்னல் வழியே சிட்டு வண்டி போவதைப் பார்த்து வேகமாக வெளியே ஓடி வந்தாள். ஓடி வந்தவளை ஒலிபெருக்கியில் வந்த வசீகரமான வார்த்தை ஜாலங்கள் சிலையாக நிற்க வைத்தன.

ஒலிபெருக்கி மறுபடியும் உழைக்க ஆரம்பித்தது.

''சிட்டி ஈஸ் எ சிட்டி!

''வில்லேஜ் ஈஸ் எ வில்லேஜ்!

''எங்க டூட்டி... இப்ப சந்தனத்தேவன் பட்டி!

''ஓ மை பீப்பிள்... ஸீ மை பீப்பிள்!

''உங்கள் நெஞ்சங்களோடு இப்போது கொஞ்சி உறவாடுவது தென்னவன் தென்...னவன்.''

தன் பெயரைப் பிளந்து உச்சரிக்கும் விதத்திலேயே ஒரு போதை ஏற்ற முயன்றான் அவன்!

''வீட்ல இருக்கிற, வேலைக்குப் போயிருக்கிற, வெளியூருக்குப் போயிருக்கிற அன்பு ஜனங்களுக்கு எங்களோட வணக்கம்! எங்க நாடகத்தைப் பற்றி நான்



சொன்னா உங்களுக்குப் புரியாது... நீங்க பார்த்தாத்தான் புரியும்... நவீன வசதிகளோட எங்க நாடகம்...

''ஹல்லோ! மைக் டெஸ்டிங்... ஒன்... டூ... திரி... ஹலோ... தென்னவன் ஸ்பீக்கிங்... எஸ் தென்...னவன் ஸ்பீக்கிங்...''

ஒலிபெருக்கி அவனுக்காக மீண்டும் உழைக்க ஆரம்பித்தது.

'கட்டான உடலுக்குப் பட்டான உடை தரித்து, சிட்டாகப் பறந்தாடிக் காண வரும் மக்களின் உள்ளத்தை வருடும் நாட்டியத் தாரகை, ஸ்த்ரீபார்ட் ரத்னகுமாரி, பல வேடங்களில் பளபளப்பாக, தளதளப்பாக, கிளுகிளுப்பாக, விருவிருப்பாக, உங்கள் இதயத்தைப் படபடப்பாக்க 'பவளக் கொடி'யில் தோன்றுகிறார்....! காணத் தவறாதீர்கள்! கண்ட பின்னும் மறுபடியும் வரத் தவறாதீர்கள்.''

சிட்டு அவன் வார்த்தைகளில் வசியமானாள். அவன் முகத்தைத் தரிசிக்க முயன்றாள். முடியவில்லை.

அவன் ராஜபார்ட் பற்றி முழங்க ஆரம்பித்தான். இப்போது குரல் பாணியை மாற்றி இருந்தான்.

''சென்ற இடமெல்லாம் வெற்றி முரசு கொட்டி வரும் கரவேக, கரவேக, கருநிலய

பாரதிராஜா

கானலோல, கர்ணா மிருதகான, ஆர் மோனிய இசை அரசு, திண்டுக்கல் தந்த 'வித்தை' துரைய்யா, வீரவசனம் பேசி, விண் அதிர, மண் அதிர, உங்கள் நெஞ்சம் அதிர, தனக்குத்தானே நிகர் என நிரூபிக்கும் நாடகம் பவளக் கொடி...! பவளக் கொடி....! பவளக் கொடி....! பவளக் கொடி!''

அவனே 'எதிரொலி எஃபெக்டில்' பேசினான்.

நாடகத்தின் இதர அம்சங்களையும் சொல்லிக் கொண்டே போனான். இறுதியில்,

''இன்று இரவு உங்கள் ஊரில் — பவளக் கொடி...! மறந்தும் இருந்து விடாதீர்கள்! இருந்தும் தூங்கி விடாதீர்கள்! ஊர்ப் பெரியவர் அய்யா தமிழ்முரசு அவர்களின் ஆசிகளோடு, அன்போடு, இன்று இரவு பவளக் கொடி — அதாவது பிரைட் பிளாக்...!'' என்று முடித்தான்.

வண்டி தெருமுனை திரும்பியது.

தென்னவன் ஆரம்பத்திலிருந்து மறுபடி தொடங்கினான். விளம்பர வாசகத்தில் அவ்வப்போது தன் கற்பனை வளத்தைக் காண்பிப்பதில் அவனுக்கு அலாதி ஆனந்தம்!

சிட்டு அவன் முகத்தைப் பார்க்க முயற்சி செய்தும் முடியாமல் போனதற்காக வருந்தினாள். ஏற்ற இறக்கமான அந்தக் குரல், செயற்கையாகக் கம்பீரத்தை வரவழைத்துக் கொண்ட அதன் தொனி ஏதோ ஒரு விதமான மயக்கத்தை அவளுள் ஏற்படுத்தியது.

தெருவோடு போன தாமரை இவளைக் கண்டு திண்ணையோரம் நின்றாள்.

''தாமரை... அந்த ஆளு பேசிக்கிட்டுப் போறதைக் கவனிச்சியா..! நல்லா பேசறாரு இல்லே!''

''இவனை விடுடி... ராத்திரி அப்பா கூட நாடகத்துக்கு வரப் போற இல்லை... அங்க வந்து பாரு... பிரமாதமா இருக்கும்!''

''ஏன் தாமரை! நாட்ல எவ்வளவோ சினிமா வந்துக்கிட்டிருக்கு... இதுல இந்த நாடகக்காரங்களுக்கு எல்லாம் இன்னும் 'மவுசு' இருக்குங்கிறே?''

''ஆயிரம் சொல்லு சிட்டு... இவங்களுக்கு ஈடு இவுங்கதான்! கண்ணு முன்னாலே வேஷம் கட்டி, ஜோரா பாட்டுப் பாடி, நடிக்கிற இவங்கள மாதிரி மத்தவங்க தேருவாங்களா! சினிமாக் காரங்க மட்டுமென்ன, இவங்களை மாதிரி இருந்து உசந்தவங்கதானே...!''

''ஆ! உனக்கெப்படி தெரியும்!''

''எல்லாம் பத்திரிகைல படிக்கறதுதான்; படிச்சவங்க சொல்லக் கேட்டதுதான்!''

தாமரை சிட்டுவுக்குப் பாதிப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருந்தாள்.

''ராஜபார்ட்... அஞ்சரை கட்டையில பாடப் போறாராம்... உடம்பு தளர்ந்துட்டாலும், குரலை எளசா வச்சிருக்காரே... சும்மாவா...!''

தாமரை தன் 'நாடக அறிவை'ப் புட்டுப் புட்டு வைத்துக் கொண்டிருந்தாள்.

''சிட்டு! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா...? இவருகிட்ட இருந்து போனவர் தான் அனுமார் பூங்காவனம்...! அனுமார் வேஷம் போட்டு 'பேமஜ்' ஆனதுனாலே அவருக்குப் பேரே அனுமார் பூங்காவனம்னு ஆயிடுச்சி! அவர்கூட ரெண்டர கட்டையிலதான் பாடுவாராம்! இவர்தான் அஞ்சரை கட்டை!''

சிட்டுவின் அறிவுக்குக் கட்டை விஷயம் கட்டுப்படவில்லை. தாமரையைக் கேட்டாள்:

''ஏன் தாமரை, இந்தக் 'கட்டை' விஷயம் எல்லாம் பாடறதுக்கு மட்டும்தானா? பேசறதுக்கும் உண்டா? தோ... ஸ்டைலா மைக் விளம்பரம் பண்ணிக்கிட்டுப் போனாரே ஒருத்தரு.. அவரு எத்தனை கட்டை?''

''அவன் தொண்டை எத்தனை கட்டையோ தெரியலே! ஆனா அவன் வாலிபக் கட்டை! என்னமோ, காலேசுல படிக்கிற புள்ளை மாதிரி இல்ல சிங்காரிச்சிக்கிட்டுப் பேசிப் போறான்..! இங்கிலீசு வேற..! ஊருக்குள்ள பகல்லதான் இவன் ஜம்பம்... ராத்திரி மேடையில பாரு... இவனை ஒரங்கட்டிடுவாங்க...!''

சிட்டுவுக்கு ஏனோ சற்று வருத்தமாக இருந்தது.

''ராஜபார்ட்டையும், ஸ்த்ரீபார்ட்டையும் அங்கே வந்து பாரு....! உனக்கென்னடி... உங்கப்பா கூட முன்னால போயி உட்கார்ந்துக்குவே... நான் பின்னால்தானே!''

''தாமரை... நானும் உன்கூட வந்துடவா..? அப்பாவுக்கு வேற அடிக்கடி வெத்திலை மடிச்சிக்குடுத்துக்கிட்டே இருக்கணும்...!''


''வேண்டாம்டி. அப்புறம் அவருகிட்ட பேச்சு வாங்கறது யாரு..? நீ அவரு கூடவே இரு... நான் நாடகம் முடிஞ்ச கையோட உன்னை வந்து பாக்கறேன்!''

தாமரை புறப்பட்டாள்.

சிட்டுவுக்கு நாடகத்தை விட விளம்பர வாசகங்கள் பேசிப் போன தென்னவன் மனத்தில் இருந்தான். அவனைப் பார்க்க முடியாதது வேறு அவளுக்கு வருத்தமாக இருந்தது. தென்னவன்... தென்னவன்... என்று அவன் அடுக்கடுக்காய்ச் சொன்ன பெயர் அவள் மனத்துக்குள் திரும்பத் திரும்ப எதிரொலித்து அவன் கூறிய மற்ற விஷயங்களை ஒதுக்கி விட்டிருந்தது.

நாடகக்காரர்களை ஆற்றங்கரையில் கிராமத்து ஜனங்கள் அதிசயத்துடன் பார்த்தனர்.

அவர்கள் குளிப்பதையும், சூரிய நமஸ்காரம் செய்வதையும் பார்த்துக் கொண்டும் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டும் இருந்தனர்.



''இங்க கும்மாயம் * எப்படி இருக்கும்?''
''நல்லா இருக்குமாம்.''
''ஏண்டா.... நாமக்காளி... * சித்தி * அடிக்கலாயில்லே?''
''ம்....!''
''இன்னைக்கி என்ன தெளிவு? * ''
''பவளக் கொடிதான்!''
''அப்ப முடிச்ச கையோட போயிடுவோம்!''

நாடகக்காரர்களின் இந்தப் பரிபாஷை ஜனங்களுக்குப் புரியவில்லை. தங்களுக்குள் சிரித்தனர்.

''போங்க..! இங்க என்ன எங்களை வேடிக்கை பாக்குறீங்க... ராத்திரிக்கு நாடகத்துக்கு வாங்க...!''

தாமரையும் அம் மக்களோடு சேர்ந்து ஓடினாள்.

இரவு தமிழ் முரசு மகளுடன் நாடகத்திற்கு வந்திருந்தார். சிட்டு நிலைகொள்ளாமல் தவித்தாள். அவள் கையில் வெற்றிலைப் பெட்டி இருந்தது. மக்கள் ஆரவாரம் அவள் காதுக்குக் கேட்கவில்லை. தென்னவன் குரலே நிறைந்திருந்தது!

காலையில் பேசிய முகத்தைப் பார்க்க முடியவில்லை. இப்போதும் அவனைக் காணவில்லை!

அவள் பார்வையில் படவில்லையே யொழிய, அவன் பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பக்கம் லீட்டுகளை அட்ஜெஸ்ட் செய்து கொண்டிருந்தான். எரியாத ஒரு விளக்கை உடனே எரிய வைத்தான். 'மைக்'கைக் கரெக்ட் செய்தான். உள்ளே யாரோ கூப்பிட, சட்டென்று போய் மேல் படுதாவைச் சரிசெய்தான்.

மைக்கில் அவன் பேசினான். அவளுக்கு அவன் எங்கிருந்து பேசுகிறான் என்று தெரியவில்லை. பேச்சு மட்டும் கேட்டது:

''ஸைலினிங்ப்ளீஸ்! வீ ஆர் இன் பாரீஸ்...!

''எஸ்! சந்தனத்தேவன்பட்டியில இருக்குறது பாரீஸ்ல இருக்குற மாதிரி இருக்கு!''


சொல்லி விட்டு ரசித்துச் சிரித்தான்.

''வந்து, அமர்ந்து, இருந்து — விருந்து போல் நாடகத்தைப் பார்க்கவிருக்கும் மக்களே...! வணக்கம்!

''உங்கள் கூட்டம் அலைகடல்! இந் நாடகம் உங்களுக்குப் பாற்கடல்! இப்போ நிறைந்து விட்டது திடல்! உங்களுக்கு எங்கள் நன்றி மடல்!

''இன்னும் கொஞ்ச நேரத்தில் பவளக் கொடி! உங்கள் ஊரில் எங்கள் முதல் வெற்றிக் கொடி!

''இன்னும் சற்று நேரத்தில் பவளக் கொடி! ஐந்தரை கட்டையில் அதிரடி நடத்தி, உங்களைப் பாட்டுக் கடலில் சங்கமிக்கச் செய்யும் ராஜபார்ட்டின்



''எங்க 'செக்ஷன் ஆபீசர்' ரொம்ப நல்லவர்; எதை நீட்டினாலும் உடனே கையெழுத்துப் போட்டுடுவார்...!''

''எங்க ஆபீசர் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்'... பணத்தை நீட்டினாத்தான் போடுவார்!''

— சீர்காழி ஸ்ரீராம்.

பவளக் கொடி!!''

குரலில் அவன் கொடுத்த ஏற்ற இறக்கத்தில் சிட்டுவின் உடலும் இணைந்து மெல்ல அசைந்தது.

உள்ளே 'வித்தை' துரைய்யா மதம் பிடித்தவர் போலிருந்தார். அந்த அறுபது வயது தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

''அவனைக் கூப்பிடு...!'' வேஷம் போட்டிருந்தவர், கத்தினார்.

பக்கத்திலிருந்த ஸ்த்ரீபார்ட், இதர அயிட்டங்கள் எல்லாம் அவரை அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன!

தென்னவன் ஓடி வந்து நின்றான்.

''உன்கிட்ட என்னடாச் சொன்னேன்? நான் ஐந்தரைக் கட்டையில பாடுவேன்னு சொன்னேனா? நாலு கட்டைக்கே நான் ஜாக்கிரதையா இருக்க வேண்டி இருக்கு! வெளியூர்க்காரன் எல்லாம் வந்து உட்கார்ந்திருக்கான். ஐந்தரைக்கு நான் எங்கடா போவேன்? அதிகப் பிரசங்கி! யார்றா உன்னை இதெல்லாம் சொல்லச் சொன்னது?''

''அய்யா! உங்கசரீரக்கும்சாரீரத்துக்கும் ஐந்தரைக் கட்டை சாதாரணம். பாடுங்கய்யா... உங்க 'லெவல்ல'யே பாடுங்க... இங்க 'செக்' பண்ற அளவுக்கு எவன் இருக்கான்?''

தென்னவனின் எதிர்ப் பேச்சு அவருக்கு அகரக் கோபத்தை உண்டாக்கியது!

சுற்றி இருந்தவர்களைப் பயம் பீடிக்க ஆரம்பித்தது. ராஜபார்ட்டைச் சமாதானப் படுத்த முயன்றனர். நடக்கவில்லை.

''கட்டையில போறவன்... இவன் யாரு... ஐந்தரைக் கட்டைன்னு சொல்றதுக்கு!''

தம் சகாக்களைப் பார்த்துக் கத்த ஆரம்பித்தார்.

வெளியே கூட்டத்தினர் சத்தம் போட ஆரம்பித்தனர். ''பவளக் கொடியை... வரச் சொல்லு!'' அவர்கள் ஆர்வத்திலும் வேகத்திலும் இருந்தனர்.

தமிழ் முரசுவுக்கு, 'உள்ளே என்ன நடக்கிறது? ஏன் இன்னும் நாடகம் ஆரம்பிக்கவில்லை' என்று யோசனை வந்தது.


சிட்டுவோ, நாடகம், மக்கள், அதிகரித்து வந்த அவர்கள் கூச்சல் முதலிய எல்லாவற்றையும் மறந்து 'தென்னவன் என்ன ஆனான்? அவனை எப்போது பார்ப்போம்? பார்த்தாலும் எவ்வாறு அடையாளம் புரிந்து கொள்வோம்?' என்ற கவலை கலந்த ஆவலுடன் விழிகளைச் சுழற்றித் தேட ஆரம்பித்தாள்!

(தொடரும்)

---

* கும்மாயம் — சாப்பாடு
* நாமக்காளி — பவுன்
* சித்தி — சாராயம்
* தெளிவு — நாடகம்

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை



* வாடகை பாக்கி...



* குடும்பத்தினர் பொரிக...

* அ. ஜமால் மொய்தீன், செங்குன்றம்.

? 'தமது குடும்பத்தினரின் எந்தவித சிபாரிசும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது' என அரசுத் துறைகளுக்கு பாக் பிரதமர் பேநஸீர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளாரே...?

! அட, அட, அட! இதை இங்கேயே நம் ஊரிலேயே சில காலம் முன்பு கேட்ட நினைவு இருக்கிறதே? இங்கே நடந்த நாடகம் அங்கேயும் நடக்காமலிருந்தால் சரி.

* வெ. முத்துக்குமார், சிறுமுகை புதூர்.

? 'கலைஞர், எனது அரசியல் குருவான ராஜாஜியுடன் ஒப்பிடத் தகுந்தவர்' என சட்டமன்றப்பொன் விழாவில் ம.பொ.சி. கூறியிருப்பது பற்றி...?

! ராஜாஜியை ராமர் என்றும் தம்மை அனுமன் என்றும் முன்பு சொன்ன ம.பொ.சி., இன்று இப்படி சொல்லியிருந்தால் அனுமன் என்று தம்மை வர்ணித்துக் கொள்ளும் தகுதியை அவர் இழக்கிறார்.

* பாக்யமுத்து, திருச்சி — 20.

? கே. கே., எஸ்.எஸ்.ஆர்., திருநாவுக்கரசு மந்திரிகளாவார்களாமே?

! எங்கே மத்திய அரசிலா? நடக்கும், நடக்கும்! முறை தவறி, மரபு தவறி, தகுதி தவறி, பொது அறிவு தவறி, பகுத்தறிவு தவறிக் குழந்தைவேலுவுக்குப் பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழு தலைமைப் பதவி தரப்பட்டிருப்பதைப் பார்த்தால் இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்!

நீங்கள்

கேட்டவை

— தராசு



* 'குருவுடன் ஒப்பிட...'

* ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? ஊழல் புகாருக்கு உள்ளாகியுள்ள பலராம் ஜாக்கர், 'பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரத் தயாரா?' என்று எதிர்க் கட்சிகளுக்குச் சவால் விடுகிறாரே?

! அது மட்டுமா? நாங்கள் தவறு செய்திருந்தால் தூக்கிலிடப்பட வேண்டும்' என்றும் தான் பலராம் ஜாக்கர் கூறுகிறார்! தவறுகள் நடந்திருப்பதை உணர்ந்து, ஒப்புக் கொள்கிறவர்களுக்கு அல்லவோ கவலை? தவறுகள் நடந்திருப்பதையே ஒப்புக் கொள்ளாதவர்கள், எந்தத் தண்டனையை அனுபவிக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக் கொண்டால்தான் என்ன? அவருடைய சவாலுக்கும் அர்த்தமே இல்லை. ஆளும் கட்சியின் மெஜாரிடி பலம் யாருக்குத்தான் தெரியாது!

* எஸ். ராஜா, சென்னை — 23.

? சென்னை துரித ரயில் திட்டத்துக்குத் தமிழக அரசு உதவி செய்யும் என்று அறிவித்த பின்னும் மத்திய அரசு மௌனம் சாதிப்பதன் காரணம் என்ன?

! தமிழக முதல்வரின் அறிவிப்பு தர்மசங்கடமான நிலையை உருவாக்கியிருக்கும், மத்திய அரசுக்கு. தட்டிக் கழிக்கவும் முடியாமல் நிறைவேற்றி வைக்கவும் மனமில்லாமல் திண்டாடுகிறதோ என்னமோ!

* மேஜர்தாசன், ஈரோடு.

? எம்.ஜி.ஆர். தபால் தலை இன்னும் வெளிவரவில்லையே, ஏன்?

! இப்போதுதான் ஜெயலலிதா கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்கத் தீர்மானித்து விட்டதே. இனி தாமதமின்றி வந்து விடும். தேர்தல் வேறு வருவதால் அமர்க்களமாக விழா எடுத்து ஜமாய்த்து விடுவார்கள்!

* ஏ. ஜஹ்பர் காதர், சென்னை. *

? அறிவு ஜீவி என்று போற்றப்படும் கமலஹாசன் போலீஸ் அதிகாரியின் வேஷத்தை இவ்வளவு கேவலமாக எடுத்திருக்கிறாரே?

! கிண்டல் என்று வந்து விட்டால் அதில் அரசியல்வாதியோ, டாக்டரோ, போலீஸ் அதிகாரியோ, பத்திரிகை ஆசிரியரோ யாரோ ஒருவர் சிக்கிக் கொள்ளத்தான் வேண்டும். நகைச்சுவை உணர்வோடு இதை ஏற்கத் தெரியாவிட்டால் அவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டியதுதான். மேலும் கமல், இந்தப் படத்தின் தொடக்கக் காட்சிகளில் தாமே போலீஸ் அதிகாரியாக வந்து போலீஸின் கௌரவத்தை உச்சாணிக்கு உயர்த்த உயிரைக் கொடுத்து நடித்

-ராஜீவின் தேர்தல் ஸ்டண்டா?

திருக்கிறாரே. அதைக் கவனிக்கவில்லையா, நீங்கள்?

* அ. நவ்சாத், மொரப்பூர்.

? ஹெக்டேவிற்கு வெளிநாட்டு பாங்கில் நூற்று ஐம்பது கோடி இருப்பதாக சுப்பிரமணிய சுவாமி குற்றம் சுமத்தியிருக்கிறாரே?

! அப்படியா சொன்னார்! ஜனதாவுக்குக் கிடைத்த ராஜ்நாராயணே ஒரு படி மேல் என்று சொல்ல வைக்கிறாரே!

* ஆர். முரளி, ஒசூர்.

? 'விகடனைத் தவிர மற்றவை பூச்சுற்றிப் பத்திரிகைகள்' என்று முத்தாரம் சாடியுள்ளதே?

! அப்படியா? இப்படியும் ஒரு பூச்சுற்றல் வேலை போலும்!

* ஏ. ஹரிதாஸ், அச்சம்பாளையம்.

? ராஜீவ் காந்தி தற்போது பஞ்சாயத்துக்களில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கி விட்டாரே?

! புதிய 'பஞ்சாயத்து அரசுச் சட்டம்', ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டது போல் அத்தனை மோசமானதாக உருவாகவில்லை என்றாலும் தேவையற்றது. உள்ளாட்சி நிறுவனங்கள் திறம்பட இயங்க — இயங்கச் செய்ய — இப்போது உள்ள சட்டங்களே போதுமானவை. மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சியில் இருப்போர் மனம் வைக்க வேண்டும், அவ்வளவுதான். இதைச் செய்யாமல், மத்திய அரசு மேலும் அதிகாரங்களைக் கைப்பற்றுவது, தேர்தல் நோக்கிலும் எதேச்சாதிகாரப் போக்கிலும்தான்!

* மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

? வீட்டுக்கு ஒருவருக்கு வேலையாமே? இது ராஜீவின் தேர்தல் ஸ்டண்டா? அல்லது உண்மையில் மக்கள் மீது அன்பா?

! 'ஏற்கெனவே அமல்படுத்திய IRDP போன்ற பல திட்டங்கள் சரியான பலனளிக்கவில்லை, அதனால்தான் ஜவாஹர் பெயரால் புதிய திட்டம்' என்று மத்திய மந்திரியே அறிவித்திருக்கிறார். ஆக, சரியான பலனளிக்காத திட்டங்களில் மக்களின் கோடிக்கணக்கான வரிப்பணம் பாழடிக்கப்பட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறார். புதிய திட்டமும் மக்களை ஏமாற்றிக் கட்சிக்கு வோட்டு அறுவடை செய்யவே! வரிப்பணம் விரயமாகும். பலன் அற்ப சொற்பமாகவே இருக்கும். வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவது இப்படி பணத்தை வாரி விடுவதால் நடக்காது. அதற்குப் பொருளாதார நோக்குடன் கூடிய சீரான தொழில் துறை திட்டங்கள் தேவை.

* ப. இராம் முருகன், சிவகங்கை.

? அ.இ.அ.தி.மு.க. வின் புதிய து. பொ. செ. பற்றி...?

! முதலில் லட்ச ரூபாய் வாடகை பாக்கியைக் கட்டட்டும்! அது மக்களின் பணம் என்பதை உணரட்டும்!

* பழ. நாகப்பன், சென்னை — 41.

? அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் என்கிறார்களே அதில் உமக்கு நம்பிக்கை உண்டா?

! ஓ! உதாரணமாக, போஃபர்ஸ் பேரம் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தாக வேண்டும் என்று சட்டம் இருப்பது ராஜீவ் அரசுக்குத் துரதிர்ஷ்டம்; ஆனால் அதை இத்தனை நாட்களுக்குள் சமர்ப்பித்தாக வேண்டும் என்று வரையறை செய்யப்படாதது ராஜீவின் அதிர்ஷ்டம்!

* மாபு தவறி....








* போலிஸைக் கேவலமாக....

* ராஜ்நாராயணை மேல்.....


* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஏ. ஜஹ்பர் காதர்,
41, முடிச்சூர் ரோடு,
சென்னை — 600 045.

டி.வியில் மார்ச் 25 வருமா?



மிஷினில் பசும்புல் வளருமா...?



** தமிழக மக்கள் தினம் தினம் டி.வி.யை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! பஞ்சாயத்து ராஜ்யப் பிரசாரத்தையும் பொறுத்துக் கொண்டு, 'மார்ச் 25 காட்டப்படுமா?' என்று விழி பிதுங்கக் காத்திருக்கிறார்கள்!

ஆனால் அது ஒன்றும் நடக்கப் போவதில்லை! காரணம், டிவி நிலையத்தினர் மார்ச் 25 நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கவேயில்லை! இத்தனைக்கும் மூன்று டி.வி. ஒளிப்பதிவாளர்கள் அன்று கோட்டைக்குச் சென்றிருந்தார்கள். பட்ஜெட் தாக்கலான பிறகு தலைவர்களையும், பொது மக்களையும், எம்.எல்.ஏக்களையும் சந்தித்து அபிப்பிராயம் கேட்கலாம் என்று இருந்து விட்டார்கள். கலாட்டா ஆரம்பமாகி ஐந்து நிமிஷங்களில் முடிந்து விட்டது. அதன் பிறகுதான் வெளியே காத்திருந்த இவர்கள், உள்ளே போக முயன்றிருக்கிறார்கள்! இதற்குள் உள்ளிருந்து தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள்! வேறு ஒரு வழியாகச் சட்டமன்றத்திலிருந்து வெளியேறிக் காரில் பறந்து விட்டார் ஜெயலலிதா! டிவி காமிரா, அதையும் படம் பிடிக்கவில்லை!

நிலைமை இப்படி இருக்க, சட்டசபை அமளி, தூர்தர்ஷனில் எப்படி வரும்? வேண்டுமானால் ஒன்று செய்யலாம். திருவாரூர் தேரைப் படம் பிடிக்காமல் கோட்டை விட்ட பிறகு, தமிழக அரசின் திரைப்படப் பிரிவில் கேட்டு வாங்கி ஒளிபரப்பியது போல் செய்யலாம்! ஆனால் தமிழக அரசின் திரைப்படப் பிரிவு, தேர் விஷயத்தில் ஒத்துழைத்தது போல், மார்ச் 25 விஷயத்தில் ஒத்துழைக்குமா என்ன?

** பலராம் ஜாக்கர், பசும்புல் மிஷின் விவகாரத்தில் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறார் அல்லவா? 'அது என்ன பசும்புல் மிஷின்?' இது பற்றி விவசாயப் பொறியியல் நிபுணர் ஒருவரை சந்தித்த போது சொன்னார்:

''நம் ஊரில் கல்யாணங்களில் நவதானியங்களைப் பாலிகை தெளித்து முளைக்க விடுவார்களே தெரியுமல்லவா? நவராத்திரியின் போது கொலுப்படிக்கு முன், தரையில் மணல் பரப்பிக் கொத்துமல்லி விதையைத் தூவி, அது முளைவிட, பசுமை படரச் செய்வதும் உண்டு. கிட்டத்தட்ட அதே அடிப்படைதான். செவ்வக வடிவத் தகரப் பலகைகளில் மணலைப் போட்டு, பார்லி விதைகளைத் தூவி விடுவார்கள். எல்லாப் பலகைகளையும் மெஷினில் பொருத்தி விடுவார்கள். மின் இணைப்பு தந்ததும் மிஷின், தாவர வளர்ச்சிக்கு ஏற்ற தட்ப வெப்ப நிலையைச் சீராக வைத்திருக்கும். ஒரு வாரத்துக்குப் பிறகு, மிஷின் ஏகப்பட்ட மின்சாரத்தை விழுங்கிய பின் பார்த்தால், செடி ஓர் அடி உயரம் வளர்ந்திருக்கும். இந்தியச் சூழ்நிலைக்கு இது தேவையற்றது. ஐரோப்பிய நாடுகளில் கடும் குளிர் காலத்தில் எங்கும் வெண்பனி படர்ந்திருக்கும். புல் பூண்டு ஏதும் வளராது. அங்கே இந்த மிஷின் தேவைதான். இங்கு எதற்கு?''

எதற்கா? பிராடியும் அவர் கூட்டாளிகளும் கொள்ளையடிக்கத்தான்! இது கூடவா தெரியாது!

— தில்லப்பா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



எனக்கு பொன் முட்டை வேண்டாம்

என்னுடைய கோழிகளுக்கு பாதுகாப்புதான் வேண்டும்

பொன் முட்டைகளை ஒரேயடியாகப் பெற வேண்டுமென்ற ஒரு பேராசைக்காரர் தன்னுடைய கோழியை அறுத்துப் பார்த்தாராம்! ஐயோ பாவம்!! ஆனால் எனக்கு என்னுடைய கோழிகள் ஆயுளோடு வாழ வேண்டும். எனக்கு தினமும் முட்டைகள் கிடைக்க வேண்டும்.

உங்களுக்கு தெரியுமா! கோழிகளைக்கூட இன்ஷூர் செய்யலாம்! ஆம், ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனி கோழிகளைக்கூட இன்ஷூர் செய்கிறது. இன்ஷூர் செய்வது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் இல்லை. கட்டவேண்டிய பிரீமியம் மிகவும் சிறு தொகைதான். ஒரு கோழி குஞ்சவிற்கு ரூ 1.20 தான் பிரீமியம்.

கோழி மட்டும் அல்ல நம் விவசாயத் தோழர்கள் தங்களுடைய பசு, எருமை, செம்மறிஆடு, வெள்ளாடு, முதலான மற்ற கால்நடை செல்வங்களையும் ஏன் இன்ஷூர் செய்துகொள்ளக் கூடாது. எனக்கு நிம்மதியாக கவலையில்லாமல் தூங்க வேண்டும். இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தால் நம்முடைய கால்நடை செல்வங்கள் நோயினாலோ, அல்லது எதிர்பாராத விபத்து, தீ, மற்றும் இயற்கை சீற்றங்களினால் இறந்து விட்டால் ஏற்படும் இழப்புக்கு ஈடு செய்து கொடுக்கப்படுகிறது. இவ்வளவு வசதிகள் இருக்கும்போது நாம் ஏன் இன்ஷூர் செய்து பயனடையக் கூடாது.

விவரங்களுக்கு அருகாமையில் உள்ள ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனியின் கிளை/மண்டல அலுவலகத்தை அணுகவும்.



இன்ஷூரன்ஸ்	ஆண்டு பிரீமியம் தொகை	
எருமை/பசு	ஐ.ஆர்.டி.பி 2 ரூ. 25 பைசா	(மற்றவை) 4.00 ரூ.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ்	நபருக்கு 12 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 15,000 ரூ.
கிராமிய விபத்து இன்ஷூரன்ஸ்	நபருக்கு 5 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 6,000 ரூ.
விவசாய பம்பு செட்		
i) மின் சக்தியால் இயங்குவது	50 முதல் 190 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொறுத்து)	
ii) டீசலினால் இயங்குவது	70 முதல் 230 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொறுத்து)	
முட்டை இடும் கோழி	ஐ.ஆர்.டி.பி. ஒரு குஞ்சிற்கு 80 பைசா (1 நாள் முதல் 72 வாரம் வரை)	(மற்றவை) 1.20 முதல் 1.50 ரூ. வரை (வயதுக்குத் தக்கவாறு)
பிராய்லர் குஞ்சு	ஒரு குஞ்சிற்கு 25 பைசா (1 நாள் முதல் 8 வாரம் வரை)	

தி ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(இந்திய பொது இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனின் துணை நிறுவனம்)
ஓரியண்டல் ஹவுஸ், ஏ-25/27, ஆஸப் அலி ரோடு, புதுதில்லி-110 002.

Advtg Integrated/OIC-Tamil/7789

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

